விலை ரூபா 20 | பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 30 | கதிர் 189 | வள்ளுவர் ஆண்டு 2046 | வைகாசி 21, வியாழக்கிழமை 04.06.2015

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
தெளிவான வானிலை

## ரயில் மோதி சிறுவன் காயம்

தென்மராட்சி, ஜூன் 4
கொழும்பிலிருந்து வந்த ரயில் மோதி 17 வயது சிறுவன் படு காயமடைந்தார். சம்பவம் நேற்று புதன்கிழமை பி.ப. 2.50 மணிக்கு மிருசுவில் உசன் சந்தி ரயில் கடவையில் இடம்பெற்றது.
ரயில்வே கடவையில் பக்.24

## மேலும் 45 பேரினது விளக்கமறியல் நீடிப்பு

***யாழ். நீதிமன்ற வளாகம் தாக்கப்பட்ட வழக்குகளில்***

யாழ்ப்பாணம், ஜூன் 4
கடந்த மாதம் 20ஆம் திகதி யாழ்ப் பாணத்தில் இடம்பெற்ற நீதிமன் றத் தொகுதி மீதான தாக்குதலு டன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட மேலும் 45 சந்தேக நபர் களை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் மன்று பக்.24

# இராணுவத்தினரை அகற்றும்படி கூற விக்கி ஒன்றும் ஜனாதிபதி இல்லை

### இப்படிச் சீறிச் சினக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா

கொழும்பு, ஜூன் 04
வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேறு மாறு கூறுவதற்கு விக்னேஸ்வரன் ஒன்றும், ஜனா திபதி இல்லை. அவருக்கு அந்த அதிகாரங் களும் இல்லை.
இவ்வாறு சீறிச் சினந்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா.
"வடக்கில் மக்களை மீண்டும் தூண்டி விடும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்ற நிலை யில் அங்கிருந்து இராணுவத்தை அகற்றக் கூடாது" என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.
வடக்கில் உள்ள இராணுவத்தினரைக் குறைக்க வேண்டும் என்று அண்மையில் வடக்கு முதல மைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கருத்து பக்.24



# நீதிமன்றுக்கு ஏற்பட்ட சேதம் ரூ.10 லட்சம்

### மதிப்பீட்டு அறிக்கையை நேற்று மன்றில் சமர்ப்பித்தது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 4
யாழ். நீதிமன்ற வளாகம் தாக்கப்பட்டதில் 10 லட்சம் ரூபா பெறு மதியான சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்று பொலிஸார் அறிக் கையிட்டுள்ளனர். நேற்று நீதிமன்றத்தில் சேதமதிப்பீட்டை அவர்கள் தெரிவித்தனர்.
புங்குடுதீவு மாணவியின் கோரமான கொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நீதியை விரைவாக நிலைநாட்ட வலியுறுத்தியும் மே 20ஆம் திகதி யாழ். நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது யாழ். நீதிமன்ற வளாகம் தாக்கப்பட்டது. கட்டடத் தொகு தியின் கண்ணாடிகள் கற்கள் எறிந்து நொருக்கப்பட்டன. மின் விளக்குகள் உள்ளிட்ட பொருள்களும் சேதமாக்கப்பட்டன.
வழக்கு விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பக்.23

## புதிய தமிழ் கூட்டணி கொழும்பில் உதயம்

**வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் 15 லட்சம் தமிழர்களை ஒன்றிணைக்கும் நோக்கத்துடன்**



கொழும்பு, ஜூன் 4
வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற 15 இலட்சம் தமிழ் மக்களையும் ஒன்றிணைக்கும் நோக்குடன், 3 தமிழ்க் கட்சிகள் இணைந்து புதிய அரசியல் கூட்டணி ஒன்றைத் தொடங்கியுள்ளன. 'தமிழ் முற்போக்குக் கூட்டணி' என அதற்குப் பெயரிடப்பட்டுள்ளது.
ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் இதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள் ளார். கூட்டணி தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.
மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, அமைச்சர் பழனி திகாம்பரம் தலைமையி லான தொழிலாளர் தேசிய முன்னணி, இராஜாங்க அமைச் சர் வி.ராதாகிருஷ்ணன் தலைமையிலான பக்.24

## யாழ். நீதிமன்றைச் சுற்றி தொடர்கிறது பாதுகாப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 4
யாழ்ப்பாண நீதிமன்ற வளா கத்தைச் சுற்றி பொலிஸ் மற்றும் அதிரடிப் படையினரின் தீவிர பாதுகாப்பு தொடர்ந்தும் இருந்து வருகிறது.
யாழ். நீதிமன்றத் தொகுதி மீதான தாக்குதல் மற்றும் நகரில் பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளை வித்த குற்றங்கள் பக்.24

## நாடாளுமன்றை கலைப்பதற்கு சபாநாயகர் நேற்று பரிந்துரை

கொழும்பு, ஜூன் 4
நாடாளுமன்றம் விரைவில் கலைக்கப்பட வேண் டும் என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ பரிந்து ரைத்துள்ளார்.
ஆளும் தரப்பு மற்றும் எதிர்த் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வலியுறுத்தலைத் தொடர்ந்து சபாநாயகர் இந்தப் பரிந்துரையை பக்.24

## வாள்வெட்டில் துண்டானது கை

பெட்டிக்குள் எடுத்து வந்த அதனை பொருத்த மருத்துவர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
வீதியால் சென்றுகொண்டிருந்த இளைஞன் மீது திடீரென ஒரு கும்பல் பாய்ந்து வாளால் வெட்டியதில் இளைஞனின் ஒரு கை துண்டாகி எகிறிப் பறந்தது.
துண்டாகி நிலத்தில் விழுந்த கையை ஒரு பெட்டிக்குள் வைத்துக் கொண்டு வைத்தியசாலைக்கு விரைந்தனர். கையைப் பக்.24

# 3 வெளி உறுப்பினர் நியமனம் அரசமைப்பு சபையில் தாமதம்

### அவர்களின் சம்மதக் கடிதத்தைப் பெற்ற பின்பே நாடாளுமன்றில் அங்கீகாரம் கோருவதென கட்சித் தலைவர்கள் முடிவு

கொழும்பு, ஜூன் 4
19ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் மீண்டும் கொண்டு வரப்பட்ட அரச மைப்புச் சபைக்கான வெளியக உறுப்பினர்களை நியமிப்பது தாம தமடைந்துள்ளது.
இந்த வெளியக உறுப்பினர்களின் நியமனத்துக்கான அங்கீகாரத் தைப் பெறும் நோக்குடன் நேற்று நாடாளுமன்றம் விசேடமாகக் கூட் டப்பட்டது. எனினும் குறித்த விட யத்தை நிறைவு பக்.24

## பருத்தித்துறையில் நேற்று மக்கள் அமைதிப் பேரணி

புங்குடுதீவு மாணவி கொலையைக் கண்டித்து

வடமராட்சி, ஜூன் 4
வக்கிரமான கொலையாளிகளால் புங்குடுதீவு மாணவி கோரமாகக் கொல்லப்பட்டமையையும் கடந்த காலங்களில் வடமராட்சிப் பிரதேசத் தில் இடம்பெற்ற வன்புணர்வுகள், கடத்தல், கொலைச் சம்பவங்கள் உள்ளிட்ட சமூகச் சீர்கேடுகளைக் கண்டித்தும் பருத்தித்துறை நகரில் நேற்றுக் காலை அமைதிப் பேரணி நடைபெற்றது.
காலை 9.30 மணியளவில் நகரில் உள்ள மஹாத்மா காந்தி சிலையடி யில் இருந்து பேரணி ஆரம்பமா னது. பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சபா ரவீந்திரன் பக்.24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய பிரச்சினையை தீர்ப்பதற்குக் கைநூல்

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஜூன் 4
பல்வேறு மாவட்டங்களில் உள்ள நூற்றுக் கணக்கான இந்து ஆலயங்கள் நிர்வாக ரீதியாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாத நிலையில் பொலிஸ் நிலையங்களையும் நீதிமன்றங்களையும் நாடுகின்றன. அத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடன் கைநூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதனை அனைத்து ஆலயங்களும் பெற்று பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற வேண்டும் என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கேட்டுள்ளது.

'இந்து சமய ஆலயங்களின் பரிபாலனத்துக்கான வழிகாட்டிக் கைநூல்' எனும் தலைப்பினாலான அந்தக் கைநூல், யாப்பொன்றின் மூலம் ஆலயம் நிர்வகிக்கப்படுதல், ஆலய நிர்வாகத்துக்குரிய அடிப்படைத் தகைமைகள், பூசகருக்கான தகைமைகள், கடமைகள், ஆலயத் தொண்டர்கள் மற்றும் சிப்பந்திகளுக்குரிய கடப்பாடுகள் விரிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளன.

இலங்கையில் இந்து ஆலயங்களில் 6 ஆயிரம் ஆலயங்கள் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுக்கு அரசு ரீதியான அனுசரணையைத் திணைக்களம் வழங்குகிறது. திணைக்களத்தில் பதிவு செய்யப்படாது சுமார் 2 ஆயிரம் ஆலயங்கள் உள்ளன. அவை தனிக்குடும்பத்தினரால் அல்லது பரம்பரையினரால் நிர்வகிக்கப்படுகின்றன.

அதுமாத்திரமன்றி பொதுமக்கள் நிதியைக் கொண்டு நிர்வகிக்கப்படும் அனைத்து ஆலயங்களும் நிதியைக் கையாள்வதில் வெளிப்படைத் தன்மையைப் பேண வேண்டும். நிதி கையாள்வது தொடர்பான பதிவுப் புத்தகங்கள் பற்றிய விபரங்களும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. ஆலயத்துக்குரிய அசையும் அசையாச் சொத்துக்கள் தொடர்பான விவரங்கள் அனைத்தும் உரியவாறு பதியப்பட்டு பதிவேடுகள் பேணப்பட வேண்டும். புதிய நிர்வாகங்கள் அமைக்கப்படும் போது அவர்களுக்கு அது பற்றித் தெளிவு படுத்தப்பட வேண்டும்.

ஆலயங்கள் பௌதீக ரீதியான வளங்களை அதிகரித்துக் கொள்ளும் அதேவேளை வழிபட வரும் பக்தர்கள் மற்றும் சூழவுள்ள சமூகத்தின் மேம்பாட்டுக்கு சமூக ரீதியான பணிகளை ஆற்ற வேண்டும். ஒவ்வொரு ஆலயமும் அறநெறிப் பாடசாலைகளைக் கட்டாயம் நடத்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். ஆலயச் செயற்பாடுகளில் இளைஞர்களை உள்ளீர்த்துக் கொள்ளல் வேண்டும்.

ஆலய பரிபாலன சபையினர் தமக்கென ஒரு யாப்பு முறைமையைக் கொண்டு அதன் விதிமுறைகளுக்கு ஏற்ப ஆலயங்களை நிர்வகிக்க வேண்டும். பரிபாலன சபையினர் ஆசார சீலர்களாக, தீட்சை பெற்றவர்களாக, பாரபட்சமற்ற தூர நோக்கு உடையவர்களாகச் செயற்பட வேண்டும். ஆலயங்கள் பக்தர்களின் ஆன்மீக மேம்பாட்டை மட்டுமே நோக்காகக் கொண்டு இயங்க வேண்டுமே தவிர வியாபார நோக்கிலான லாபத்தைக் கொண்டிருத்தல் கூடாது. ஆலய பரிபாலனத்தின் முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் பரிபாலன சபையினர் பூசகர்கள் வழிபடுவோர் ஆகிய முத்தரப்பினரும் ஒரு மனதோடு செயற்படுதல் வேண்டும்.

பிரச்சினைகளைத் தீர்க்கவெனத் தயாரிக்கப்பட்ட அந்தக் கைநூலை ஒவ்வொரு ஆலயத்தினரும் பெற்றுக்கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். இலவசமாக வழங்கப்படும் அந்தக் கைநூலை அனைவரும் பெற்றுப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.– என்று திணைக்களம் மேலும் கேட்டுள்ளது. (ற-4)



நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் விழாவில் பக்தர்கள் பொங்கி மடைபரவி வழிபாட்டில் ஈடுபட்டனர். (ற-17)

# அச்சுவேலி பஸ் நிலைய புனரமைப்பு விரைவில்

## வலி. கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4
அச்சுவேலி பஸ் நிலையம் விரைவில் புனர்நிர்மாணம் செய்யப்படும் என்று வலி. கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் கே.துரைசிங்கம் தெரிவித்தார்.

இந்த பஸ் நிலையத்தில் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பயணிகள் சிரமப்பட்டு வருகின்றனர். அதனால் இந்தப் பஸ் நிலைய சுற்றாடல் மழை வெள்ளம் தேங்கி நிற்காதவகையில் புனர்நிர்மாணம் செய்யப்படும். – என்றும் அவர் தெரிவித்தார்.

அதனைவிட பயணிகளின் வசதி கருதி பஸ்தரிப்பு நிலையப் பகுதியில் மலசலகூடம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த புனர்நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-17)

## இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச் சங்க பொதுக் கூட்டம்

தென்மராட்சி, ஜூன் 4
தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச் சங்கத்தின் இருபத்தி நான்காவது ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளைமறுதினம் சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேலும், கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை நிர்வாக அலுவலர் நா. தண்டாயுதபாணியும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-9)

## குருதிக்கொடை

அச்சுவேலி, ஜூன் 4
அச்சுவேலி மத்திய விளையாட்டுக் கழகத்தின் உதவுங்கரங்களின் ஏற்பாட்டில் குருதிக்கொடை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சர்வதேச குருதிக்கொடையாளர் தினத்தை முன்னிட்டு நடைபெறும் குருதிக் கொடை நிகழ்வில் மத்திய விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் உட்படப் பலர் குருதிக்கொடை வழங்கவுள்ளனர். குருதிக்கொடை வழங்க விரும்புவோரை இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ற-11)

## சம்பந்தர் குருபூசை

வலி.தென்மேற்கு, ஜூன் 2
ஆனைக்கோட்டை இந்து விருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவரும் ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான அ.வ.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அராலியூர் சைவசித்தாந்த பண்டிதர் கணேஷ் மங்கள மூர்த்தி பூலியர்கோன் பொலித்த புகலியர்கோன் என்னும் விடயம் பற்றி உரையாற்றுவார். (ற-115)

■ ■ ■

யாழ்ப்பாணம், ஜூன் 4
திருஞானசம்பந்தர் குருபூசை தினம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அளவெட்டி தெற்கு றோ.க.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்து மன்றத்தின் தலைவர் திருமதி.த.கற்பகராணி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயத்தின் ஆசிரியர் தி.சாந்தகுமார் சிறப்புரை நிகழ்த்துவார். தொடர்ந்து பேச்சு, தேவார மனனப் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ற-14)

■ ■ ■

யாழ்ப்பாணம், ஜூன் 4
வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை தினமும், திருமுறைமனனப்போட்டி பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை மாலை 5.15 மணிக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ற-14)

■ ■ ■

யாழ்ப்பாணம், ஜூன் 4
ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் இந்துமாமன்றம் நடத்தும் திருஞானசம்பந்தர் குருபூசை தினம் இன்று வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு பாடசாலையின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ற-14)

## திருமுறை முற்றோதல்

கரணவாய், ஜூன் 4
கரணவாய் மூத்தவிநாயகர் தேவஸ்தானத்தின் 21 ஆவது வருட திருமுறை முற்றோதலும், சமய குரவர்களின் விக்கிர ஸ்தாபிதலும், திருஞான சம்பந்தரின் குருபூசைத் தினமான இன்று நடைபெறவுள்ளது. (ற)

## போதையில் விபத்து: மீட்கப்பட்டன பசுமாடுகள்!

யாழ்ப்பாணம், ஜூன் 4
மதுபோதையில் வாகனத்தை செலுத்தி விபத்து ஏற்படுத்தியதை அடுத்து வாகனத்தைப் பொலிஸார் சோதனையிட்டபோது அனுமதியின்றி ஏற்றிச் செல்லப்பட்ட பசு மாடுகள் சிக்கின.

கடந்த மாதம் 28 ஆம் திகதி இரவு ஓட்டுமடப்பகுதியில் பட்டா வாகனமொன்று விபத்துக்குள்ளானதாக கிடைத்த தகவலையடுத்து யாழ்ப்பாண பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். வாகனத்தை பொலிஸார் பரிசோதித்த போது அதனுள் அசௌகரியமான நிலையில் மூன்று பசு மாடுகள் கட்டி வைக்கப்பட்டிருந்தன. அவற்றினை கொண்டுசெல்வதற்கான அனுமதிப்பத்திரம் சாரதியிடம் இருக்கவில்லை.

காரைநகர் வலந்தலையைச் சேர்ந்த குறித்த சாரதியை கைது செய்த பொலிஸார் மது போதையில் வாகனத்தைச் செலுத்தியமை, வாகன விபத்தை தடுக்கத் தவறியமை, அனுமதிப்பத்திரமில்லாமல் மிருகவதை ஏற்படுத்தும் விதமாக மாடுகளை கொண்டு சென்றமை போன்ற குற்றசாட்டுக்களின் கீழ் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.

சாரதியை ஒரு இலட்சம் ரூபா பிணையில் விடுவித்த நீதிமன்றம் மாடுகளை பொலிஸார் பாதுகாப்பில் வைத்திருக்குமாறு உத்தரவிட்டது. (ற-103)

## சமாந்தரமாக சைக்கிள் பயணம்: மன்று விதித்தது அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
வீதிப்போக்குவரத்துக்கு இடையூறாக சைக்கிளில் சமாந்தரமாக சென்ற ஒருவருக்கு யாழ் நீதிவான் நீதிமன்றால் கடந்த வியாழக்கிழமை 250 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவினரால் குறித்த நபர் மன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எச்சரிக்கை செய்த நீதிவான் வீதிப்போக்கு வரத்துக்கு இடையூறாக சமாந்தரமாகச் சைக்கிள்களைச் செலுத்துபவர்களுக்கு எதிராக வழக்குகளை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ற-103)

## போதையில் அட்டகாசம்: கட்டினார் அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
பொது இடத்தில் மதுபோதையில் நின்று பாதையில் பயணிப்பவர்களுக்கும் வாகனங்களுக்கும் இடையூறு விளைவித்து அநாகரிகமாக நடந்து கொண்ட தொடர்மாடி, குருநகரைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிவான் நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை முற்படுத்தப்பட்டார். அவரை இரண்டாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதவான் பெ. சிவகுமார் உத்தரவிட்டார். (ற-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமங்கள் தோறும் விழிப்புக்குழு தேவை

## அதன்மூலம் சீரழிவுகளைத் தடுக்க முடியும் என வடமாகாண சபை உறுப்பினர் சிவயோகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4

வடமாகாணத்தில் அதிகரித்துள்ள சமூகவிரோத மற்றும் சீரழிவுகளைத் தடுப்பதற்கு கிராமங்கள் தோறும் இளைஞர்களைக் கொண்டமைந்த பொலிஸாரின் ஒத்துழைப்புடனான விழிப்புக்குழுக்களை அமைக்க வேண்டும் என வடமாகாண சபை உறுப்பினர் வேலுப்பிள்ளை சிவயோகன் தெரிவித்தார்.

புங்குடுதீவு மாணவி படுகொலை மற்றும் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை கண்டித்து பருத்தித்துறை நகரசபையின் ஏற்பாட்டிலான ஆர்ப்பாட்டப் பேரணி பருத்தித்துறையில் நேற்று நடைபெற்றது.

இந்தப் பேரணியில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

**1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் மக்கள் பிரதேசங்களில் இல்லாத சூழ்நிலையில் இவ்வாறான விழிப்புக்குழுக்கள் இயங்கின. அந்தக் காலப்பகுதியில் இவ்வாறான எவ்வித குற்றச்செயல்களும் இடம்பெறவில்லை.**

அவர் தொடர்ந்து கூறியதாவது:- 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் மக்கள் பிரதேசங்களில் இல்லாத சூழ்நிலையில் இவ்வாறான விழிப்புக் குழுக்கள் இயங்கின. அந்தக் காலப் பகுதியில் இவ்வாறான எவ்வித குற்றச்செயல்களும் இடம்பெறவில்லை. ஒவ்வொரு கிராமங்களையும் விழிப்புக்குழு எனப்படும் இளைஞர்கள் அமைப்பு பாதுகாத்து வந்தது.

பெண்கள் நள்ளிரவிலும் நடமாடக் கூடிய சூழ்நிலை காணப்பட்டது. அவ்வாறான விழிப்புக்குழுக்கள் மீண்டும் உருவாக்கப்பட வேண்டும். இதன்மூலம் போதைப்பொருள் பாவனை, மது பாவனை, கொலை, கொள்ளை, வன்புணர்வு உள்ளிட்ட பலவிடயங்களை இல்லாமல் செய்ய முடியும். விழிப்புக் குழுவுக்கு பொலிஸாரின் உதவியும் பெறப்பட வேண்டும்.- என்றார்.(ற)



## வீதியோரம் சரிந்துள்ள மரத்தை அகற்றுமாறு மக்கள் கோரிக்கை

கொழும்புத்துறை, ஜூன் 4

யாழ். றக்கா வீதியில் புனித ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு முன்புற குளக்கரையில் நின்ற மருதமரம் சரிந்து வீழ்ந்து பல மாதங்களாகிய நிலையிலும் மரத்தின் அடிப்பகுதி அகற்றப்படாமையால் பலசிரமங்களை எதிர்கொள்வதாக சாரதிகளும், பொதுமக்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை நேரங்களில் மாணவர்களை அழைத்துச் செல்ல வரும் பெற்றோர்கள் தரித்து நிற்பதற்கு சரிந்து வீழ்ந்துள்ள அடிமரம் தடையாகக் காணப்படுவதாகவும், போக்குவரத்து நெருக்கடியுள்ள வேளைகளில் விபத்துக்கள் ஏற்படும் ஆபத்து காணப்படுவதாகவும் மக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

குறித்த மரத்தின் பாகங்களை அகற்ற யாழ். மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மக்களால் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (ற-135)

## மரக்கறி விலைகள் சடுதியாகஅதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்.குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலைகள் தற்போது திடீரென அதிகரித்துள்ளன. கடந்த மாத நடுப்பகுதியில் பெய்த மழையால் மரக்கறிச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டதை அடுத்தே இந்த விலையேற்றம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மரக்கறி வகைகளின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளதோடு, அவற்றுக்கு பற்றாக்குறையும் நிலவி வருகின்றன. அனேகமான சந்தைகளில் இந்த மரக்கறி வகைகள் உடனே விற்றுத் தீர்ந்துவிடுகின்றன. திருநெல்வேலி சந்தையில் மரக்கறி வகைகள் ஒவ்வொன்றும் கிலோ 100 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றன. கீரைப்பிடி ஒன்று 40 ரூபாவாக விற்கப்படுகின்றது.

தற்போது குடாநாட்டில் அநேகமான ஆலயங்களில் மஹோற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. அதனால் மக்கள் மரக்கறி வகைகளை அதிகமாகப் பயன்படுத்தியும் வருகின்றனர். இந்தநிலையில் இவ்வாறு மரக்கறி வகைகளின் விலை அதிகரிப்பால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ற-17)

# சுகாதார பரிந்துரைகள் இன்றி வல்லையில் புதிய கொல்களம்

## குற்றஞ்சாட்டுகின்றனர் பொதுமக்கள்

அச்சுவேலி, ஜூன் 4

வலி. கிழக்கு பிரதேச சபையால் 7 லட்சம் ரூபா செலவில் அச்சுவேலி வல்லையில் புதிதாக அமைக்கப்படும் கொல்களம் சுகாதாரப் பகுதியினரின் பரிந்துரைகள், ஆலோசனைகள் எதுவும் இன்றி அமைக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. முன்பு பயன்படுத்தக்கூடாது என தடுத்து நிறுத்தப்பட்ட கொல்களத்துக்கு அருகில் மீண்டும் புதிய கொல்களம் அமைக்கப்படுகின்றது என பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பொதுமக்களின் உணவுடன் தொடர்பான அமைப்புக்களை பிரதேசத்துக்கு பொறுப்பான பொதுச்சுகாதார பரிசோதகர் மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோர் கண்காணிப்பது சட்டபூர்வமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் பிரதேச சபையால் புதிதாக அமைக்கப்படும் கொல்களத்தின் அமைவிடம், கழிவு அகற்றும் ஒழுங்குமுறை பொதுச்சுகாதார கட்டமைப்பு தொடர்பாக பிரதேசத்துக்குப் பொறுப்பான சுகாதாரப் பிரிவினரின் பரிந்துரைகள், ஆலோசனைகள் பெறப்பட வேண்டும் என்பது கண்டிப்பான நடைமுறை என்று கூறப்படுகின்றது.

வலி.கிழக்கு பிரதேச மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களுக்க இறைச்சி விநியோகத்துக்கு பயன்படுத்தப்பட்டு வந்த கொல்களம் பொதுச் சுகாதாரத்துக்கு பொருந்தாதது, பயன்படுத்தமுடியாதென சுகாதாரப் பகுதியினர்பரிந்துரை செய்ததை அடுத்து முன்னர் இயங்கிய அச்சுவேலி வல்லை கொல்களம் மூடப்பட்டது.

வல்லை கொல்களம் மூடப்பட்டதை அடுத்து கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக வலி.தெற்கு பிரதேசத்தில் உள்ள கொல்களம் ஒன்றில் இருந்து வலி.கிழக்கு பிரதேசசபை பிரிவில் உள்ள மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களுக்கு இறைச்சி எடுத்து வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டது.

முன்பு இடைநிறுத்தப்பட்டு தற்பொழுது புதிய கொல்களம் அமைக்கப்படும் இடம் மாரிகாலத்தில் மழைவெள்ளம் தேங்கி நிற்கும் சதுப்பு நிலம் என்றும் உரிய முறையில் கழிவுகளை அகற்ற முடியாது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. அத்துடன் குறித்த இடத்தில் இறைச்சியை கழுவி துப்புரவு செய்வதற்கான நல்ல நீரைப் பெறமுடியாது என்றும் மக்கள் கூறுகின்றனர்.

கொல்களம் தொடர்பான அமைப்பு முறை மற்றும் அமைவிடம் கழிவுகளை அகற்றுவதில் உள்ள சிரமம் - குறைபாடு என்பனவற்றைக் கருத்தில் கொண்டே பழைய கொல்களத்தை பயன்படுத்த முடியாது சுகாதாரச் சீர்கேடு என சுகாதாரப் பகுதியினர் தடுத்து நிறுத்தியிருந்த, அதன் அருகே புதிதாக கொல்களம் அமைக்கப்படுகின்றது என்று மக்கள் தெரிவித்தனர். (ற-11)

## சிறுவர்களுக்கு புகையிலை பொருள் விற்றோருக்கு அபராதம்

21 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்த 15 வர்த்தகர்களுக்கும் போயா தினத்தன்று கள்ளு விற்பனை செய்த 9 தொழிலாளர்களுக்கும் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் 87 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

புகையிலைப் பொருள்கள் விற்பனை செய்தவர்களுக்கு தலா 4 ஆயிரம் ரூபா வீதமும் கள் விற்பனை செய்தவர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமும் அபராதம் விதிக்கப் பட்டது.

திடீர் பரிசோதனைகளின் போது 21 வயதுக்கு குறைந்தவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்த 15 வர்த்தகர்களுக்கு எதிராகவும் நேற்றுமுன்தினம் போயா தினத்தன்று கள்ளு விற்பனை செய்த ஆறு தொழிலாளர்களுக்கு எதிராகவும் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர். இதேவேளை கொடிகாமம் பொலிஸாரும் கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த மூவருக்கு எதிராக கள் விற்பனை செய்ததாக வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அபாரதம் விதிக்கப்பட்டது. (ற-9)

# வீதியை மறித்து வேலி: ஆறு கி.மீ சுற்றிச் செல்லும் மக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட நீர்வேலிப் பிரதேசத்தில், நீண்ட காலம் பயன்படுத்திய வீதிக்கு குறுக்காக தனி நபர் ஒருவர் வேலி அமைத்துள்ளார். அதனால், அந்தப் பாதையைப் பயன்படுத்திய குடும்பங்கள், கிட்டத்தட்ட ஆறு கிலோ மீற்றர் தூரம் சுற்றியே பிரதான வீதிக்கு வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில், வலி.கிழக்குப் பிரதேச சபை நடவடிக்கை மேற்கொள்வதாக, வடக்கு மாகாண முதலமைச்சருக்கும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு உறுதியளித்தும் எந்த நடவடிக்கைகளும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

நீர்வேலியிலுள்ள தாமோதரம் பிள்ளை வீதியை நீண்ட காலமாகப் பொதுமக்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். அந்த வீதியில் புதிதாக கடந்த வருடம் காணியை ஒருவர் கொள்வனவு செய்துள்ளார். அவர் குறித்த பொது வீதியை மறித்து வேலி அமைத்துள்ளார். தனது எல்லையின் பிரகாரம், அதில் வீதி குறிக்கப்படவில்லை எனத் தெரிவித்து, அந்த வீதியை மறித்து வேலி அமைத்துள்ளார்.

இதேவேளை, வலி.கிழக்குப் பிரதேச சபை அந்தப் பாதையினை மையப்படுத்தி இந்திய வீட்டுத் திட்டத்தில் வீடுகள் கிடைக்கப் பெற்ற பயனாளிகளுக்கு, வீடு அமைப்பதற்கான அனுமதியினைவழங்கியிருந்தது. ஆனால், குறித்த வீதியை தனி நபர் ஒருவர் மறித்ததைத் தொடர்ந்து, பொதுமக்கள் பிரதேச சபைக்கு [illegible] பாடு செய்திருந்த நிலை[illegible] தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் பொதுமக்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையிலும், வடக்கு மாகாண முதலமைச்சரிடமும் முறைப்பாடு செய்தனர். இது தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினால், வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

1987 ஆம் ஆண்டு பிரதேச சபைகள் சட்டத்தின் 15 ஆம் இலக்க பிரிவு 55 இன் கீழ், குறித்த பொதுப் பாதை தொடர்பில் பிரதேச சபைகளுக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. குறித்த வீதியை மறித்துள்ள [illegible] பெற்று அதனைச் சரிபார்த்தல். அதில் பொதுப் பாதை குறிப்பிடப்படாவிடின், பொதுமக்களின் நன்மை கருதி, குறித்த காணித் துண்டை சுவீகரிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

இதனை மேற்கொள்வதாக வலி.கிழக்குப் பிரதேச சபையினர் உறுதியளித்த போதும், 6 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று பொதுமக்கள் குற்றம் சுமத்தினர்.

இது தொடர்பில் வலி.கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரிடம் கேட்ட போர்து, குறித்த காணி உரிமையாளரின் உறுதியைப் பெற்று பார்வையிட்ட போது, அதில் பொதுப் பாதை காட்டப்படவில்லை. எனவே குறித்த காணியை சுவீகரிக்க வேண்டும். அது தொடர்பிலான நடைமுறைகளை எமது சபையின் செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் கேட்டிருந்த நிலையில் அவர்கள் அதனை இன்னமும் வழங்கவில்லை. அந்த நடைமுறைகள் வழங்கப்பட்டால், உடனடியாகவே காணியை சுவீகரித்து பொதுப்பாதைக்கு வழங்குவோம் என்றார்.

தவிசாளரின் குற்றச்சாட்டு தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கேட்ட போது, பிரதேச சபையினரே சுவீகரிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள முடியும். சுவீகரிப்புக்குரிய சகல சட்ட விளக்கங்கள் - நடைமுறைகள் தொடர்பில் பிரதேச சபையின் செயலாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். இது தொடர்பில் அண்மையில் தொலை பேசியூடாக, செயலாளரிடம் கேட்ட போது கூட விரைவில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார் என்று குறிப்பிட்டார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைப்பழ கொள்வனவுக்கு விலை நிர்ணயம் மேற்கொள்க

## வவு. வாழைச் செய்கையாளர்கள் கோரிக்கை

வவுனியா, ஜூன் 4

வாழைப் பழங்களைக் கொள்வனவு செய்யும் மொத்த வியாபாரிகள் மிகக் குறைந்த விலைக்கே கொள்வனவு செய்கின்றனர். அதனால் தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ள வவுனியா மாவட்ட வாழைச் செய்கையாளர்கள், அரசு இது தொடர்பில் விலை நிர்ணயம் மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆண்டுகளில் கடும் காற்று, மழை போன்றவற்றால் தாம் கடும் சேதங்களை எதிர்கொண்டதாகத் தெரிவித்த அவர்கள், இம்முறை தாம் கடும் சிரமத்தின் மத்தியில் வாழைச் செய்கையை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளதாவும் தெரிவித்தனர். இந்தநிலையில் மிகக் குறைந்த விலையில் தம்மிடம் மொத்த வியாபாரிகள் கொள்வனவு செய்கின்றனர் என்றும், அதனால் தாம் பெரும் பொருளாதார நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியுள்ளது என்றும் அவர்கள் கூறினார்கள்.

தங்களிடம் ஒரு கிலோ வாழைப் பழம் 15 ரூபா முதல் 20 ரூபா வரையிலேயே கொள்வனவு செய்யப்படுகின்றது என்று கூறும் வாழைச் செய்கையாளர்கள், அவை நுகர்வோருக்கு 40 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது என்றும் கூறினார்கள். தம்மிடம் இருந்து 30 ரூபாவுக்குக் கொள்வனவு செய்வதற்கு மொத்த வியாபாரிகள் முன்வர வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

தமது நிலைமையைக் கருத்தில் கொண்டு அரசு இது தொடர்பில் விலை நிர்ணயம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ற-402)



# வவு. பிரதம தபாலகத்தில் நேற்று பணிப்புறக்கணிப்பு

## ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு

வவுனியா, ஜூன் 4

வவுனியா, பிரதம தபாலகத்தில் காணப்படும் பணியாளர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி, தபாலகப் பணியாளர்கள் நேற்று ஒரு மணி நேர பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். மு.ப. 9.45 மணியில் இருந்து மு.ப. 10.45 மணிவரை இந்தப் போராட்டம் நடைபெற்றது.

தபாலகப் பணிகளுக்கு 21 பணியாளர்கள் தேவை என்றபோதும் 7 பேரே காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. அதனால் தாம் அதிக அழுத்தங்களை எதிர்கொள்வதாக அங்கு பணியாற்றுபவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து பணிப்புறக்கணிப்பில் ஈடுப்பட்ட பணியாளர்கள் கூறியதாவது:-

21 பணியாளர்களுக்கான ஆளணி உள்ளபோதும் தற்போது 7 பேரே கடமையாற்றுகின்றனர். இது குறித்து உரியவர்களுக்கு எழுத்துமூலம் தெரியப்படுத்தியிருந்தோம். சாதமான பதில் கிடைக்கவில்லை. பணியாளர் பற்றாக்குறையால் நாம் பணி அழுத்தங்களை எதிர்கொண்டுள்ளோம். குறைந்த பட்சம் இந்த மாதத்துக்கு இரு பணியாளர்களையாவது இணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் – என்று அவர்கள் தெரிவித்தனர். (ற-402)

# கருங்காலிதாழ்வு கிராமத்துக்கு வீதி வசதி இல்லையென கவலை

## சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் கோரிக்கை



மன்னார், ஜூன் 4

மன்னார், கருங்காலிதாழ்வுக் கிராமத்துக்கு வீதி வசதிகள் செய்து தரப்படவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஆண்டாங்குள பிரதேசத்தில் வயல் வெளிகள் நடுவே உள்ள இக்கிராமத்தில் 34 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். உரிய வீதியமைப்பு வசதியின்மையால் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதில் இடர்பாடுகளை எதிர் கொள்கின்றனர் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதுகுறித்து வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சிவமோகனின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்துத் தெரிவித்த அந்தக் கிராம மக்கள்:-

இந்தப் பகுதி மக்கள் நீண்டதூரம் நடந்து செல்லவேண்டியுள்ளது. இங்குள்ள 13 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்ட வசதிகிடைத்துள்ளது. எனினும் வீடுகட்டுவதற்குரிய கல், மண் கட்டடம்கட்டுவதற்கு தேவையான பொருள்களை எடுத்துவரமுடியாதுள்ளது. அதனால் வீடுகட்டுவதில் இடர்களை எதிர்கொண்டுள்ளோம். அதற்கான நிதி திரும்பிச் செல்லும் அபாயம் உள்ளது. – என்று கூறினார்கள்.

அங்கு நேரில் சென்று வைத்திய கலாநிதி சிவமோகன் நிலைமைகளைப் பார்த்துள்ளார். வடக்கு மாகாண சபையின் வருடாந்த நிதியில் வீதிப் புனரமைப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறினார் என்று கிராம மக்கள் தெரிவித்தனர். (ற-402)

# சுன்னாகம் நிலத்தின் கீழ் வித்தியாசமான படிமம்

## தோண்டியெடுக்கப்பட்டு ஆராயப்படவுள்ளது

யாழ்ப்பாணம், ஜூன் 04

சுன்னாகம் பிரதேசத்தில் நிலத்தின் கீழ் வித்தியாசமான படிமங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அதனை ஆழ்துளை மூலம் தோண்டியெடுத்துப் பரிசோதிப்பதற்குரிய நடவடிக்கைகள் அடுத்த வாரம் மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.



சுன்னாகம் பிரதேசத்து குடிதண்ணீரில் கழிவுஒயில் கலந்துள்ளமை தொடர்பில் பல்வேறு கட்ட ஆய்வுகள், வடக்கு மாகாண விவசாய அமைச்சால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் கடந்த மாதம், தேசிய கட்டிடங்கள் ஆராய்சி நிறுவகத்தினால், சுன்னாகம் பகுதியில் ரேடர் மூலமாக நிலக்கீழ் சோதனை நடத்தப்பட்டது.

நிலத்தின் கீழ் கழிவு ஒயில் அல்லது வேறு படிமங்கள் இருப்பின் அதனை அடையாளப்படுத்தும் நோக்குடன், ரேடர் மூலமாக இந்தப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன் முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளது. நிலத்தின் கீழ் கழிவு ஒயில் படிமம் காணப்படவில்லை என்றும், வித்தியாசமான வேறு படிமங்கள் காணப்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது. குறித்த வேறு படிமங்களை, ஆராய்வதற்கான அவை தோண்டி எடுக்கப்படவுள்ளன.

ஆழ்துளை மூலம் அவை தோண்டி முழுமையாக எடுக்கப்பட்டு, ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளது. இந்த நடவடிக்கை அடுத்த வாரம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

# மன்னார் ஆயரின் உடல்நிலை முன்னரைவிடவும் முன்னேற்றம்

## விக்டர் சோசை அடிகளார் தெரிவிப்பு

மன்னார், ஜூன் 4

மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகைக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் இயன் மருத்துத்தால் அவருடைய உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் இரத்த அழுத்தம், நீரிழிவு, ஆஸ்மா போன்றவைகளும் கண்காணிக்கப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. – இவ்வாறு மன்னார் மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஏ.விக்டர் சோசை அடிகள் தெரிவித்தார்.

மன்னார் ஆயரின் உடல்நிலை தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் ஆயரின் உடல் நிலை தொடர்பாக பல தரப்புக்கள் மத்தியில் இருந்து அக்கறையும் கரிசனையும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எச்.கே.டீ.எஸ். குலரெட்னவின் தகவலை அடிப்படையாகக்கொண்டு ஆயரின்தற்போதைய உடல் நிலை தொடர்பான தகவல்களை வழங்குவதாக விக்டர் சோசை அடிகளார் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மே மாதம் 2ஆம் திகதி மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவு காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நரம்பியல் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த ஆயர், துரதிஸ்ரவசமாக மே மாதம் 17ஆம் திகதி பக்கவாதத்தாலும் பாதிக்கப்பட்டார். அதனால் அவருடைய வலது கை மற்றும் வலது கால் பாதிப்படைந்துள்ளன.

தற்போது அளிக்கப்பட்டு வருகின்ற இயன் மருத்துவம் மூலமாக அவருடைய உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இவற்றுடன் இரத்த அழுத்தம், நீரழிவு, ஆஸ்மா போன்றவைக்ளும் கண்காணிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுவருகின்றது. ஆயர் தொடர்ந்தும் மருத்துவமனையில் இருந்து மருத்துவ சிகிச்சை பெற வேண்டிய நிலையில் உள்ளார்.

ஆயரின் உடல்நிலையில் அக்கறையுள்ள அனைவருடைய பிரார்த்தனைக்காகவும் நன்றி தெரிவிக்கின்ற அதேவேளையில், அவருடைய உடல்நலம் தேற தொடர்ந்தும் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். நாளை வெள்ளிக்கிழமை ஆயருக்கான விசேட பிரார்த்தனை தினமாக அனுஷ்டிக்குமாறு மன்னார் மறைமாவட்ட இறைமக்களைக் கேட்டுள்ளோம் – என்றுள்ளது. (ற-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிட்டு அரங்கேறுகிறது சிறுவர் துஷ்பிரயோகம்

## அனைவரும் ஒன்றிணைந்து முறியடிப்போம் என வட மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் அழைப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 4

எமது தாயகத்தில் என்றுமில்லாதவாறு மது பாவனையும் சிறுவர் துஷ்பிரயோகங்களும் திட்டமிட்ட ரீதியில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. எமக்குத் தெரியாமலேயே நாம் இவற்றுக்கு அடிமையான நிலையில் இவற்றிலிருந்து மீள முடியாமல் செல்லும் வழியறியாது சென்று கொண்டிருக்கிறோம். அண்மையில் எமது பிரதேசங்களில் நடைபெற்ற, நடைபெற்று வரும் சம்பவங்கள் இவற்றுக்கு உதாரணங்களாக இருக்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்தி, எமது சிறார் களின் இவற்றைப்பாதுகாப்பைஅனை வரும் சேர்ந்து உறுதிப் படுத்துவோம். – இவ்வாறு வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜ தீபன் தெரிவித்தார்.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:–

நாம் எல்லோரும் நடந்த சம்பவங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றோம். உண்மையிலேயே இவ்வாறான சம்பவங்கள் மேலும் ஒரு தடவை இந்த மண்ணிலே நடக்கக்கூடாது என்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் நாங்கள் உடனடியாகவே செயலில் இறங்க வேண்டிய அவசியமான, அவசரமான காலகட்டமாக இது காணப்படுகிறது.

அதனால் மிக அவசரமாக பாடசாலைகளில் இவ்வாறான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை மாணவர் மத்தியிலே நடத்த வேண்டும். சிறுவர் நலன் சார்ந்த துறையிலே பாண்டித்தியம் பெற்ற அறிவார்ந்த அங்கீகரிக்கப்பட்டவர்களைக் கொண்டு இவ்வாறான செயற்றிட்டங்களை நாங்கள் முன்னெடுக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கின்றோம்.

அண்மையில் வடமாகாண கல்வியமைச்சர் த.குருகுலராசா தலைமையில் இடம்பெற்ற கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்மானத்துக்கு அமைவாக அனைத்துப் பாடசாலைகளும் இந்தச் செயற்றிட்டத்தில் இணைந்து கொள்வார்கள் என்று நான் நம்புகின்றேன்.

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப் படுகின்ற போதைப்பாக்கு விற்பனை, போதைப் பொருள் விற்பனை, நவீன தொடர்பு சாதனக்களைத் தவறாகப்பயன் படுத்தும் போக்கு, சிறுவர் , சிறுமியர் மீதான தொந்தரவுகள் என்பவற்றைக்கண்டறிந்து களை எடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு பெற்றோர்கள், பாடசாலை சமூகத்தினர் மற்றும் பொலிஸார் என அத்தனை பேருக்குமே உரியது. நாம் அனைவரும் எமது பொறுப்பை உணந்து செயற்பட்டால் மாத்திரமே திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இந்த அனர்த்தத்திலிருந்து எமது தாயகச் சிறார்களை காப்பாற்ற முடியும். – என்றார். (ற)

# போதைப் பாவனையே வன்முறைக்குக் காரணம்

## தேசிய தௌஹீத் ஜமாஅத்தின் உபதலைவர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 4

பெண்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் வன்முறைகளுக்கு போதை வஸ்துப் பாவனையே பிரதான காரணம் என்று தெரிவித்துள்ளார் தேசிய தௌஹீத் ஜமாஅத்தின் உபதலைவர் எம்.சி.ஸஹ்றான்.

'மாணவி வித்யாவின் படுகொலை வேண்டி நிற்கும் சமூக மாற்றங்கள்' எனும் தலைப்பில் மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விழிப்புணர்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதா வது:–

போதைவஸ்துப் பாவனையை ஒழிப்பதற்கு ஒவ்வொரு மதத்தினரும் பாடுபடவேண்டும். எல்லா மதங்களின் அறிவுரைகளிலும் போதை வஸ்து பாவிக்காதே என்று கூறப்படுகின்றது.

போதைவஸ்துப் பாவனைக்கு எதிராக நல் உபதேசங்களையும் அனைவரும் செய்கின்றனர். விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றார்கள். இருந்தபோதிலும் அது போதாது. போதைவஸ்துக்கு எதிராக அரசு கடுமையாக சட்டங்களை இயற்றினாலும், போதைவஸ்துப் பாவனையும் அதன் விற்பனையும் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்றது.

போதைவஸ்து குறித்து கடுமையாக எச்சரிக்கை செய்வதுடன், அதன் பாதிப்புக் குறித்தும் சமூகத்தில் போதையால் ஏற்படும் சீரழிவுகள் குறித்தும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும்.– என்றார். (ற–10)



சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகம், சனசமூக நிலையத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனால் மின்குமிழ்கள் வழங்கப்பட்டன.(ற)

## மு.காவின் மத்திய குழுவுக்கான புதிய நிர்வாகம் தெரிவு

அம்பாறை, ஜூன் 4

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மத்திய முகாம், சவளக்கடை மத்திய குழுவுக்கான புதிய நிர்வாகத் தெரிவு, 5ஆம் கொலனி மிஃராஜ் பல் தேவைக் கட்ட மண்டபத்தில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. கல்முனை மாநகர சபையின் பிரதி முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூத்ததுணைத் தலைவருமான அப்துல் மஜீட் தலைமையில் நிர்வாக தெரிவு இடம்பெற்றது.

இதன்போது மத்தியமுகாம், சவளக்கடை மத்தியகுழு அமைப்பாளராக எம்.ரீ.லத்தீப், தலைவராக ஏ.சீ.ஏ.நஸார் ஹாஜி, செயலாளராக எம்.வீ.நவாஸ், பொருளாளராக முகம்மது அலி, துணைத் தலைவர்களாக ஏ.எல்.ஜலீல், ஏ.எம்.மஹ்ரூப், உப செயலாளராக ஜெ.எம்.சமீம் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில், முன்னாள் நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் எம்.ஐ.தாஜாப்தீன், அஸ்–சிறாஜ் மகா வித்தியாலய அதிபர் வை.யூசுப், முன்னாள் சவளக்கடை மத்திய குழு அமைப்பாளர் ஏ.அஸீஸ், கட்சியின் கிளைக்குழுக்களின் உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நாவிதன்வெளி பிரதேசத்தில் கடந்த காலங்களில் மத்தியமுகாம், சவளக்கடை பிரதேசங்களுக்கென தனித்தனியாக மத்திய குழுக்கள் அமைக்கப்பட்டு நிர்வாகம் இயங்கிவந்தது. கட்சியின் கிளைக்குழுக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக இது மாற்றியமைக்கப்பட்டு இம்முறை மத்திய முகாம், சவளக்கடை இணைக்கப்பட்டு நிர்வாகம் அமைக்கப்பட்டுள்ளது. (ற)

# நாட்டில்நடப்பது புதிராகவுள்ளது

## இன நல்லுறவு தொடர்பான தேசிய வேலைத் திட்டத்தின் தலைவர் கூறுகின்றார்

அம்பாறை, ஜூன் 4

நாட்டில் தற்போது என்ன நடக்கிறதென புரிந்துக்கொள்ள முடியாமல் இருக்கிறது. ஒரு பக்கம் நல்லாட்சி எனும் கோஷம் தூக்கிப் பிடிக்கப்படுகிறது. மறுபக்கம் நல்லாட்சிக்கான ஆரம்ப அறிகுறிகள் மறைந்து நாட்டில் மறுபடியும் இன வாதம் பேசப்படுகிறது.– இவ்வாறு இன நல்லுறவு தொடர்பான தேசிய வேலைத் திட்டத்தின் தலைவர் அஷ்ஷெய்க் அப்துல் காதர் மசூர் மௌலானா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அவர் ஊடகங்களுக்கு விடுத் துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட் டுள்ளதாவது:–

நாட்டில் முன்னெடுக்கப்படும் சில அசாதாரண நடவடிக்கைகளின் பின்னால், திட்டமிட்ட சக்திகள் இருக்க வேண்டும் என்று அரசு நினைத்தால், அவர்களின் முன்னகர்வை தடுக்க வேண்டும். இல்லை யென் றால் இந்த அரசும் இரட்டை வேடம் போடுகிறது என மக்கள் அதிருப்தி கொள்ளும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

வில்பத்து விவகாரத்தில் முஸ்லிம்கள் பக்கத்தில் ஆதாரபூர்வமான நியாயங்கலிருந்தும் இந்த அரசு அவற்றை கணக்கெடுக்காததால் தாக்குதல் சம்பவம் குறித்தும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதுபோல பேருவளையில் நடைபெற்ற படுகொலைகள் மற்றும் பல கோடி பெறுமதியான சொத்துக்களை அழித்து முஸ்லிம்களை உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் துன்புறுத்திய இனவாதிகள் தற்போதும் நல்லாட்சியில் சுதந்திரமாய் உலாவிக் கொண்டிருக்கிறார்கள்.

நல்லாட்சியிலும் இனவாதம் தாராளமாக பேசப்படுகிறது. கைது செய்யப்பட்ட நாளே பிணையில் வரும் அளவுக்கு பொது பல சேனாவின் ஞானசார தேரருக்கு சட்டம் கருணை காட்டுகிறது. இவற்றையெல்லாம் உற்று நோக்குகின்றபோது நல்லாட்சி மீதான சந்தேகம் பொது மக்களுக்கு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

உடனடியாக இவ்வாறான சந்தேகங்கள் களையப்பட வேண்டும். நாட்டில் மறுபடியும் இனவாத கோடரிக்காம்புகளும் புல்லுருவிகளும் புத்துயிர் பெற இந்த அரசாங்கம் துணை போகக் கூடாது. எதிர்வரும் ரமழானில் எமது முஸ்லிம்கள் அச்சமின்றியும் சுதந்திரமான முறையில் தமது மார்க்கக் கடமைகளை முன்னெடுக்க இந்த அரசு வழி அமைத்துக் கொடுக்க வேண்டும். அதற்கான சமிஞ்ஞையாக பொரளை பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்திய சூத்திரதாரிகளை கைது செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.– என்றுள்ளது. (ற)

# கல்முனை நகரை மீள தலைநகராக்குவோம்

## உலமா கட்சித் தலைவர் கூறுகின்றார்

மட்டக்களப்பு, ஜூன் 4

கிழக்கு மாகாணத்தின் தலைநகராக மீண்டும் கல்முனையை உயிர்ப்பிக்க வேண்டும். கல்முனையைத் தலைமையாகக் கொண்ட கட்சியைப் பலப்படுத்துவதன் மூலமே அது சாத்தியமாகும். – இவ்வாறு உலமா கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித் தார்.

கல்முனையில் கட்சி ஆதரவாளர்களுடன் நடத்திய கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

ஒரு காலத்தில் கிழக்கின் முக வெற்றிலையாக கல்முனை இருந்தது. அங்கிருந்துதான் கிழக்கு மாகாணத்தின் அனைத்து விடயங்களும் ஆராயப்பட்டன. கல்முனை மக்கள் சமூகத்துக்காக சிந்திக்கக் கூடியவர்கள், போராட்ட குணம் கொண்டவர்கள், திறமையான ஆற்றலுள்ளவர்கள் என்பதை முழு இலங்கையும் தெரிந்து வைத்துள்ளது.

கட்டுப்படுத்த முடியாத தன்மானம் கொண்டவர்கள் கல்முனை மக்கள். கலை உலகமாக இருக்கட்டும்; பொருளாதாரமாக இருக்கட்டும்; அரசியலாகட்டும் அனைத்து விடயங்களிலும் கல்முனை தொகுதிக்குட்பட்ட கல்முனைக்குடி, சாய்ந்தமருது, மருதமுனை, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை என அனைத்து ஊர்களும் சிறந்து விளங்கின. ஆனால் எப்போது நமது அரசியல் தலைமைத்துவத்தை வேறிடத்துக்கு பறிகொடுத்தோமோ அன்று முதல் கல்முனை கிழக்கின் முகவெற்றிலை என்ற நிலையிலிருந்து கிழக்கின் சாக்கடையாக மாறி விட்டது.

எந்தவொரு சமூகமும் அரசியலில் விழிப்படையாவிட்டால் அந்தச் சமூகம் அடிமைச் சமூகமாகவே வாழும். கல்முனைக்கும் அந்த நிலைதான் ஏற்பட்டுள்ளது. நாம் வளர்த்த கட்சியை பிறருக்கு தாரை வார்த்து விட்டோம். இனி அத்னை மீண்டும் கல்முனைத்தலைமை கொண்ட கட்சியாக மாற்றவே முடியாது. இந்த நிலையில் கல்முனைத் தலைமை கொண்ட எமது கட்சி பற்றி மக்கள் அவசியம் சிந்தித்தாக வேண்டும்.

கல்முனை மக்களில் இருபதினாயிரம் பேர் எமக்கு ஆதரவளித்திருந்தால் போதும் கல்முனையின் இழந்து போன முகவெற்றிலையை மீண்டும் உருவாக்கி முழுத் தேசமும் கல்முனையை திரும்பிப் பார்க்க வைத்திருக்க எம்மால் முடியும். நாம் கல்முனை மாநகருள் உள்ள அனைத்து மக்களையும் அழைக்கின்றோம். நமது கல்முனை பரம்பரையை தொடர்ந்தும் அடிமைகளாக விட்டுச்செல்ல முடியாது. கல்முனை தலைமையிலான கட்சியை பலப்படுத்தி கல்முனையை மீண்டும் கிழக்கின் முகவெற்றிலையாக மாற்ற ஒவ்வொரு கல்முனை பொதுமகனும் முயற்சி எடுக்க வேண்டும்.–என்றார். (ற–10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருங்கிப் பழக வேண்டாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான வருமானம் கிடைக்கும். வீட்டுக்குத் தேவையான பொருளை வாங்குவீர்கள். உறவினர் ஒத்துழைப்பு கிடைக்கப் பெறுவீர்கள்.

**இடபம்:** தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்ததை விட இலாபம் அதிகரிக்கும். உறவினர் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். பிள்ளைகளின் செயற்பாடு கண்டு பெருமிதம் கொள்வீர்கள்.

**மிதுனம்:** உற்சாகத்துடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில் விடயமாக, வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். சுப விடயத்தில், நல்ல முடிவு கிடைக்கும்.

**கடகம்:** ஆரோக்கிய விடயத்தில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய முயற்சியில் ஈடுபட்டு இலாபம் காண்பீர்கள். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**சிங்கம்:** அன்றாடப் பணிகளில், சுறுசுறுப்புடன் ஈடுபடுவீர்கள். தொழிலில், சாதனை புரியும் எண்ணம் மேலோங்கும். பணம் வர வாய்ப்புண்டு. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

**கன்னி:** தொழில், வியாபாரத்தில், விரிவாக்க முயற்சி வெற்றிபெறும். இலாபம் உயரும். புத்திரரின் எதிர்கால நலனில், அக்கறையுடன் செயற்படுவீர்கள். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**துலாம்:** தன்னம்பிக்கை மிக்கவராகச் செயற்படுவீர்கள். தொழிலில், தடைகளை சந்தித்தாலும், இலாபத்துக்கு குறை விருக்காது. மனைவி வழி உறவினர்களால் உதவியுண்டு. பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும்.


**விருச்சிகம்:** மனதில் ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், புதிய சாதனை படைப்பீர்கள். குடும்பத்தில், சுபவிடயம் குறித்த பேச்சு நடக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**தனுசு:** பிறரிடம் வாக்குவாதத்தில் ஈடுபடுவதை தவிர்க்கவும். தீர் செலவால் சேமிப்பு கரையும். தொழில், வியாபாரத்தில், சுமாரான ஆதாயம் கிடைக்கும். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** உடல் நலனில் கவனம் செலுத்துவீர்கள். தொழிலில், புதிய ஒப்பந்தம் மூலம் வருமானம் அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த சிந்தனை மேலோங்கும். உறவினர் மத்தியில் செல்வாக்கு கூடும்.

**கும்பம்:** பணிகளைச் சுறுசுறுப்பாக நிறைவேற்றுவீர்கள். தக்க சமயத்தில், நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழில், வருமானத்தில், இலாபம் அதிகரிக்கும். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.

**மீனம்:** குடும்பத்தினரின் செயற்பாடு மகிழ்ச்சியளிக்கும். தொழில், வியாபாரத்தில், அதிர்ஷ்டவசமாக வருமானம் அதிகரிக்கும். பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.




## ஸ்மார்ட் ஆடை

உடற்பயிற்சி செய்பவர்களுக்கு என்றே ஸ்மார்ட் ஆடையை வடிவமைத்துள்ளது ஹெடோகோ நிறுவனம்.
இந்த ஆடையை அணிந்து கொண்டு பயிற்சி செய்தால் ஸ்மார்ட் போனில் பயோமெட்ரிக் டேட்டாக்கள் பதிவாகும். இதற்கேற்ப துணிகளுக்கு இடையே உணர் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. பயிற்சியின்போது ஏற்படும் உடலியல் மாற்றம் மன அழுத்தங்களையும் பதிவு செய்கிறது.

## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

அர்த்த இராத்திரியில டாக்டர் கத்தியோட எங்கே போறாரு?
***அவருக்கு தூக்கத்தில ஒப்ரேஷன் செய்யிற வியாதியாம்!***

குளிர்காலத்தில ஒப்ரேஷன் பண்றதா இருந்தா டாக்டருக்கு ரொம்ப இஷ்டம்
***ஏன்?***
"ஒப்ரேஷன்" செய்யிறப்போ கை நடுங்கினா குளிர்னால நடுங்குதுன்னு சொல்லி சமாளிச் சிடலாமே!

## ஈழத் தமிழர்களைச் கொச்சைப்படுத்திய மாஸ் வரிச்சலுகை அதனாலேயே மறுப்பு



"மாஸ்" படத்துக்கு வரிச்சலுகை ஏன் கிடைக்கவில்லை என்ற காரணத்தை பாடலாசிரியர் சினேகன் தெரிவித்துள்ளார்.
சூர்யா நடிப்பில் வெளிவந்த "மாஸ்" படத்துக்கு வரிச்சலுகை கிடையாது. சண் டி.வி தொலைக்காட்சிக்கு உரிமம் கொடுத்ததால் தான் வரிச்சலுகை கொடுக்கவில்லை என்கிறார்கள். "மாஸ்" என்பது தமிழ்ப் பெயர் இல்லை, அது தான் காரணம் என்று சிலர் சொல்கிறார்கள். உண்மையான காரணம் என்ன தெரியுமா?
அந்தப் படத்தில் "ஈழத் தமிழ் பேசுகிறவனா... உன்னை உதைக்க வேண்டும்" என்று ஒரு வசனம் வருகிறது. அதைக் கோடிட்டு, "ஈழத்தமிழையும், ஈழத்தமிழர்களையும் கொச்சைப்படுத்துவதால் இந்தப் படத்துக்கு வரிச்சலுகை கிடையாது" என்று ஓர் அதிகாரி எழுதியிருக்கிறார்.
இப்படிப்பட்ட அதிகாரிகளும் இருக்கிறார்கள் என்று நினைக்கும் போது சந்தோஷமாக இருக்கிறது. அந்த அதிகாரியின் நேர்மைக்கு நிறைய வேறு அதிகாரிகள் வாழ்த்து தெரிவித்திருக்கிறார்கள். படக்குழு பின்னர் படத்தில் இருந்த வசனத்துக்கு மாற்று வசனம் எல்லாம் போட்டு மாற்றி இருக்கிறார்கள், என்று பேசினார் பாடலாசிரியர் சினேகன்.

# "சொல்வதெல்லாம் உண்மை" கைமாறுகின்றது

"என்னம்மா இப்படிப் பண்றிங்களேம்மா" இந்த வசனத்தைச் சொன்னா எவ்வளவு சீரியசான விடயமா இருந்தாலும் அது காமடியா மாறி விடுகின்றது. எல்லாரும் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பிச்சிடுகின்றார்கள்.
லட்சுமி இராமகிருஷ்ணன், தான் நடத்திய சொல்வதெல்லாம் உண்மை என்ற நிகழ்ச்சியில சொன்னதை, விஜய் தொலைக்காட்சி காமடியா மாற்றி விட இப்போது ஊரே அந்த வசனத்தைப் பேசி எல்லா சமூக வலைதளங்களிலும் வைரசாக்கி விட்டு விட்டார்கள்.
இப்போது சொல்வதெல்லாம் உண்மை நிகழ்ச்சியில இருந்து வெளியேறி, "என்னம்மா இப்படிப் பண்றிங்களேம்மா" என்று சொந்தமா நிகழ்ச்சி நடத்த தொடங்கி விட்டார் லட்சுமி. இதனால் அவருக்குப் பதிலா சொல்வதெல்லாம் உண்மை நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்த வந்து விட்டார் மயூரி படப்



புகழ் சுதா சந்திரன்.
தொலைக்காட்சித் தொடர்களில் நடித்து வந்தவரான சுதா தற்போது இந்த ரியாலிட்டி ஷோவுக்கு வந்துள்ளது எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. என்னம்மா இப்படிப் பண்ணிட்டிங்களேம்மா......!

# தடைக்குள்ளாகும் மகி நூடில்ஸ்

நெஸ்லே, இந்தியா நிறுவனத்தின் தயாரிப்பான மகி நூடில்ஸ் குழந்தைகளும், பெரியவர்களும் விரும்பி சாப்பிடும் உணவுப் பொருளாக இருந்து வருகிறது. இதில், நிர்ணயிக்கப்பட்ட அளவை விட மோனோ சோடியம் குளூட்டாமேட் என்ற அமினோ அமிலம் சேர்க்கப்பட்டிருப்பதாக இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநில அரசின், உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் நடத்திய ஆய்வில் தெரியவந்தது.
இதன் காரணமாக மகி நூடில்ஸை சாப்பிடுவதால் உடல் நலத்துக்கு கேடு விளையும் என்பதால் உத்தரப் பிரதேச அரசு தடை விதித்துள்ளது.
இந்நிலையில், இந்தியாவின் ஏனைய மாநிலங்களான கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநில அரசுகளும் மகி நூடில்ஸ் விற்பனைக்கு தடை விதித்தன.
இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் தடை விதிக்கப்பட்டுள்ளதால், நாடு முழுவதும் அதன் விற்பனைக்கு தடை விதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.
ஆனாலும், நெஸ்லே நிறுவனம் இந்த குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது. மகி நூடில்ஸில் அனுமதிக்கப்பட்ட அளவில் தான் வேதிப் பொருள்கள் கலக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான ஆய்வில், மகி நூடில்ஸ் தரமானது எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. உணவு பாதுகாப்பு விதிகளுக்குட்பட்டு மகி நூடில்ஸ் தயாரிக்கப்பட்டு வருகிறது. என்று அந்த நிறுவனம் விளக்கமளித்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிதடியில் முடிந்த குடும்பப் பகை; ஐந்து பேர் வைத்தியசாலையில்

அளவெட்டி, ஜூன் 4

இரு குடும்பங்களுக்கிடையில் நீண்ட காலமாக இருந்து வந்த குடும்பப் பகை கடந்த முதலாம் திகதி இரவு 7 மணியளவில் அடிதடியில் முடிந்ததால் இரண்டு குடும்பங்களையும் சேர்ந்த ஐந்து பேர் காயங்களுடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

மணமுடித்த பெண் வீட்டார் மீது, மணமகனின் தந்தை, மைத்துனர் உட்பட பெண்களுமாக இரவு 7மணியளவில் வீடு புகுந்து தாக்கியதுடன் அவர்களின் வீட்டு வேலிகளையும் கொளுத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் கம்பி, பொல்லுகள், போத்தல் ஓடுகள் என்பனவற்றால் இரு பகுதியினரும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டதில் பொன்னன் இராசையா(வயது-67), குலேந்திரன் துசாந்தன் (வயது-28), துசாந்தன் நளாயினி(வயது-28), அப்பையா இலங்கேஸ்வரன் (வயது-52), நீகன் ரெனிசா (வயது-26) ஆகிய ஐவரும் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் சாந்தை பண்டத்தரிப்பு பகுதியை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

(ந-36)

## விபத்தில் ஒருவர் காயம்

அளவெட்டி, ஜூன் 4

கடந்த முதலாம் திகதி அதிகாலை 5.30 மணியளவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு அண்மையில் நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீதிக்கு குறுக்காக வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதால் பிரதான வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்தவ ரான வீரசிங்கம் விஜயகாந்தன் வயது -35 ) என்பவருக்கு தோள்மூட்டு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்பட்டது. (ந-9)

## உலக சுற்றாடல் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

உலக சுற்றாடல் தின நிகழ்வுகள் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன. நிகழ்வுகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

சுற்றாடல் முன்னோடிக்குழு தலைவர் அ.பிரணவரூபன் தலைமையில் நடைபெற இருக்கும் இந்த நிகழ்வில் சுற்றாடல் விடயம் சம்பந்தமான பேச்சு, கவிதை, நாடகம் போன்ற கலை நிகழ்வும் மற்றும் 'பசுமை" எனும் சஞ்சிகை வெளியீடு, பிரதேச சுற்றாடல் அலுவலர்களை கௌரவித்தல், மரநடுகை போன்ற நிகழ்வுகளும் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள சுற்றாடல் முன்னோடி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் எஸ்.சிவனருள்ராஜாவும் சிறப்பு விருந்தின ராக யாழ்.மாவட்ட சுற்றாடல் முன்னோடி ஆலோசகர் பொ.சண்முகதேவனும் கௌரவ விருந்தினர்களாக காரைநகர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன், ஓய்வு நிலை வைத்திய அதிகாரி க.நடராஜர், பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி வி.கல்யாணி ஆகியோரும்கலந்து கொள்ளவுள்ளனர். (ந)

## கண்ணீர் அஞ்சலி

புலோப்பளை அறத்தி அம்பாள் ஆலய
பிரதம குரு
சிவஸ்ரீ ந.பிரபாகரக்குருக்கள்
அவர்களின் அன்பு மாமனார்

**கந்தசாமி ஐயா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பரிபாலன சபையினர்**
**புலோப்பளை அறத்தி அம்பாள் ஆலயம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது மனிதவள முகாமைத்துவ துறை தலைவி திருமதி சாந்தகுமாரி மகேந்திரன் அலேசியஸ் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தர்மாவதி சிவசிவா**

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விரிவுரையாளர்களும் கல்விசாரா ஊழியர்களும்
மனிதவள முகாமைத்துவத்துறை,
முகாமைத்துவ வணிகபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் கந்தையா பத்மநாதன்**



தோற்றம்
18.03.1947

மறைவு
16.05.2014

அன்பு முகம் மறைந்தாலும் அழியாது உங்கள்
நினைவலைகள் எந்நாளும் உங்கள்
நினைவில் வாழும் அம்மாவின் இதயம் கனக்கின்றதே
அப்பாவின் அன்பான அறிவுரைகள் பல எம்மை
வழிநடத்திக்கொண்டு இருக்கின்றதே
எப்படி மறக்க முடியும் நீங்களும்
எங்களுடன் இருப்பது போன்ற
உணர்வில் வாழ்கின்றோம் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய அனுதினமும் வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

**குடும்பத்தினர்.**

## 35 ஆவது பிறந்த நாளில் ஏழாம் ஆண்டு நினைவலைகள்

# யோகரட்ணம் கீதன்

(Ceylinco Insurance)



2008 ஆம் ஆண்டில் நிஜமாக இறந்த காலத்தில்
வாழ்ந்த என் பிள்ளை
2015 இல் ஏழாம் ஆண்டில் நிழலாக
காலடி பதிக்கின்றான்
உயிரும் உடலும் சேர்ந்திருக்கும் போது தான்
வாழ்க்கை என்பது நிஜமாகின்றது.

நாம் பிள்ளையை இழந்தோம்
தங்கைமார் அண்ணனை இழந்தனர்
குழந்தைகள் அன்பு மாமனை இழந்தனர்
அவர்கள் உன் நிழல் படத்தைப் பார்த்து
மாமா என்றழைக்கும் போது
எம் உயிர் துடிக்கின்றது

நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று,
சித்தமன்று,
நீ ஆத்மா! ஆத்மா ஒரு நாளும் அழியாது
உன் ஆத்மாவோடு கூடிய இறைசக்தி
உன் குடும்பத்தினரை வழிநடத்த வேண்டும்
எனப் பிரார்த்திக்கும்...

**குடும்பத்தினர்.**

"யோகீத்தா வாசம்"
18/1, வாய்க்கால் தரவை ஒழுங்கை,
சண்டுக்குளி.

மலர்வு
04.06.1980

உதிர்வு
31.05.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் நாடாளுமன்ற ஆரம்ப நிகழ்வு

தென்மராட்சி, ஜூன் 4

மட்டுவில் தெற்கு அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற ஆரம்ப நிகழ்வும் – கன்னி அமர்வும் இன்று வியாழக் கிழமை முற்பகல் 9 மணிக்கு வித்தியாலய அரங்கில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்கள தாய் சேய் நலமருத்துவ அதிகாரி மருத்துவர் சி.குமாரவேளும், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ( கல்வி அபிவிருத்தி ) எஸ்.சுந்தரசிவம், வலய வழிகாட்டல் ஆலோசனை முதன்மை ஆசிரியர் வே.க. சந்திரகுமார் ஆகியோரும் கலந்து கொள்வர். (ந–9)

# ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 67ஆவது ஆண்டு விழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 4

அரசடி, ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 67ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள் நாளை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று நாள்கள் நடைபெறவுள்ளன. நாளைக் காலை 7.00 மணிக்கு நிலைய மாதர் சங்கத்தினரின் அணிநடையுடன் ஆரம்பிக்கப்படவுள்ள நிகழ்வில் மகாகவி பாரதியார் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்படவுள்ளது. முதல் நாள் 100 மீற்றர் ஓட்டப் போட்டி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து சனிக்கிழமை காலை 6.30 மணிமுதல் இல்லங் களுக்கான 5 மைல் மரதன் ஓட்டம், தலையணை அடிப்போர், கயிறு இழுத்தல், சங்கீதக் கதிரை, விநோத உடைப் போட்டி ஆகிய நிகழ்வுகள் நடை பெறவுள்ளன.

இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். மாவட்ட ரீதியிலான ஆண்களுக்கான 50 மைல் சைக்கிள் ஓட் டப்போட்டியும், மாலை 6.30 மணிக்கு ஜனசக்தி கலையரங்கில் பரிசளிப்பும் கலை நிகழ்சிகளும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கலந்துகொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ந–10)

# கிளிநொச்சி மாவட்ட முதியோர் பேரவை புனரமைப்பு கூட்டம்

கிளிநொச்சி, ஜூன் 4

கிளிநொச்சி மாவட்ட முதியோர் பேரவை புனர மைப்புக் கூட்டமும் நடப்பு ஆண்டு நிர்வாகிகள் தெரிவும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அதில் சமூக வேகைள் அமைச்சின் முதியோர் களுக்கான தேசியப் பணியக உயர் அதிகாரி களும் கிளிநொச்சி மாவட்டச் செயலக உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். பளை, பூநகரி, கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள முதியோர் சங்கங் களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகி யோரைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட் டுள்ளது. (ந–9)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அற்புதம் சிதம்பரப்பிள்ளை



வட்டு கிழக்கைப் பிறப் பிடமாகவும் யாழ். வண்ணார் பண்ணை 35, B.A தம்பி ஒழுங்கையை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி அற்புதம் சிதம்பரப்பிள்ளை 01.06.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு சிதம்பரப்பிள்ளை யின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதி யரின் மகளும் , ஜெயம் , விஜ யன், பாலேந்திரன் , சிவராசா, யோகநாதன், ஜெயச்சந்திரன், ஜெயகௌரி, ஜெயகாந்தி, சந்திரபாபு, ஜெயதேவி, ஜெய ரஞ்சினி ஆகியோரின் பாச மிகு தாயாரும், விஜயலக்ஷ்மி, கமலசாந்தினி , சீதாதேவி, தர்மலக்ஷ்மி, கிருஷ்ணமூர்த்தி, மணிவண்ணன், குவேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியும், யசோதா, மயூரன், அஞ்சலீனா, கஜன், செந்தூரன், வினித், அகல்யா, அபிஷா, ருஷாலினி, சயுர்சன், அபிராமி, காயத்திரி, பிரதாயினி, பிரணவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2015) வியாழக்கிழமை காலை 9.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35, B.A தம்பி ஒழுங்கை,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தொடர்புக்கு:
021 320 2165, 077 846 4029, 076 855 0280

### திருமதி தவமணி யாதவராயர்



யாழ்/நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், 115, பாண்டியன் குளம், நட்டாங்கண்டலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி யாதவராயர் 02.06.2015 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஆறுமுகம் - பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும் யாதவராயரின் அன்பு மனைவியும், ஜெயமலர், ஜெகன்(பிரான்ஸ்), ஜெயக்குமார்(பிரான்ஸ்), கோகிலராணி, கோகிலமதி ஆகியோரின் அன்புத் தாயாரும், சுபநேசன், சித்திரா, புருசோத்தமன், கதிர்ச்செல்வன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நடேஸ்வரி, நடேசன், தனபாக்கியம், வைத்திலிங்கம் மற்றும் தியாகராசா, தனலட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரியும் டிலாந்தன், தேனுசா, கர்மிதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(04.06.2015) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் 115, பாண்டியன்குளம் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பாலியாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

115, பாண்டியன் குளம்,
நட்டாங்கண்டல்.
(57515)(6.9.3)

தகவல்:
குடும்பத்தினர்.
024 324 7445

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ருக்மணி சீவரத்தினம்

யாழ். காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கச்சேரியடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது நோர்வேயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ருக்மணி சீவரத்தினம் 30.05.2015 சனிக்கிழமை ஒஸ்லோவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மூத்ததம்பி - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கைலாசபிள்ளை சீவரத்தினம்(சீவரத்தினம் கடை உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், பவானி(இத்தாலி), இரகுநாதன் (நோர்வே); சவுந்தரநாதன்(ரவி - நோர்வே), ஏகலநாதன்(நந்தன் - நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் துரையப்பா(லண்டன்) காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, நல்லம்மா, ராஜ்குமார் ஆகியோரின் அன்புச்சகோதரியும், குகதாசன் (இத்தாலி), சுகிர்தலட்சுமி(சுகிர்தா - நோர்வே), தேன்மதி(நோர்வே), ஜெகதீஸ்வரி (லலி - நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2015) வியாழக்கிழமை ஒஸ்லோ நோர்வேயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவலர் வீதி,
கச்சேரியடி.
(60412)(9.1.3)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி ருக்குமணி சீவரத்தினம்



நல்லூர் நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ருக்குமணி சீவரத்தினம் 30.05.2015 சனிக்கிழமை நோர்வேயில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கைலாசபிள்ளை சீவ ரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான மூத்ததம்பி-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கைலாச பிள்ளை-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, நல்லம்மா, ராஜ்குமார் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பவானி (இத்தாலி), ரகுநாதன் (நோர்வே), சௌந்தரநாதன் (நோர்வே), ஏகலநாதன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயும், குகதாஷன் (இத்தாலி), சுகிர்தாலட்சுமி (நோர்வே), தேன்மதி (நோர்வே), ஜெகதீஸ்வரி (நோர்வே) ஆகியோரின் மாமியும், தனு சன், ராம்ஷன் (இத்தாலி), ஜனுசா, அக்சகன், சஜிதா (நோர்வே), மிதுஷன், அபினாஸ் (நோர்வே), சிராம் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், இந்திராதேவியின் சின்னம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2015) வியாழக் கிழமை நோர்வேயில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

49/1, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை.
(60418)(10.6.3)

தகவல்:
இந்திராதேவி (பெறாமகள்)

### திருமதி செல்வரத்தினம் சிவசம்பு



சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் சிவசம்பு 02.06.2014 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா சிவசம்புவின் அன்பு மனைவியும், விசாலாட்சி, சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும், முத்துலிங்கம் (ஜேர் மனி), கஜமுகதேவி (இலங்கை), காலஞ்சென்ற புஸ்பராணி, சண்முக லிங்கம் (கனடா), புஸ்பமலர் (இலங்கை), நேசமலர்(ஜேர்மனி), சாந்தலிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சரோஜினி தேவி, அருந்தவநாதன்(இலங்கை), செல்லப்பா, ரூபினி(கனடா), காலஞ்சென்ற மயில்வாகனம், ஸ்ரீகாந்தா(ஜேர்மனி) ஆகியோரது அன்பான மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10.00 மணியளவில் சிறுப்பிட்டி பத்தாலட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]
078 503 3438
(60417)(6.9.3)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

# ஆன்மிக சொற்பொழிவு

தென்மராட்சி, ஜூன் 4

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை வெள் ளிக்கிழமை இரவு 7 மணிக்கு 'அறி யாமை' என்றும் தலைப்பில் ஆன்மிகச் சொற்பொழிவு நடைபெறவுள்ளது. கல்வயலூர் வி.மயூரன் ஆன்மிகச் சொற்பொழிவை நடத்துவார். (ந–9)

# தாக்குதல், விபத்தில் ஐவர் காயம்

தென்மராட்சி, ஜூன் 4

வீடு புகுந்து நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்த இரு முதியவர்களும், வீதி விபத்துக்களில் சிக்கிக் காயமடைந்த மூவரும் சாவகச்சேரி வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்தச் சம்பவங்கள் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கும் நேற்று காலை 7 மணிக்குமிடையிலான 12 மணி நேரத் தில் தென்மராட்சி பிரதேசத்தில் நடந் துள்ளன.

வீடுபுகுந்து தாக்கப்பட்டதில் கைதடி நுணா விலைச் சேர்ந்த சண்முகம் கிருஸ்ண மூர்த்தி ( வயது–70 ), கெற்பேலி மத்தி யைச்சேர்ந்த சஞ்சீவிமாதயா(வயது–68) ஆகியோர் காயமடைந்துள்ளனர். வீதி விபத்துக்களில் சிக்கி மீசாலை கிழக்கு, வரணி மாசேரி, வரணி இடைக்குறிச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த மூவர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.(ந–9)

# இயங்க ஆரம்பித்தது அள. முற்போக்கு வாலிபர் ச.ச. நிலையம்

அளவெட்டி, ஜூன் 4

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக இயங்காத நிலையில் இருந்த அள வெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையம் கடந்த முதலாம் திகதி முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த மாதம் 10ஆம் திகதி புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையம் சனசமூக நிலையில் தனது செயற்பாடுகளை ஆரம் பித்துள்ளது.

தமது நிலையத்தில் சேமிப்புக் குழுக் களாக இயங்கிய மகளிர் குழுக்களின் செயற்பாட்டு கடன் வழங்கல், கடன் மீளளித்தல் செயற்பாடுகள் வழமை போல் செயற்படுவதால் சேமிப்பு, கடன் பெறல், கடன் மீளளித்தல் போன்ற வற்றில் இணைந்து செயற்பட்டவர்கள் அனைவரும் புதிய நிர்வாகத்துடன் இணைந்து செயற்படுவதுடன் தமது சேமிப்பு கடன் வசதிகளையும் பெற முடியும் என்று நிர்வாகத்தினர் தெரி வித்தனர். (ந–36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசுக்கான வேலைத்திட்டம் வவுணதீவில் ஆரம்பமானது

மட்டக்களப்பு, ஜூன் 4

'காசுக்கான வேலைத்திட்டம்' வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள எட்டுகிராம அலுவலர் பிரிவுகளில் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் கடந்த மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்திருக்கும் மிக வறிய மக்களுக்கு உதவும் நோக்கோடு நடைமுறைப் படுத்தப்படுவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த செயற்றிட்டத்துக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்புக் கிளையும், ஒக்ஸ்பாம் சர்வதேச நிறுவனமும் நிதியுதவி வழங்கியுள்ளன.

வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பாவற்கொடிச்சேனை, காந்திநகர், சொறுவாமுனை, மகிழவெட்டுவான், கொத்தியாபுலை, பன்சேனை, வவுணதீவு, ஆயித்தியமலை வடக்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கிராம உத்தியோகத்தர்களினால் தெரிவு செய்யப்பட்ட 200 மிக வறிய மக்களே இந்தத் திட்டத்தின் பயனாளி களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளர்.

பிரதேச செயலகத்தால் தீர்மானிக்கப்பட்ட கிராமத்துக்கான பொது வேலைத் திட்டம் ஒன்றை நிறைவேற்றும் செயற்பாட்டில் தெரிவு செய்யப்பட்ட வறிய மக்கள் ஈடுபட்டு அதற்காக வழங்கப்படும் கொடுப்பனவை இந்த மக்கள் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள் ஆகியோரின் முழு ஒத்துழைப்போடு இந்த காசுக்கான வேலைத்திட்டம்இ நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றதுஎன்றுதெரிவிக்கப்பட்டது. (ந–10)

## விவாதம் தொடர்பில் பயிற்சிப் பட்டறை

வவுனியா, ஜூன் 4

பட்டிமன்றத்தில் வாதிடுவது எவ்வாறு என்பது தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று நாளை வெள்ளிக்கிழமை வவுனியா பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா பிரதேச செயலகம் ஒழுங்கு செய்துள்ள இந்தப் பயிற்சிப் பட்டறைக்கு வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணக்களம் அனுசரணை வழங்கியுள்ளது.

வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா தலைமையில் காலை 8.30 மணி முதல் பி.ப 4.30 மணிவரை இந்தப் பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது.

பயிற்சியின் ஆரம்ப நிகழ்வில் வவுனியா பிரதேச கலாசார பேரவையின் உபதலைவர் தமிழ்மணி அகளங்கன், இலக்கியச்சுடர் ஐகதிர் காமசேகரன், வித்தியாரத்னா சி.வரதராஜன், கவிஞர் குரும்பையூர் த.ஐங்கரன் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொள்ளவுள்ளனர். இந்தப் பயிற்சிப் பட்டறைக்கு வவுனியா பிரதேச பாடசாலைகளில்இருந்துமாணவர்கள்தெரிவுசெய்யப்பட்டுஅழைக்கப்பட்டுள்ளனர். (ந–421)


HNB அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், மானிப்பாய், கைதடி, திருநெல்வேலி, சங்கானை, கிளிநொச்சி வடக்கு, கிளிநொச்சி தெற்கு, அச்சுவேலி, கொடிகாமம், முள்ளியவளை, மல்லாவி, நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, முல்லைத்தீவு, வேலணை, மன்னார், வவுனியா, நானாட்டான், குருமன்காடு ஆகிய கிளைகளில் 30.04.2014 இற்கு முன்னர் அடகு வைத்து இது வரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 08.06.2015 தொடக்கம் 11.06.2015 (திங்கள் - வியாழன்) வரை காலை 9.00 மணிதொடக்கம் மாலை 6.00 மணிவரை இல.212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ். கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஏல விற்பனைத்திகதியினை பிற்போடும் மற்றும்
ஏலத்தினை இரத்துச்செய்யும் உரிமைகள்
வங்கிக்கு உண்டு.

- ஹற்றன் நஷனல் வங்கி

(சி.16449) (45.6.3)



வெற்றுப்பொருள் விற்பனை

எமது சங்கத்தின் கீழ்க் காணும் விவரப்படியான வெற்றுப்பொருள்கள் விற்பனை செய்யப்படவுள்ளன. இதற்கான தங்களின் கூறுவிலை விவரத்தினை சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

| தொடர் இல. | விவரம் | அளவு |
|---|---|---|
| 01 | அரிசி பை 50 கிலோ கிராம் | 1583 தனி |
| 02 | மா 25 கிலோ கிராம் | 2272 தனி |
| 03 | சீனி 50 கிலோ கிராம் | 940 தனி |
| 04 | வேறு வகைப்பை | 1446 தனி |
| 05 | சாக்கு | 121 தனி |

மேற்படி கூறுவிலைகள் சமர்ப்பிப்பதற்கான முடிவுதிகதி: 2015.06.12

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
தலைவர்:
யாழ்.பல.நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)
இல.127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி.16445)(45.7.3)


## காட்டு யானைகளால் மின்சாரவேலி சேதம்

அம்பாறை, ஜூன் 4



அம்பாறை, ஆலிம் நகர் பிரதேசத்திலுள்ள திண்மக் கழிவு சேகரிக்கும் நிலையத்தை சுற்றி அமைக்கப்பட்டிருந்த யானைத் தடுப்பு மின்சாரவேலி காட்டு யானைகளால் சேதமாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இந்த திண்மக்கழிவு சேகரிப்பு நிலைய ஊழியர்களிடம் இது குறித்துக் கேட்டபோது,

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் மின்னல் தாக்கம் காரணமாக இந்த யானைத்தடுப்பு மின்சாரவேலிக்கு மின்விநியோகித்துவந்த மின்பிறப் பாக்கி செயலிழந்தது. இதைத் தொடர்ந்து இந்த வேலிக்கு மின்விநியோகம் தடைப்பட்டது. இந்த நிலையிலேயே யானைத் தடுப்பு மின்சாரவேலியை உடைத்துக் கொண்டு திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தினுள் யானைகள் நுழைந்துள்ளன. மின்சாரம் தடைப்பட்டுள்ளமைதான் யானைகள் உள்நுழைவதற்குக் காரணமாகும். – என்றனர். (ந–10)


# மானிப்பாய் கோவில்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - (வரைவுள்ளது)

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான

# அறிவித்தல்

வடக்குக் கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்குக் கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகளின்படி வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் ஆகிய திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகிய நான் 1983 ஆம் ஆண்டில் 32 ஆம் இலக்கம் கொண்டதும், 1992 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கம் கொண்டதுமான கூட்டுறவுத் திருத்தச் சட்டங்களுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சட்டத்தின் ஏற்பாடுகளிற்கமைய எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மேற்படி சங்கத்தின் துணைவிதி பிரிவு 23 இற்கமைய சங்கத்தின் சகல கிளைகளிற்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

* அதற்கமைய இக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
* கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (¼) பங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ அத்தொகையாகும்
* தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இவ் ஒன்பது உறுப்பினர்களுள் ஆகக்குறைந்தது இருவர் (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
* சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) ஒன்பது பேருக்கும் மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.
* இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
* தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளரிற்கும், எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

## கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்

| தொ. இல. | கிளை இல. | கிளையின் பெயர் | திகதி | நேரம் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 03 | சுழிபுரம் | 07.06.2015 | மு.ப.10.00 மணி | கிளை இல.03 கிளைக்கட்டடம் | திருமதி சு. தர்சினி |
| 02 | 04 | ஆனைக்கோட்டை | 07.06.2015 | மு.ப.10.00 மணி | ஜே/132 கிராமசேவையாளர் அலுவலகம், கூழாவடி' | இ.புவன்ராஜ் |
| 03 | 05 | ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதி | 07.06.2015 | மு.ப.10.00 மணி | கிளை இல.05, கிளைக்கட்டடம் | ம.கபிலன் |
| 04 | 06 | நவாலி கிழக்கு | 07.06.2015 | மு.ப.10.00 மணி | முருகானந்தா சனசமூக நிலையம் நவாலி கிழக்கு | வி.பிரதீஸ்குமரன் |
| 05 | 07 | நவாலி மணிமண்டபம் | 07.06.2015 | மு.ப.10.00 மணி | கிளை இல.07 கிளைக்கட்டடம் | நா.குமணதாஸ் |
| 06 | 08 | நவாலி தெற்கு | 07.06.2015 | மு.ப.10.00 மணி | கிளை இல.08 கிளைக்கட்டடம் | வி.சரவணன் |
| 07 | 09 | நவாலி வடக்கு | 07.06.2015 | மு.ப.10.00 மணி | கிளை இல.09 கிளைக்கட்டடம் | கு.நிஷாந்தன் |
| 08 | 10 | மானிப்பாய் தெற்கு | 07.06.2015 | மு.ப.10.00 மணி | மானிப்பாய் இந்து சமய சங்கம் வேலக்கை பிள்ளையார் கோயிலடி | பா.கலைச்செல்வி |
| 09 | 11 | மானிப்பாய் வடக்கு | 07.06.2015 | மு.ப.10.00 மணி | தலைமைக்காரியாலயம் | திருமதி ஞா.ஜெயாமேரிகொன்சி |
| 10 | 12 | கட்டுடை | 07.06.2015 | மு.ப.10.00 மணி | கேலன்காமம் ஞான வைரவர் கோயில் சனசமூக நிலையம் | பொ.கோகிலன் |
| 11 | 13 | சண்டிலிப்பாய் மத்தி | 07.06.2015 | மு.ப.10.00 மணி | கிளை இல.13, கிளைக்கட்டடம் | க.சசிகரன் |
| 12 | 14 | சண்டிலிப்பாய் வடக்கு | 07.06.2015 | மு.ப.10.00 மணி | அகில இலங்கை சேக்கிழார் மன்றக் கட்டடம் | வ.நிதர்சன் |
| 13 | 15 | ஆலங்குழாய் | 07.06.2015 | மு.ப.10.00 மணி | ஆலங்குழாய் சனசமூக நிலையம் | இ.தயாகரன் |
| 14 | 16 | சுதுமலை வடக்கு | 07.06.2015 | மு.ப.10.00 மணி | நாமகள் சனசமூக நிலையம் | க.பாலகிருஷ்ணன் |
| 15 | 17 | சுதுமலை தெற்கு | 07.06.2015 | மு.ப.10.00 மணி | சுதுமலை மத்திய சனசமூக நிலையம் | செ.செல்வகுமாரன் |
| 16 | 19 | சாவற்கட்டு | 07.06.2015 | மு.ப.10.00 மணி | மகாத்மா சனசமூக நிலையம் | அ.தயாளன் |
| 17 | 20 | உயரப்புலம் | 07.06.2015 | மு.ப.10.00 மணி | கிளை இல.20, கிளைக்கட்டடம் | பா.பாலவரதன் |
| 18 | 23 | கெல்லாவில் | 07.06.2015 | மு.ப.10.00 மணி | யுவசக்தி சனசமூக நிலையம் | வி.ஜெயந்தன் |
| 19 | 24 | மாகியம்பதி | 07.06.2015 | மு.ப.10.00 மணி | கிளை இல.24, கிளைக்கட்டடம் | அ.விமல்ராஜ் |
| 20 | 25 | மானிப்பாய் வடகிழக்கு | 07.06.2015 | மு.ப.10.00 மணி | கிளை இல.25, கிளைக்கட்டடம் | திருமதி பு.தர்சினி |
| 21 | 32 | கொத்துக்கட்டி | 07.06.2015 | மு.ப.10.00 மணி | கிளை இல.32, கிளைக்கட்டடம் | பா.குருபரன் |

ஒப்பம்: திருமதி மதுமதி வசந்தகுமார்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வ-மா),
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,
[illegible] இல்ல வளாகம், கைதடி.

[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைனாக் கட்டர்
விற்பனைக்கு உண்டு



077 2718640

**பணிப்பெண் தேவை**

வயோதிபப்பெண் ஒருவரை வீட்டில்தங்கியிருந்து பராமரிப்பதற்கு 40வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் உடன் தேவை.

தொடர்பு: 077 028 0271

**யாழ்ப்பாணத்தில் பிரபல கட்டட நிர்மான நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை**

- மேசன் (Meson)
- தச்சு வேலை(Carpenter)
- கம்பி வேலை(Block smith)

தொடர்பு:077 312 6610 ,077 157 8595

**மணமகள் தேவை**

யாழ் இந்து, மலேசியா வாசியான மணமாகாத பொறியியலாளராகக் கடமையாற்றும் 56 வயதுடைய மணமகனுக்கு 45 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை.

தொடர்பு: pnmal1@yahoo.co.uk

T.P: 006 012 2822 117 (9ஆம் திகதிக்குப் பின்புதொடர்பு கொள்ளவும்)
076 591 2520

**தவறிவிட்டது**

பாலம் கோட்டை இறக்குவானைச் சேர்ந்த முனுசாமி சிவநேசன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (840371573 V) வாகனசாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் A.T.M வங்கி அட்டைகள் என்பன அடங்கிய பேர்ஸ் 29.05.2015 யாழ்நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 222 5531

**JCB(பைக்கோ) வாடகைக்கு**

குறிப்பு:- போக்குவரத்து கூலி அறவிடப்படமாட்டாது.

தொடர்பு இல.



சுன்னாகம்: 077 7712482
யாழ்ப்பாணம்: 0775932007

இல. 207,
புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்
K.K.S. றோட், சுன்னாகம்.

**வேலையாள்கள் தேவை (ஆண்)**

- விற்பனைப்பிரதிநிதி(கணினி அறிவுடையதங்கிநிற்போர் விரும்பத்தக்கது)
- சாரதி (கனரக வாகன அனு மதிப்பத்திரம்)
- கூலி ஆள்கள் (தங்கும் இடம் வழங்கப்படும்)

தொடர்பு: 077 386 7696
(60420)(5.3.6) 021 224 0514

**வேலைவாய்ப்பு**

**விமான நிலையம்**

கப்பலில்/விமானத்தில் வேலைசெய்ய விருப்பமா?
துறைமுகம் விமானநிலைய வேலைக்கு ஆண்/பெண் உடனடியாகத் தேவை. உயர் சம்பளத்துடன் (பின்னர் வெளிநாட்டு துறைமுகம் / விமான நிலையங்களில் தேவை)

தொடர்பு: 077 292 6935

**உற்பத்தி துறை**

மஞ்சி, மலிபன், நெஸ்லே, ரிஸ்பரி, ஏமாஸ் தொழிற்சாலைகளுக்கு ஆண்/பெண் தேவை. 18-35 35000/= உயர் சம்பளம் இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்.


தொடர்பு: 077 292 6468

**சாரதிகள்**

துறைமுகம் விமானநிலையத்திற்கு மென்ரக/கனரக சாரதிகள்/கன்டேனர் சாரதிகள்/ சாரதி உதவியா ளர்கள் நாடு முழுவதிலும் வேலைக்கு அனைத்து பிரதேசங்களுக்கும் தேவை. 35000 - 45000 உயர்ந்த சம்பளம்.( OTஉட்பட விசேட சலுகைகள்)

(60406)(9.1.3) தொடர்பு: 076 707 7084


# தன்ஸல் நிகழ்வில் தீப்பற்றியது ஓட்டோ



கொழும்பு, ஜூன் 4

பொஸன் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆரம்பித்து வைத்த தன்ஸல் தான நிகழ்வில் ஓட்டோ ஒன்று தீப்பற்றி எரிந்துள்ளது.

பராக்கிரம சமுத்திரத்துக்கு அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட தன்ஸல் தான நிகழ்வி லேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஓட்டோவில் பற்றிக்கொண்ட தீயைப் பிரதேச மக்கள் அணைக்க முற்பட்டபோதி லும் குறித்த ஓட்டோ முற்றாக எரிந்து நாசமாகியது.

தன்ஸல் தானத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் இந்தச் சம்பவத்தால் குழப்பத்திற்குள்ளாகினர். (ற-10)

# லொறிச் சில்லு காலில் ஏறி இளைஞர் காயம்

தென்மராட்சி, ஜூன் 4

லொறிச் சில்லு கால் பாதத்தில் ஏறியதில் காயமடைந்த குடும்பஸ்தர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று கொழகாமம் கெற்பேலியில் இடம்பெற்றது.

கெற்பேலி கிழக்கைச் சேர்ந்த தனபாலசிங்கம் பாலகிருஸ்ணன் (வயது-28 ) என்பவரே காயமடைந்தவராவார்.

பின்னோக்கி வந்த லொறிக்கு பின்பக்கத்தில் நின்று வழிகாட்டியாக செயற்பட்ட வேளையில் சில்லு கால் பாதத்தில் ஏறியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# திருஞானசம்பந்தர் குருபூசையும் திருமறைப்போட்டி பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஜூன் 4

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசையும் திருமறைப் போட்டி பரிசளிப்பு விழாவும் இன்று சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பி.ப 5.15 மணிக்கு குருபூசை உற்சவமும் 5.30 மணிக்கு திருமுறைமனனப்போட்டி பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளன.

சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் தலைவர் இரா.செல்வவடிவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அகில இலங்கைத் திருமுறை மன்ற அமைப்பாளர் சி.கிருஸ்ணமூர்த்தி கலந்துகொள்ளவுள்ளார். (ற-10)

# குறைகேள் நிலையமும் வருமான அறவீடும்

தென்மராட்சி, ஜூன் 4

சாவகச்சேரி நகர சபையின் ஒன்பதாம் வட்டார மக்களின் குறைகேள் நிலையமும் வருமான அறவீடும் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது

இன்று காலை 9.00 மணி தொடக்கம் சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்திலும் நாளை காலை சங்கத்தானை முருகன் சனசமூக நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி நகர் 9ஆம் வட்டாரம் மக்கள் தமது பகுதியில் உள்ள குறைபாடுகளை குறைகேள் நிலையத்தில் தெரிவித்து தீர்வு காணுமாறும், சபைக்குச் செலுத்த வேண்டிய வருமானங்களை இந்த நிலையத்தில் செலுத்தலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் சபையின் உறுப்பினர்கள் செயலாளர் உத்தியோகத்தர்கள் குறைகேள் நிலையத்தில் மக்களைச்சந்திக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)



முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் மத்திய குழு உறுப்பினர்கள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் கட்சியின் தலைவர் அமைச்சர் ரிசாத் பதியுதீனைச் சந்தித்து அவரது கட்சியில் இணைந்து கொண்டனர். (ற-10)

# சாவகச்சேரி நகர சபையின் வருமான அறவீடு கணினி மயம்

தென்மராட்சி, ஜூன் 4

சாவகச்சேரி நகர சபையின் அனைத்து வருமான அறவீடுகளும் கணினி மயப்படுத்தப்பட்டு வரியிறுப்பாளர்களுக்கு குறுகிய நேரத்தில் சிறந்த சேவைகள் வழங்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சபையின் ஆதனவரி அறவீடுகள் கடந்த 2013 ஆம் ஆண்டு தொடக்கம் கணினிமயப்படுத்தப்பட்டு ஆதனவரி அறவீடுகள் மட்டும் மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும் கடந்த முதலாம் திகதி தொடக்கம் அனைத்து வருமான அறவீடுகளும் கணினிமயப்படுத்தப்பட்டு வரியிறுப்பாளர்களுக்கு சேவைகளை வழங்கி வருவதாகவும் நகரசபைத் தலைவரால் தெரிவிக்கப்பட்டது. (ற-9)


**விற்பனைக்கு**

இல.84,86 கல்லூரி வீதி , நீராவியடி, யாழ்ப்பாணத்தில் 4 பரப்புக் காணியில் உள்ள 5 அறைகள், 2 குளியலறைகள் கிணற்றுடன் கூடிய வீடுவிற்பனைக்குண்டு.(2பரப்பு வீட்டுடனும், 2பரப்பு வெற்றுக் காணியாகவும் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்)

தொடர்பு: 077 807 2985

**காணி விற்பனை**

மட்டுவில் தெற்கு, பருத்தித்துறை வீதி துர்க்கை அம்மன் ஆலய வீதியின் ஆரம்பத்தில் காணி விற்பனைக்கு உண்டு .

தொடர்பு: 077 873 0129
(60419)(5.3.6)

**வீடு விற்பனைக்கு**

கைதடி தெற்கு, தட்டான் கலட்டி, கைதடி பொன்னம்பலம் எரிபொருள் நிரப்பு நிலைய வீதியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 300 8154




அனலைதீவு மனோன்மணி அம்பாள் ஆலய சப்பரம் மற்றும் தேர்த் திருவிழா என்பன கடந்த 31ஆம், 1ஆம் திகதிகளில் நடைபெற்றன. (ற-9)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



நாகலிங்கம் சிவநேசன் J.P
B.A,Dip.in Ed(Merit), Med, SLPS 1,
பிரதீபா பிரபா

யா/தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபரும் எமது ஆலயத்தின் நிர்வாகசபை உறுப்பினருமான நாகலிங்கம் சிவநேசன் 05.04.2011 இல் இருந்து இலங்கை அதிபர் சேவை தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று பல்லாண்டு காலம் ஆனந்தமாய் வாழ எல்லாம் வல்ல வீரபத்திரரின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அருள்மிகு வீரபத்திரர் ஆலயம், தாவடி வடக்கு.
நிர்வாகசபையும் அடியார்களும்.


# மரவள்ளிக்கிழங்கு தன்ஸல்



மட்டக்களப்பு, ஜூன் 04

சிறிலங்கா ரெலிகொம் மட்டக்களப்பு அலுவலகத்தின் ஏற்பாட்டில் பொஸன் தினத்தை முன்னிட்டு மரவள்ளிக்கிழங்கு தன்ஸல் நடைபெற்றது. செவ்வாய்க்கிழமை அலுவலகத்திற்கு முன்னால் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் மட்டக்களப்பு உதவி பொலிஸ் அத்தியட்சகர் அநுரத் ஹக்மன பண்டார, சிறிலங்கா ரெலிகொம் மட்டக்களப்பு முகாமையாளர் வை.கோபிநாத், பிராந்திய முகாமையாளர் எம்.பத்மநாதன், செயற்பாட்டு முகாமையாளர் என்.ஜெகதீஸ், மாகாண விற்பனை முகாமையாளர் சாமர ரத்னாயக்கா மற்றும் உதவி முகாமையாளர் எம்.ராஜா உட்பட சமயப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Microsoft Office 2016 Preview பதிப்பு அறிமுகம்

அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும் பல்வேறு வகையான வேலைகளுக்கு சிறந்த மென்பொருளாக மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் Microsoft Office மென்பொருள்கள் விளங்குகின்றன.

இந்த மென்பொருளில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி Microsoft Office 2007, Microsoft Office 2010, Microsoft Office 2013 ஆகிய பதிப்புக்கள் வெளியிடப்பட்டிருந்தன.

இந்தநிலையில் கடந்த 12 மாதங்களாக உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்த Microsoft Office 2016 பதிப்பின் Preview பதிப்பு தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த மென்பொருளை மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையப்பக்கத்திலிருந்து தரவிறக்கம் செய்து நிறுவிக்கொள்ள முடியும்.




## பரிசோதனையின்போது தானியங்கிக் கார்கள் விபத்து

# குழப்பத்தில் கூகுள்

சாரதி இன்றி தாமாகவே இயங்கக்கூடிய கார்கள் தற்போது 50 வரையில் காணப்படுகின்றன. இவற்றைக் கடந்த செப்ரெம்பர் மாதத்திலிருந்து பரிசோதனைக்கு உட்படுத்திய போது அவை இதுவரை 4 தடவைகள் விபத்தில் சிக்கியுள்ளன.

இதில் கூகுள் நிறுவனத்தின் கார்கள் உட்பட Delphi Automotive நிறுவனத்தின் கார்களும் அடங்கும்.

எனினும் இவ்விபத்துக்களின் போது கார்களுக்கு எவ்விதமான சேதங்களும் ஏற்படவில்ல என்று இரு நிறுவனங்களும் தெரிவித்துள்ளன. இதேவேளை – குறித்த கார்கள் மணிக்கு 10 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கும் போதே விபத்துக்குள் ளாகியுள்ளன.

## காலநிலையைத் தெரிவிக்கும் மிகச் சிறிய சாதனம்



Mind Lab எனும் நிறுவனம் கால நிலை பற்றிய தகவல்களை அறிவிக்கக்கூடிய உலகின் மிகச் சிறிய சாதனம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

Weather Point எனும் இந்தச் சாதனத்தை அதிகளவான வாடிக்கையாளர்களை ஈர்க்கும் பொருட்டும், 15,000 பவுண்ட்ஸ் நிதியினை ஈட்டும் பொருட்டும் Kickstarter தளத்தில் விளம்பரப் படுத்தப்பட்டுள்ளது.

இது வெப்ப நிலையை அளவிடும் கருவி, ஈரப்பதனை அளவிடும் கருவி மற்றும் கழி ஊதா கதிர்களின் அளவு என்பவற் றினை அளவிடும் கருவிகளை உள்ளடக்கியுள்ளது.

மேலும் இச்சாதனத்தினூடாக ஐஓஎஸ் மற்றும் அன்ரோய்– சாதனங்களுக்கு தகவல்களைப் பரிமாற்றம் செய்யும் வசதியும் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தாஜ்மஹாலுக்கு மூன்றாம் இடம்

டில்லி,ஜூன் 4

உலகில் தலைசிறந்த அடையாளங்களுக்கான பட்டியலில் இந்தியாவின் தாஜ்மஹாலுக்கு மூன்றாவது இடம் வழங்கப்பட்டுள்ளது.

உலகின் பல்வேறு பகுதிகளுக்குச் சுற்றுலா செல்பவர்களுக்கான ஆலோசனைகளை வழங்கிவரும் பன்னாட்டு நிறுவனம் ஒன்று, உலகெ வில் சிறந்த அடையாளங்கள் குறித்து பட்டியலொன்றை வெளியிட்டது.

அதில் இந்தியாவின் ஆக்ராவில் யமுனை நதிக் கரையில் அமைந்துள்ள தாஜ்மஹால் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. பெரு நாட்டில் உள்ள மச்சு பிச்சு மலைக் கோயில் உலகின் முதலாவது தலை சிறந்த அடையாளக் குறியீடாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது இடத்தில் கம்போடியா நாட்டில் தமிழ் மன்னன் சூரியவர்மன் கட்டிய 'அங்கோவாட்' ஆலயம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியல் பல கோடி சுற்றுலா பயணிகளின் தேர்வின் முடிவாக வெளியாகியுள்ளது.

உத்தரப்பிரதேசம் மாநிலத்தின் ஆக்ரா நகரில் மொகலாய மன்னர் ஷாஜஹானால் 1631 ஆம் ஆண்டு முதல் 1654 ஆம் ஆண்டுக்கு இடையில் கட்டிமுடிக்கப்பட்ட தாஜ் மஹால், முழுவதும் பளிங்குக் கற்களால் உருவாக்கப்பட்டது. தனது மனைவி மும்தாஜின் நினைவாக ஷாஜஹான் கட்டிய தாஜ் மஹால் காதலின் சின்னமாகக் கருதப்பட்டுவருகிறது. மேலும், உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகவும் விளங்கிவருகிறது. வருடத்துக்கு சுமார் 40 லட்சம் மக்கள் தாஜ்மஹாலைக் கண்டு, களித்துச் செல்கின்றனர்.

அவர்களில் 2 லட்சத்துக்கும் அதிகமானோர் வெளிநாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப்பயணிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (14)

# இந்தியா – சுவீடன் இடையே முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்து

ஸ்டாக்ஹோம்,ஜூன் 4

இந்தியா – சுவீடன் இடையே பாதுகாப்பு, வர்த்தகம் உள்ளிட்ட துறைகள் தொடர்பாக பல்வேறு முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

சுவீடனுக்கு மூன்று நாள் அரசு முறைப் பயணமாக குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்றார். அதன் மூலம் அந்த நாட்டுக்குச் செல்லும் முதல் இந்தியக் குடியரசுத் தலைவர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

அப்போது அவர், அந்த நாட்டின் பிரதமர் ஸ்டீபன் லோப்வெனுடன் பேச்சு நடத்தினார். இரு நாடுகளுக்கிடையேயான பாதுகாப்பு, தொழில், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் நிலவும் நல்லுறவு குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

இந்த நிலையில், சுற்றுப்பயணத்தின் இரண்டாவது நாளில் இரண்டு நாடுகளிடையே பல்வேறு துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

இதுகுறித்து இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் நவ்தேஜ் சர்னா கூறியதாவது:

இரு நாடுகளிடையே நல்லுறவை மேம்படுத்தும் வகையில் இருதரப்பு பேச்சு நடவடிக்கைகளைப் புதுப்பித்தல், இந்திய இராணுவத் துறையில் சுவீடன் நாட்டு முதலீடுகளை அனுமதித்தல், சிறு, குறு, நடுத்தர நிறுவனத் துறையின் கட்டமைப்புகளை மேம்படுத்துதல் உள்ளிட்டவை தொடர்பான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இது தவிர, நகர வளர்ச்சி, சுகாதாரம், துருவங்கள் மற்றும் ஆழ்கடல் ஆராய்ச்சி ஆகிய துறை களில் ஒத்துழைப்பை மேம்படுத் துதல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகியுள்ளன.

முதற்கட்டமாக, இரு தரப்பு பேச்சு நடைமுறைகளை முன் னெடுத்துச் செல்லும் வகையில் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இந்தியப் பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் உள்ள சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக, சுவீடன் பாதுகாப்புத் துறை அமைச்சர் பீற்றர் ஹல்ட்க்விஸ்ட் இந்த மாதம் இந்தியா வரவுள்ளார் என நவ்தேஜ் சர்னா தெரிவித்துள்ளார். (14)



## மோடிக்கு எதிராக காங்கிரஸ் மனு

டில்லி,ஜூன் 4

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நாடாளுமன்றப் பதவியிலிருந்து தகுதிநீக்கம் செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி, தேர்தல் ஆணையத்திடம் மனு அளித்துள்ளது.

காங்கிரஸ் கட்சியின் சட்டபிரிவு செயலாளர் கே.சி.மிஸ்ரா, காங்கிரஸ் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜேஷ்மிஸ்ரா ஆகியோர் இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் முறைப்பாட்டு மனு ஒன்றை அளித்துள்ளனர்.



அந்த மனுவில், பிரதமர் மோடி போட்டியிட்டவாரணாசி தொகுதியில் தேர்தல் செலவுக்கணக்கை முறையாகத் தாக்கல் செய்யவில்லை. வாரணாசி தொகுதியில் தேர்தல் அலுவலகத் துக்கு 2 கோடி ரூபாய் செல விடப்பட்ட நிலையில், அதனைத் தேர்தல் செல வுக் கணக்கில் மோடி தெரிவிக்கவில்லை.

எனவே, முறையாகத் தேர்தல் செலவுக் கணக்கைக் காட்டாததால் மோடியைத் தகுதிநீக்கம்செய்ய வேண்டும் என்றும் பிரதமர் பதவியிலிருந்து மோடி விலக வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர். (14)

## புகையிலை நிறுவனங்களுக்கு கனடாவில் அதிரடியான தீர்ப்பு

ரொறான்ரோ,ஜூன் 4

சிகரெட்டுகளைத் தயாரிக்கும் நிறுவனங்கள் புகை பிடிப்பதால் உடலுக்கு ஏற்படும் ஆபத்துக்கள் குறித்து போதிய எச்சரிக்கை விடுக்காததால் 12 பில்லியன் டொலர் களுக்கும் அதிகமான நஷ்ட ஈடு வழங்குமாறு மூன்று புகையிலை நிறுவனங்களுக்குக் கனடா நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

லட்சக் கணக்கானோருக்கு கோடிக் கணக்கான டொலர்கள் நஷ்ட ஈடு வழங்குமாறும் உத்தர விடப்பட்டுள்ளது.

புகை பிடிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து தங்களுக்கு போதிய எச்சரிக்கை விடுக்கப்படவில்லை என்று கூறி, புகை பிடிப்பவர்கள் கனடாவின் கியூபெக் மாகாணத்தில் இந்த வழக்கை முன்னெடுத்தனர்.

இந்த வழக்கை புகை பிடித்ததால் மிகவும் மோசமான உடல்நலக் குறைபாடுகள் ஏற்பட்ட ஒரு குழுவினரும், புகைபிடிக்கும் பழக்கத்துக்கு அடிமையாகி அதிலிருந்து மீள முடியாமல் தவிக்கும் ஒரு குழுவினரும் இணைந்து முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.(14)





## வீடின்றி வசிப்பவருக்காக பணம் திரட்டும் மாணவி

வீடின்றி சாலையில் வசிக்கும் நபர் ஒருவருக்காக மனித நேயமிக்க பல்கலைக்கழக மாணவி ஒருவர் பணம் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

ஸ்கொட்லாந்தில் உள்ள டுண்டி பல்கலைக்கழகத்தில் பயிலும் அன்னா லவ்டன் என்ற மாணவி உணவகம் ஒன்றுக்குச் செல்லும் போது வீதியில் படுத்துறங்கிக் கொண்டிருந்த நபர் ஒருவரைக் கண்டார்.

கார் விபத்தொன்றில் சிக்கியதால் நடக்கமுடியாமல் கடந்த 9 மாதங்களாக சாலையில் வசித்து வருவதாக அந்த நபர் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கடுங்குளிரால் பாதிக்கப்படுவதையும் அவருக்கு இதயத்தில் சிகிச்சை மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. என்பதையும் அந்த மாணவி அறிந்து கொண்டார்.

பின்னர் அவர் தங்குவதற்கு ஒரு வீட்டை ஏற்பாடு செய்வதற்காக பணம் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டார். அந்த நபருடன் வீதியில் வைத்து தேநீர் அருந்துவது போன்ற புகைப்படத்தை சமூக வலைத்தளத்தில் பதிவேற்றினார். இதனைப் பார்த்த நண்பர்கள் நிதியுதவியை வழங்கியுள்ளனர். இதுவரை 4 ஆயிரத்து 500 டொலர் சேர்ந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (14)

## ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் இணையும் இந்தியர்கள்

### உளவுத்துறை தகவல்கள் வெளியாகின

டில்லி,ஜூன் 4

இந்தியாவைச் சேர்ந்த 11 பேர், ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் இணைந்தனர் என்று உளவுத்துறைத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈராக்மற்றும்சிரியாவில்பெரும்பகுதிகளை கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஐ.எஸ் தீவிரவாதிகள் அந்தப் பகுதிகளை இஸ்லாமிய நாடாக அறிவித்துள்ளனர். ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக உலக நாடுகளின் படை வான்வழித் தாக்குதலை நடத்திவருகிறது. இருப்பினும் ஐ.எஸ். தீவிரவாதிகள் கைகள் ஓங்கிய வண்ணமே உள்ளது. இந்த நிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக தடும் நடவடிக்கைகளுக்கு உலக நாடுகள் தலைமை தாங்கி வருகின்றன.



இந்த நிலையில் மும்பையைச் சேர்ந்த 4 இளைஞர்கள் உட்பட இந்தியாவில் 11 பேர் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் இணைந்துள்ளனர் என்று உளவுத்துறைத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையே சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் இணைந்து போரிடும் இந்தியர்கள், பெரும் நம்பிக்கையை இழந்து இந்தியாவுக்குத் திரும்பிவிடும் நிலைமையில் உள்ளதாகவும் உளவுத்துறைக்கு தகவல் கிடைத்துள்ளது என்று கூறப்படுகிறது. (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூழ்கிய சீனக் கப்பலைத் தேடும் பணி தீவிரம்

பீஜிங்,ஜூன் 4
சீனாவில் கப்பலொன்று ஆற்றில் மூழ்கி விபத்துக்குள்ளாகியதில் 7 பேர் உயிரிழந்தனர் என்றும் மேலும் 430 பேரைக் காணவில்லை என்றும் அரசதரப்பில்தெரிவிக்கப்பட் டுள்ளது.

சீனாவில் ஜியாங்சு மாகாணத்தின் தலைநகரான நான்ஜிங்கில் இருந்து, தென்மேற்கு நகரமான சோங்கிங் நோக்கி 4 அடுக்குகளைக் கொண்ட ஈஸ்டர்ன் ஸ்டார் என்ற பயணிகள் கப்பலில் பயணிகள் 405 பேர், பயண நிறுவன ஊழியர்கள் 5 பேர், ஊழியர்கள் 46 பேர் என மொத்தம் 456 பேர் பயணம் செய்தனர். கடந்த திங்கட்கிழமை இரவு ஆசியாவின் மிக நீளமான நதியான யாங்ட்ஸே ஆற்றில் சென்று கொண்டிருந்தது.

அப்போது பயங்கர சூறாவளி வீசியது. அந்த சூறாவளியில் சிக்கி நிலை தடுமாறிய கப்பல், ஆற்றில் கவிழ்ந்தது. இது குறித்த தகவல் அறிந்ததும், மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டன. விபத்துக்குள்ளான கப்பலின் சிதைவுகள், 15 மீற்றர் ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டன.

அங்கு மீட்பு பணியில் இராணுவ வீரர்கள், பொலிஸார், மீட்புப் படையினர், தீயணைப்பு படையினர் என 4 ஆயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர். சுழியோடிகள் ஆற்றில் இறங்கி பயணிகளை மீட்கத் தொடங்கியுள்ளனர். முதலில், கப்பலின் கப்டன், இயக்குநர் உட் பட 14 பேர் இதுவரையில் மீட் கப்பட்டுள்ளனர். கப்பலின்சிதைவுகளில் இருந்து 65 வயது பெண் ணும், 21 வயது இளைஞரும் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் 7 பேர் உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது. 430 பேரைக் காணவில்லை. அவர்களது கதி என்ன ஆனது என தெரியவில்லை. தொடர்ந்து மழை பெய்து சிரமமான வானிலை நிலவியபோதி லும் மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. விபத்துக்குள் சிக்கிய கப்பலில் இருந்து மீட்கப்பட்ட மாலுமி மற்றும் இயக்குநரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர். (14)



## இந்தோனேசியா அருகே அகதிகள் படகு விபத்து 65 பேர் உயிருடன் மீட்பு

ஜகர்த்தா,ஜூன் 4
பங்களாதேஷ், மியன்மார் நாடுகளைச் சேர்ந்தவர்கள் சட்ட விரோதமாக படகுகள் மூலமாக பயணம் செய்து பிற நாடுகளில் அகதிகளாக குடியேறி வருகிறார்கள். இவ்வாறு அவர்கள் செல்லும் பாதுகாப்பற்ற படகுப் பயணத்தால் பலமுறை விபத்து ஏற்பட்டு உயிர் இழப்புகள் நிகழ்கின்றன.

இந்தநிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கையைச் சேர்ந்த 54 பேர், பங்களாதேஷத்தைச் சேர்ந்த 10 பேர், மியன்மாரைச் சேர்ந்த ஒருவர் என மொத்தம் 65 பேர் ஒரு படகில் மத்திய தரைக் கடல் வழியாக ஆஸ்திரேலியா நோக்கிப் பயணம் மேற்கொண்டனர். அவர்கள் சென்ற படகு இந்தோனேசியா அருகே பாறையில் மோதி விபத்தில் சிக்கியது. உடனே அவர்களை இந்தோனேசிய கடற்படையினர் உயிருடன் மீட்டனர். பாறையில் மோதிய படகு, ஆஸ்திரேலிய நாட்டு கடற்படை கப்பல் மூலமாக மீட்கப்பட்டது. (14)

# தெற்கு சூடானுக்கு பான்கீ-மூன் கண்டனம்

நியூயோர்க்,ஜூன் 4
தெற்கு சூடானுக்கான ஐ.நா. அமைப்பின் துணைப் பிரதிநிதியை வெளியேற்ற அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளதற்கு ஐ.நா. பொதுச் செயலர் பான் கி-மூன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. துணைப் பிரதிநிதி டாபி லான்ஸரை நாட்டைவிட்டு வெளியேற்றும் முடிவை தெற்கு சூடான் அரசு உடனடியாகக் கைவிட வேண்டும். போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள தெற்கு சூடானில், மக்களுக்குத் தேவையான மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதில் டாபி லான்ஸர் மிக முக்கியப் பங்கு வகித்துள்ளார்.



அந்த மனிதாபிமானப் பணிகள் மக்களுக்கு தொடர்ந்து சென்றடைவதை உறுதி செய்யும் வகையில், அவர் அங்கு தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்பட வேண்டும் என்று பான் கீ-மூன் வலியுறுத்தினார்.

டாபி லான்ஸரின் பதவிக் காலம் விரைவில் முடிவடையவிருக்கும் நிலையில், அவரை நாட்டை விட்டு வெளியேற்ற முடிவு செய்திருப்பதாக தெற்கு சூடான் அரசு ஐ.நா.விடம் தெரிவித்தது.

எனினும், அந்த முடிவுக்கான காரணம் என்ன என்பதை தெற்கு சூடான் தெளிவுபடுத்த வில்லை. (14)

## ஜோன் கெர்ரிக்கு அறுவைச் சிகிச்சை

வொஷிங்டன்,ஜூன் 4
அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் ஜோன் கெர்ரிக்கு வலது காலில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளராக உள்ள ஜோன் கெர்ரி, ஜெனிவாவில் இருந்து 30 மைல் தொலைவில், பிரான்ஸ் நாட்டுக்கு உட்பட்ட பகுதியில், சைக்கிள் சவாரி மேற்கொண்டார்.

அவருக்கு முன்னாலும், பின்னாலும் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் மருத்துவக் குழுவினர் கார்களில் சென்றனர். ஓர் இடத்தில் நடைபாதையில் இருந்த பெரிய கல் மீது ஜோன் கெர்ரியின் சைக்கிள் மோதியது. அடுத்த விநாடி, ஜோன் கெர்ரி கீழே விழுந்தார். அதில் அவரது வலது கால் முறிந்தது.

இதையடுத்து அவரது பாதுகாப்புக்கு வந்த பொலிஸார் அவரை உடனடியாக மீட்டு ஹெலிகொப்டர் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மேலும் அவருக்கு ஏற்பட்டுள்ள இந்த விபத்தினால் ஈரான் அணுசக்தி குறித்த பேச்சுக்கள் தாமதம் ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

## பாகிஸ்தானில் இராணுவத்தினர் திடீரென அதிரடித் தாக்குதல்

### 14 தீவிரவாதிகள் சாவு

இஸ்லாமாபாத்,ஜூன் 4
பாகிஸ்தானில் இராணுவத்தினர் நடத்திய அதிரடித் தாக்குதலில் 14 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் பெஷாவர் பாடசாலையில் தீவிரவாதிகள் நிகழ்த்திய தாக்குதலுக்கு பின்னர் அவர்கள் மீதான தாக்குதலை பாகிஸ்தான் இராணுவம் தீவிரப்படுத்தியுள்ளது.

இதனையடுத்து தீவிரவாதிகளின் முகாம்களும், பதுங்கும் இடங்களும் பாதுகாப்பு படையினரால் அழிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் நேற்று முன்தினம் பல்வேறு இடங்களில் எல்லைப் பாதுகாப்பு படையினர் அதிரடியாகப் புகுந்து தாக்குதலில் ஈடுபட்டனர்.

பின்னர் கலாத் மோர்கான் ஹார்பாய் பகுதியில்எல்லைப்பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே பயங்கர துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. அதில் 9 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதுடன், 2 இராணுவ வீரர்கள் படுகாயம் அடைந்தனர்.

இந்த நிலையில் கொல்லப்பட்ட தீவிரவாதிகள் ஹார்பாயில் உள்ள இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டு இருந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதேபோன்று பன்ஜ்குர் மாவட்டத்தில் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 4 தீவிரவாதிகளும், கோகிலோவில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் ஒரு தீவிரவாதியும் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதல்களின்போது தீவிரவாதிகளிடம் இருந்து பயங்கர ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (14)

## 65 வருடங்களின் பின்னர் இணைந்த காதல் ஜோடி

ரொறான்ரோ,ஜூன் 4
கனடாவில் 65 வருடங்களுக்குப் பின்னர் காதல் ஜோடியொன்று இணைந்துள்ள நெகிழ்ச்சியான சம்பவம் நடந்துள்ளது.



கனடாவின் ரொறொன்ரோவைச் சேர்ந்த 83 வயதான ஜோர்ஜ் கிரான்ட் மற்றும் டொறின் ஆகிய இருவரும் உயர்நிலை பாடசாலையில் நண்பர்களாவர். நண்பர்களாக இருந்த அவர்கள் நாளடைவில் காதலர்களாக மாறினர், ஆனால் ஜோர்ஜக்கு வேலை கிடைத்து ஓட்டாவாவுக்குச் சென்று விட்டதால், இருவரும் பிரிந்துவிட்டனர். பின்னர், இருவரும் வெவ்வேறு நபர்களைத் திருமணம் செய்து கொண்டனர், இந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் சந்தித்த அவர்கள் தங்கள் பழைய நினைவுகள் பற்றி பகிர்ந்துகொண்டனர்.

இருவரும் தங்கள் வாழ்க்கைத் துணைகளை இழந்தவர்கள், இந்த நிலையில் அவர்கள் இருவரும் இந்த வாரம் திருமணம் செய்து கொள்ளப்போவதாக அறிவித்துள்ளனர். (14)

## பழைமைவாத யூதர்களால் பொருளாதாரத்துக்குப் பாதிப்பு

இஸ்ரேலில் அதிகரித்து வரும் அதீத பழைமைவாத யூதச் சமூகத்தினர் மற்றும் அரேபியர்களின் மக்கள் தொகை காரணமாக நாட்டின் நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கு பாதிப்பு ஏற்படலாம் என்றுஇஸ்ரேலிய மத்திய வங்கியின் தலைவர் கார்னித் [illegible] எச்சரித்துள்ளார்.

இந்த சமூகத்தினரில் பெரும்பான்மையினர் தொழிலுக்கு செல்லாமல் போனால் ஏனைய அபிவிருத்தி அடைந்த நாடுகளோடு ஒப்பிடுகிறபோது இஸ்ரேல் [illegible] அளவு பின்னடைவைக் கொண்டிருக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் நலத்திட்ட நிதியை [illegible] றுக்கொள்ளும்அதீதபழைமைவாத யூதர்கள் பெரும்பாலும் [illegible] வேலையையும் செய்வதில்லை, பதிலாக மதக்கல்வியிலேயே [illegible] முழு நேரத்தையும் செலவிடுகிறார்கள் என்றும் அரச [illegible] கூறுகிறது.

அதேவேளை இஸ்ரேலில் உள்ள அரேபியப் பிரஜைகள் [illegible] களோடு ஒப்பிடுகிறபோது [illegible] குறைந்த வேலை வாய்ப்பு [illegible] வழங்கப்படுவதாக முறை[illegible]றார்கள். இவ்விரு பிரிவி[illegible] இஸ்ரேலிய சனத்தொகையி[illegible] சதவீதத்தினர் ஆவார். (14)

# மாயமான மலேசிய விமானத்தில் காணாமல் போனவர்களுக்கு நஷ்டஈடு

மலேசியாவின் விமான நிறுவனத் துக்கு எதிராக அந்த நாட்டைச்சேர்ந்த இரண்டு சிறுவர்கள்; கொண்டு வந்த வழக்கு நீதிமன்றத்துக்கு வெளியே எட்டப்பட்ட உடன்பாட் டின் மூலம் தீர்க்கப்பட்டுள்ளது.

எம்.எச் 370 விமானத்தைத் தேட பல நாடுகள் இணைந்து முயற்சிகள் மேற்கொண்டன. தமது தந்தை பயணித்த விமா னம் காணாமல் போன சம்பவம் தொடர்பில், மலேசியன் ஏர் லைன்ஸ் நிறுவனம் கவனக் குறைவாக இருந்தது என அந்தச் சிறு வர்கள் வழக்கை முன்னெடுத்தனர்.

மலேசிய விமானம் எம்.எச் 370 நடுவானில் காணாமல்போனபின்னர் முதலாவதாத் தொடுக்கப்பட்ட வழக்கு இதுதான் என்று நம்பப் படுகிறது. கோலாலம் பூரிலிருந்து பீஜிங்கிற்குச் சென்று கொண்டிருந்தபோது காணாமல்போன அந்த விமானத்தில் 230 இற்கும் அதிகமானோர் இருந்தனர்.

தமது பிள்ளைகளது வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில், தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நஷ்ட ஈட்டை தாம் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர்களது தாய்மார் தெரிவித்துள்ளார். எனினும்நஷ்டஈட்டுத்தொகைஎவ் வளவு என்பது வெளியிடப்பட வில்லை.

இதேவேளை காணாமல் போன அந்த விமானத்தை தேடும் பணி தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்தியப் பெருங்கடலில் தமது விமானம் காணாமல் போன சம்பவத்தை ஒரு விபத்து என்று மலேசியா அறிவித்துள்ளது. (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்துபோன அந்தக் காலம்

● ராஜராஜன்





அந்த இளம் பராயத்து நினைவுகள் மனதில் எழும் போது நெஞ்சுக்குள் ஏதோ செய்வதைப் போன்றதொரு உணர்வு எழுகின்றது. அப்போதெல்லாம் அவசரப்படுகின்ற மனிதர்களைக் காணவே முடியாது. சகலதையும் ஆற அமர யோசித்துச் செய்வதற்குப் போதிய அவகாசம் இருந்தது. தேவைகள் குறைவாக இருந்ததால் தேடல்களுக்கான அவசியமும் இருக்கவில்லை. சிறுவர்களால் மனஅழுத்தம் ஏதுமின்றி மகிழ்ச்சியுடன் - இருக்க முடிந்தது.

ஒன்றிரண்டு சோடி ஆடைகளைத் தினமும் தோய்த்து அணிவதும், செருப்பு அணியாத வெறும் கால்களுடன் கொதிக்கும் வெயிலில் கூட நடந்து செல்வதும் அப்போதெல்லாம் கடினமான விடயங்களாகத் தெரியவில்லை.

பாடசாலை செல்லும்போது வழியில் தென்படும் மாங்காய், புளியங்காய் எதுவாக இருந்தாலும் எமது கண்களிலிருந்து தப்பவே முடியாது. அவற்றையெல்லாம் ஒரு கை பார்த்துவிட்டுத்தான் அப்பால் செல்வோம்.

எம்மூர் கதிரவேலர் மரவள்ளிப் பயிரைப் பயிரிடுவதில் மிகுந்த அனுபவசாலி. ஆண்டு தோறும் மரவள்ளியைப் பயிரிடுவதற்கு அவர் தவறமாட்டார். மரவள்ளிக் கிழங்கு எப்போது முற்றிப் பதமாகும் என்பது கதிரவேலரைவிட எமக்குத்தான் அச்சொட்டாகத் தெரியும். கிழங்கு முற்றிவிட்டது என்பதை உறுதி செய்துவிட்டு இரவு வேளையில் அவரது தோட்டத்தில் இறங்கி விடுவோம். சேகரித்த கிழங்குகளை ஏதோவொரு மறைவிடத்தில் தீமூட்டி வேக வைத்து உண்பதில் உள்ள சுகமே தனியானது. மறுநாள் காலையில் தோட்டத்தைப் பார்வையிடும் கதிரவேலர் வேதனையில் அழும்போது அவருக்கு அனுதாபம் தெரிவிப்பதற்கு முன்னுக்கு நிற்பவர்கள் நாங்கள் தான்.

மாரிகாலத்தில் வயல் கிணறுகள், குளங்கள், நீரோடைகள் ஆகியவற்றில் இறங்கி நீந்தி விளையாடுவோம். பயம் என்பது அப்போது எமது அகராதியில் காணப்படவில்லை.

அந்த நாள்களில் பாடசாலைகளில்தான் கல்வியைப் பெறமுடியும். இப்போதுள்ளதைப்போன்று தனியார் கல்வி நிலையங்களைப் பார்க்கவே முடியாது. காலையில் பாடசாலை சென்று மதியம் வீடு திரும்பினால் கிடைத்ததை உண்டுவிட்டு பொழுது சாயும்வரை விளையாட்டில் ஈடுபடுவோம். இன்று சிறுவர்களுக்கு விளையாட்டில் ஈடுபடுவதற்கு நேரம் கிடைப்பதில்லை. எந்த வேளையிலும் படி, படி என்ற பெற்றோரின் நச்சரிப்பு அவர்களை மன அழுத்தத்தினுள் தள்ளிவிடுகின்றது. அதிகாலை வேளையிலும்கூட தனியார் வகுப்புக்களுக்குச் செல்லும் சிறார்களைக் காண்கின்றோம். தூக்கம் கலையாத நிலையில் அவர்கள் செல்லுகின்ற கோலத்தைப் பார்க்கும் போது வேதனைதான் ஏற்படுகின்றது.

இலுப்பை மரங்கள் காய்க்க ஆரம்பிக்கும்போது எமது பாடு கொண்டாட்டம்தான். இலுப்பம் பழங்களைப் பொறுக்கி எடுப்பதற்கு அதிகாலை வேளையிலேயே ஆரம்பித்து விடுவோம். ஒவ்வொரு இலுப்பை மரமாகத் தேடிச்செல்வோம். வீடு திரும்பும்போது கணிசமான இலுப்பை விதைகள் சேர்ந்து விடும். வீட்டில் உள்ளவர்கள் அவற்றை வெயிலில் காயவைத்துப் பின்னர் வித்துக்களைச் சேகரித்து வைப்பார்கள். இலுப்பை எண்ணெய் விற்பவர்கள் வீடு வீடாக வந்து இலுப்பை விதைகளைப் பெற்றுக்கொண்டு அதற்கு ஈடான இலுப்பெண்ணெயைக் கொடுப்பார்கள். தலையில் தேய்த்து முழுகுவதற்கு அரப்பும் கிடைத்துவிடும். இதற்கிடையில் இலுப்பை விதைகளைப் பயன்படுத்தி விளையாட்டுக்களிலும் ஈடுபடுவோம்.

கிளித்தட்டு, கிட்டிப்புள் விளையாட்டுக்கள் அப்போது பிரபலமாக விளங்கின. சிலர் உதைபந்தாட்டத்திலும் ஈடுபடுவார்கள். கிரிக்கெட் விளையாட்டுத் தொடர்பாக எவரும் ஆர்வம் காட்டுவதில்லை. மாடுகளுக்கு அப்போதெல்லாம் செயற்கை உணவுகள் வழங்கப்படுவதில்லை. வயல் வெளிகளில் பசிய புல்லை மேய்ந்துவிட்டு வருகின்ற பசுக்கள் தருகின்ற பால் அமிர்தமாக இனிக்கும். இந்தப் பாலில் கொழுப்புச் சத்துக் குறைவாக இருப்பதால் இதய நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக் குறை வாகவே இருக்கும்.

இவ்வாறு அந்த இளமைக்கால நினைவுகளை மீட்டுக்கொண்டே போகலாம். அதில் உள்ள சுகமும், இதமும் – தனித்துவம் வாய்ந்தவை. ஆனால் இன்று நாம் அந்த அனைத்தையும் இழந்து நிற்கின்றோம். மீண்டும் அந்தப் பொற்காலம் ஏற்படுமா என்ற கேள்விக்கு இல்லை என்பதுதான் பதிலாக இருக்கும்.

# வர்ணப்பூச்சு பூசுவோர் கல்வியகத்தை ஆரம்பித்து வைக்கிறார் லங்கெம் நிறுவனம்




ரொபியலக் வர்த்தக குறியீட்டிலான பெயின்ட் (வர்ணப்பூச்சு) வகைகளின் உற்பத்தியாளரும் சந்தைப்படுத்துநருமாக திகழும் லங்கெம் பெயின்ட்ஸ் லிமிட்டெட் நிறுவனமானது, வர்ணம்பூச்சு பூசுவோர் கல்விய கத்தை அண்மையில் ஆரம்பித்து வைத்துள்ளது. இக் கல்வியகமானது இனிவரும் காலங்களில் இலங்கையில் வர்ணப் பூச்சு வகைகளைப் பிரயோகிக்கும் நபர்களை பயிற்றுவிப்பதுடன், வாழ்க்கைக்கு தேவையான விஞ்ஞான பூர்வ திறனை வழங்கி அவர்களை வலுவூட்டும் வகையில் செயற்படும்.

இலங்கையில் இதுபோன்றதொரு முதன்முதலான திட்டமாக காணப்படும் ரொபியலக் கல்வியக மானது லங்கெம் பெயின்ட்ஸ் நிறுவனத்தின் மிகப் புதிய கூட்டாண்மை சமூகப் பொறுப்பு முன்னெடுப்பாக அமைவதுடன், எவ்வாறு வர்ணம் பூசுவது என்பதை கற்றுக்கொள்ள விரும்புகின்ற நபர்களுக்கு வர்ணம் பூசும் துறை சார்ந்த தொழில் சார் பயிற்சிநெறி ஒன்றை எவ்வித கட்டணமும் இன்றி முற்றுமுழுதாக இலவசமாக வழங்குகின்றது.

இந்த கல்வியகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள முதலாவது தொகுதி பயிலுநர்களுள் வெயாங்கொடை, களனி, மாலபே, கேகாலை, ஹங்வெல்ல மற்றும் பிலியந்தல போன்ற வேறுபட்ட பல பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்கள் உள்ளடங்கியுள்ளனர். இலங்கையின் அனைத்து பாகங்களிலும் இருந்து கிடைக்கப் பெற்ற பல நூற்றுக் கணக்கான விண்ணப்பங்களுள் இருந்து இவர்கள் தெரிவு செய்யப் பட்டனர். அதன் பின்னர் நான்கு வார காலப் பகுதியில் செயல் விளைவுமிக்க தீவிர பயிற் சியை இவர்கள் நிறைவு செய்திருக் கின்றனர்.

இந்தப் பயிற்சிக் காலப்பகுதியில், மேற்படி பங்குபற்றுநர்கள் ஆறு பேரும் இத் துறையிலுள்ள மிக முக்கியமான விடயங்கள் தொடர்பில் பயிற்றுவிக்கப்பட்டனர். வர்ணப்பூச்சுகள், மேற்பூச்சு முறைமைகள், உற்பத்திகள் மற்றும் அவற்றின் பயன்பாடு போன்ற விடயங்கள் பற்றி அவர்களுக்கு முழுமையானதொரு விளக்கம் அளிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, சுவர் மேற்பரப்புகளை தயார்படுத்தல், சரியான பதத்துடன் வர்ணப் பூச்சை கலத்தல், வர்ணப் பூச்சை பூசுவதற்கான மிகச் சரியான வழிமுறை மற்றும் வர்ணம்பூசும் செயன்முறையில் வர்ணப்பூச்சை மீதப்படுத்துவது எவ்வாறு போன்ற விடயங்கள் [illegible] குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. இலங்கையின் வர்ணப்பூச்சுத் துறையில் வெற்றிகரமானதும் பல முக்கிய நிகழ்வுகளைக் கொண்டதுமான 30 வருடங்கள் நிலைத்திருந்த நிறுவனம் என்ற வகையில், நாம் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்ற இத் துறைக்கு பிரதியுபகாரம் செய்ய வேண்டிய காலம் கனிந்து வந்திருக்கின்றது என்று நாம் உணர்ந்து கொண்டோம். இலங்கையில் பரந்தளவிலான திறன்கள் காணப்படுகின்றன. எனவேதான், இவ்வாறான இளம் ஆண்களுக்கும் ஏன் பெண்களுக்கும் கூட வாழ்க்கைக்குத் தேவையான ஒரு ஆற்றலை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு வலுவூட்ட நாம் விரும்புகின்றோம். பொருளாதார செயற்பாட்டில் புத்தெழுச்சி ஏற்பட்டுள்ளதுடன் கட்டட நிர்மாணப் பணிகள் நாடு முழுவதும் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்ற தற்போதைய சூழ்நிலையில், சிறப்பாக பயிற்றப்பட்ட மற்றும் தகுதி வாய்ந்த [illegible] பாடு காணப்படுகின்றது. அதனையே ரொபியலக் கல்வியகம் வழங்குகின்றது. வர்ணம்பூசுதல் தொடர்பிலான அரிச்சுவடியை கற்று, தொழில் சார் வர்ணம்பூசும் நபர்களாக முன்னேற ஆர்வமுள்ள நபர்களுக்காக இந்தக் கல்வியகத்தின் கதவுகள் இப்போது திறந்துள்ளன" என்று லங்கெம் சிலோன் பி.எல்.சி. நிறுவனத்தின் பணிப்பாளரான றுவான் ரி. வீரசிங்க தெரிவித்தார்.

கடந்த பதினைந்து வருடங்களாக நான் ஒரு வர்ணம்பூசுபவராக (பெயின்டர்) வேலை செய்கின்ற போதிலும், இப் பயிற்சியானது எனது அறிவை மிகச் சிறப்பாக மேம்படுத்தி இருக்கின்றது. அத்துடன் என்போன்ற வர்ணம்பூசும் நபர்களுக்கு மிகவும் பெறுமதி வாய்ந்த ஒன்றாக அமைந்துள்ளது. விரிவான முக்கிய விடயங்கள் போன்ற, இதற்கு முன்னர் நாம் அறிந்திராத பல்வேறு விடயங்கள் குறித்து இங்கு நாம் அதிகமாக கற்றறிந்து கொண்டோம். இது எமக்கு உன்னதமான நம்பிக்கை அளித்துள்ளது மட்டுமன்றி, எமது ஆற்றல்களை பலப்படுத்தி, கூர்மையாக்கி இருக்கின்றது. லங்கெம் நிறுவனமானது பயிற்சி அளித்தலுக்கும் அப்பால் சென்று, அனைத்து அமர்வுகளின் போதும் எமக்கு பகலுணவு மற்றும் சிற்றுண்டி உபசாரத்தையும் வழங்கியிருந்தது. இவ்வாறான மேலும் பல நூற்றுக்கணக்கான வர்ணப்பூச்சு பூசுவோருக்கு லங்கெம் பெயின்ட்ஸ் பயிற்சியளிக்கும் என்றும், அதன் மூலம் இத்துறை மேன்மையடையும் என்றும் நான் நம்புகின்றேன்' என்று பிலியந்தலையைச் சேர்ந்த கே. சுந்திம ஜயறுக் கருத்துத் தெரிவித்தார்.

"இந்த ஆண்களும் பெண்களும் ரொபியலக் கல்வியகத்தில் பயிற்றப்பட்ட பின்னர் விஞ்ஞான அடிப்படையில் வர்ணம் பூசும் முறைமை தொடர்பில் திறன் வாய்ந்தவர்களாகவும் தகுதி பெற்றவர்களாகவும் திகழ்வார்கள். அவர்கள் உள்நாட்டில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதை காண்பதே லங்கெம் நிறுவனத்தின் விருப்பமாகும். இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் பணியாற்றும் ஏனைய தொழிலாளர்களால் ஏற்பட்ட சாதக விளைவைப் போலவே, இம் முயற்சியும் கூட நீண்டகால அடிப்படையில் இலங்கையின் பொருளாதாரத்தில் அனுகூலமான தாக்கம் ஒன்றை ஏற்படுத்தும். அந்தவகையில், ரொபியலக் கல்வியகம் என்பது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்ற ஒரு செயன்முறையாகவும் அதே நேரம் எதிர்வரும் வருடங்களுக்காக நாம் போசிக்கு"வளர்க்கும் ஒரு முன்முயற்சியாகவும் காணப்படுகின்றது" என்று வீரசிங்க மேலும் குறிப்பிட்டார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எறும்புத் தூளையும் தின்னும் எறும்புகள்

யாழ்ப்பாணம் குறிப்பிட்ட சில வருடங்களில் பாலைவனமாகி விடும் எனும் சூழலியலாளர்களின் எதிர்வுகூறல் ஒருபுறமிருக்க, கடந்த ஞாயிறு சூரிய காந்தியில் வெளியான வெப்ப நிலையை எதிர்கொள்ள நாம் தயாரா? எனும் ஆக்கத்தில், சாதாரணமாக இங்கு பகல் வேளையில் சராசரியாக 32 முதல் 34 பாகை செல்சியஸ் வெப்பம் நிலவினாலும், உண்மையில் 42 பாகை செல்சியஸ் வெப்பநிலையை உணரக் கூடியதாக உள்ளது எனக் குறிப்பிட்டிருந்தது சரிதான். அந்த அளவுக்கு வெயிலின் அகோரம் தகிக்கிறது.

காண்டாவனம் எனப்படும் அக்கினிநாளில் 21 நாள்களும் கடந்த வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்த போது, அப்பாடா இனித்தான் சோழகக்காற்று எம் மீது படும் என்கிறார்கள். திடீர் திடீர் என ஊர் ஊராக நல்ல மழை பெய்தும் காங்கை தணிவதாக இல்லை. துவைத்துக் காய விடும் துணிகள் விரைவில் உலர்ந்து விடுகின்றன. கொத்திய ஈர விறகுகள் கூட கெதியாய் காய்ந்து விடுகின்றன. சந்தையில் கீரை வியாபாரிகள் இரண்டு லீற்றர் வெற்றுச் சோடாப் போத்தலில் சிறுசிறு துவாரங்களையிட்டு நீர் நிரப்பி, கீரை வகை வாடி விடாது இருக்க அடிக்கடி தூவல் பாசனம் மேற்கொள்ளவேண்டியிருக்கிறது.

கடி எறும்புகள் கூட வீட்டு வளவில் கால் வைத்த இடமெல்லாம் புற்றெடுத்துப் பெருகிவிட்டன. நெருப்புச்சுட்டது போன்று இவற்றின் கடித் தாக்கம் இருப்பதனால் இவற்றை நெருப்பெறும்பு என்றும் சில ஊர்களில் சொல்வார்கள்.

இந்த எறும்புகளின் ஆய்க்கினை தாங்காமல் எறும்புத்தூள் கேட்டு பல கடைகளில் ஏறிஇறங்கி ஒரு கடையில் 100 கிராம் பொதி 80 ரூபா எனத் தந்தனர். வாங்கி வந்து கடி எறும்பு புற்றுகளின் மேல் தூவியதும் தூளாக, சிறுசிறு குருணல்களாக இருந்த அந்த வஸ்துவை மோப்பம் பிடித்து முகர்ந்த எறும்புகள் சுற்றிச் சுழன்றன. 80ரூபா எறும்புத்தூள் வேலை செய்கிறதுதான். இவற்றின் சாவு நிச்சயம் எனும் நினைப்பில் மண் விழுந்தது.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு குருணலாக இழுத்துக் கொண்டு புற்றினுள்ளே மறைந்தன எறும்புக் கூட்டம். அடகறுமமே காலா வதியாகி பழுதடைந்த, அல்லது பழுதடையாத கோதுமைமாவுக் கலப்படம் இதிலுமா? இந்த இலச்சணத்தில் எறும்புத்தூள் விற்பதற்கு சட்ட அனுமதி பெற்றிருப்பதாக கடைக்காரரின் எழுப்பக் கதை வேறு. கடியெறும்புகள் மீதான இவர்களது கருணையோ கருணை. வெயில் எப்படித் தணியும், வெம்மை எப்படிக் குறையும்?

**நாரா. வித்தியாதரன்**
வட்டுக்கோட்டை.





## வீட்டைத் திருத்துபவர்கள் சமுதாய நலனில் சிந்திப்பார்களா?

குருநகர்ப்பகுதியில் உள்ள சில குடியிருப்பாளர்கள் தமது வீடுகளைத் திருத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்கள் தமது வீடுகளின் எல்லைகளைக் கடைப்பிடிக்காமல் எல்லையை மீறி வெளி மதிலை விஸ்தரிக்கும் முயற்சியில் ஈடுபடுவதையும் அவதானிக்க முடிந்தது. இதனால் வீதிகளூடான போக்குவரத்துப் பாதிப்புக்குள்ளாவதுடன் போக்குவரத்துப் பிரச்சினை ஏற்படுவதையும் அவதானிக்க முடிகிறது. குருநகர் தண்ணீர்த்தாங்கி வீதியில் உள்ள குறிப்பிட்ட குடியிருப்பாளர்கள் வீதித் திருத்தத்தின்போது தமது வீட்டின் பின்புற எல்லையைப் பின்னோக்கி. அமைத்துள்ளதால் இவ் ஒழுங்கையூடான போக்குவரத்தில் மக்கள் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர். இது தொடர்பில் உரிய இடத்தில் உள்ள சமூக சேவை அமைப்புக்களும் தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளன. எனவே இச்செயற்பாட்டை உரியவர்கள் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால், குருநகரில் வீடுகளைத் திருத்துபவர்கள் இதே பாணியைக் கடைப்பிடித்தால் மக்களின் இயல்பு நிலை பாதிப்படையும் எனப் பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

**– குருநகர் மைந்தன்.**

### கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

## கடுமையான சட்டங்களே குற்றங்களை ஒழிக்க வழி

நீதிமன்றங்களால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு கடந்த முப்பது வருடங்களாகத் தண்டனை நிறைவேற்றப்படவில்லை. தூக்குத் தண்டனை விதிக்கப்பட் டவர்களில் சிலர் மேன்முறையீட்டின் மூலம் அதனை ஆயுள் தண்டனையாக மாற்றிக் கொண்டுள்ளனர். இப்படியானவர்களிலும் பலர் நன்னடத்தை, பொதுமன்னிப்பு என்று சுமார் 15 வருடகாலச் சிறையின் பின்பு விடுதலையாகிவிடுகின்றனர். ஆகவே குற்றமிழைக்கும் ஒருவர் தண்டனைப் பயமின்றிச் செயற்படுகின்றார். சிறிது காலத்தின் பின்னர் விடுதலையாகி வெளியே வந்து விடலாம் என்ற நம்பிக்கை அவருக்குண்டு. இதன் பாரதூரமான விளைவுகளே இன்று நாட்டில் மலிந்துள்ள குற்றச்செயல்கள். நாட்டில் போதைப்பொருள்கள் கடத்தல், போதைப்பொருள்கள் பாவனை, கொலைகள், பாலியல் வல்லுறவுகள் என்று மில்லாதவாறு அதிகரித்துள்ளன. அதனால்தான் தூக்குத் தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற குரல் சமீபகாலமாக ஒலித்து வருகிறது.

வழமையாக நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரிக்கும்போது தூக்குத் தண்டனைக்கு ஆதரவானவர்களின் குரல்கள் தீவிரமடையும். குற்றங்கள் குறையும்போது தணிந்துவிடும். தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதை நாட்டின் ஒரு பிரிவினர் மனிதாபிமான ரீதியில் நோக்குவதால் பல தசாப்த காலமாக இல்லாதிருந்த ஒன்றை மீண்டும் நடைமுறைப்படுத்துவது அரசுக்கு சிக்கலான நிலைமையை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் சமீபத்தில் புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட பயங்கரம், நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியபோது தூக்குத் தண்டனைக்கு ஆதரவாக மீண்டும் குரல்கள் தீவிரமடைந்தன. நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ சில தினங்களுக்கு முன் கருத்து வெளியிடுகையில்,-மோச மானகுற்றச் செயல்களை ஒழிப்பதாயின் தூக்குத் தண்டனை மீண்டும் அவசியம் என்ற கோரிக்கை தலைதூக்கியிருப்பதால் இது விடயம் குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது" என்று தெரிவித்தார். தற்பொழுது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒருபடி மேலே சென்று, போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கும் சாத்தியம் குறித்து நாட்டு மக்களின் கருத்தை தாம் எதிர்பார்ப்பதாக அதிரடியாகத் தெரிவித்துள்ளார். உலக புகையிலை ஒழிப்பு தினத்தையொட்டி கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு ஒன்றில் ஜனாதிபதி உரையாற்றுகையில் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் தேவை. தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுவதை மனித உரிமை விவகாரமாக சிலர் கருதுகின்றனர். ஆனால் சில நாடுகளில் போதைப்பொருள் கடத்தலுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. இது சர்ச்சைக்குரிய ஒரு விடயமாகியுள்ளபோதிலும் இது குறித்து தீவிரமாக கருத்துப்பரிமாற்றங்களை நடத்த நான் விரும்புகின் றேன்" – என்று தெரிவித்திருந்தார். போதைப்பொருள் பாவனையும் மதுபான பாவனையும் நோய்களுக்குக் காரணமாகின்றன. குற்றச்செயல்களைத் தூண்டுகின்றன. போதைப்பொருள் கடத்தல் சாதாரண குற்ற மல்ல. போதைப் பொருள்களைப் பயன்படுத்தி சீரழிந்துபோன மனிதர்கள், அவர்களது குடும்பங்கள் என ஏற்படும் பாதிப்புகள் அனைத்துக்கும் அவர்களே பொறுப்புக்கூற வேண்டும்.

போதைப்பொருள்கள் பாகிஸ்தானிலிருந்தே இலங்கைக்குள் பெருமளவில் கடத்தப்படுகின்றன. இலங்கைக்குள் இவற்றைக் கடத்தி வருவோர் இலங்கைக்குள் இதனைப் புழக்கத்தில் விடுகின்றனர். அத்துடன் வெளிநாடுகளுக்கு கடத்திச் செல்லும் கேந்திர பூமியாக இலங்கையைப் பயன்படுத்துகின்றனர். இந்தியாவில் இருந்து படகுகள் ஊடாக இலங்கைக்குள் சிறிய அளவில் கடத்தப்பட்ட போதைப்பொருள் வர்த்தகம் 2011 க்குப் பின்னர் துறைமுகங்கள் ஊடாக கொள்கலன்களில் ஒரு தடவையில் பல நூறு கிலோ கடத்தப்படும் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது. இதன் பின்னணியில் சில அரசி யல்வாதிகளின் பங்களிப்புக் குறித்துக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவது இன்று இந்த நாடு எதிர்நோக்கும் பாரிய சவாலாகும். போதைப்பொருள் கடத்தல் குற்றங்களுக்கு மட்டுமல்லாது கொலை மற்றும் மோசமான குற்றச் செயல்களுக்கும் தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவது, நாட்டின் நன்மை கருதி செயற்படுத்தப்படவேண்டியதொன்றாகும். போதைப் பொருள் அற்ற, குற்றச் செயல்கள் அற்ற இலங்கையை உருவாக்க தூக்குத் தண்டனை விதிக்கும் நடைமுறையை மீண்டும் செயற்படுத்துவது அவசிய மாகும்.

அண்மையில் புங்குடுதீவில் இடம்பெற்ற மாணவியின் படுகொலைக்கும் வன்புணர்வுக்கும் போதைப் பொருள் பாவனையே மிக முக்கிய காரணமாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இந்தக் குற்றச் சம்பவத்துடன் தொடர்புடையதாகத் தெரிவித்துக் கைதானவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் என்று தகவல் வெளியாகியுள்ளன.

ஆகவே மோசமான குற்றங்களுக்கான தண்டனைகள் கடு மையாக்கப் பட்டால் மட்டுமே குற்றங்கள் இடம்பெறுவதைத் தடுக்கவும் தவிர்க்கவும் முடியும்.

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசியல் தலைவர்களின் போக்கும் மக்களுக்கான உரிமைகளும்

எமது நாட்டில், இனிமேல் நடத்தப்படும் எந்த ஒரு தேர்தலிலும், முப்படைகளைச் சேர்ந்தவர்களும், பொலிஸாரும் அரசியல் கட்சிகளினதோ அல்லது அரசியல்வாதிகளின் உதவியாளர்களாகவோ செயற்பட முடியாது. அதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

இவ்வாறு அறிவித்திருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

கொழும்பில், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் அலுவலர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரை ஆற்றுகையிலேயே, அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

போர் முடிவுற்று ஐந்து ஆண்டுகள் கழிந்த பின்னரும், சிங்கள, தமிழ், முஸ்லிம், மலே, பறங்கியர் மத்தியில் ஒற்றுமை உண்டாக வில்லை. அதற்கான அறிகுறிகள் தானும் மேலெழவில்லை -- அதனால், இந்த நாட்டில் வாழும் அனைத்து இன மக்களிடமும் ஒற்றுமையையும் நல்லுறவையும் கட்டி எழுப்ப வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது --

அதாவது; இலங்கை வாழ் அனைத்து மக்களிடமும் தேசிய நல்லிணக்கத்தை உண்டாக்க வேண்டும் -- என்றும் ஜனாதிபதி அழுத்திக் கூறியுள்ளார்.

அத்தோடு தரிக்கவில்லை அவர். இராணுவ வீரர்களை, ஐக்கிய நாடுகள் சபையின், அந்த அமைப்பின் அமைதிப் படையில் இணைக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது என்று ஜனாதிபதி விரித்து உரைத்தார்.

அவற்றோடு தரிக்காமல் --

போதைப்பொருள் பாவனை, பெண்களுக்கு எதிரான வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகம் என்பன தொடர்பில் இறுக்கமற்ற சட்டங்களே உள்ளன. அவற்றைச் சீராக்கி மிகக் கடுமையான விதத்தில் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருக்கிறார்.

எவரும் எதிர்பாராத காட்டமான கருத்து ஒன்றையும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்டவர்களின் மனநிலையை மாற்றுவதற்கும் பூரண சமாதானச் சூழலை உருவாக்குவதற்கும் --

சமூக நியாயம், நீதி, சட்டம், நன்னெறி என்பன கட்டி எழுப்பப்பட வேண்டும். எனினும் அவை இலகுவாக விரைந்து, செயற்படுத்தக் கூடியவை அல்ல.

எனினும் அத்தகைய கஷ்டமான பணிகளையும் நிறைவேற்றியாக வேண்டும் -- என்று ஜனாதிபதி காலத்துக்குத் தேவையான ஆக்கபூர்வமான, மக்களுக்கு பயன்விளைக்க வல்ல கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.


நாட்டின் பௌதிக வளங்களை அபிவிருத்தி செய்வதில் காட்டப்படும் அக்கறையை, மக்களின் ஒழுக்கம் பேணப்படுவதிலும் சரிசமமாகச் செலுத்த வேண்டும். சிங்கப்பூர் போன்ற நாடுகளில், மக்களை ஒழுக்கம் உள்ளவர்களாக உயர்த்துவதற்கு லீ குவான் யு போன்ற தலைவர்கள் முன்னுரிமை வழங்கினார்கள். அந்த வகை சார்ந்த செயற்பாடுகள் ஆக்கபூர்வமாக வளர்ந்து, எழுந்து அந்த நாடுகளை அனைத்துலக அரங்கில் உயர்த்தின.

அரசியல் தலைவர்களுக்கு இடையே, அவர்களின் கொள்கைகள் மற்றும் செயல் முறைச் சித்தாந்தங்கள் தொடர்பில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம்.

ஆனால் மக்கள் நலன்களையும், அவர்களுக்கு உரிய உரிமைகளையும் வழங்குவதில், நியாயமான ஒற்றுமை தேவை.

இது விடயத்தில் இலங்கையில் அதன் அரசியல் புலத்தில், உகந்த புரிந்துணர்வும், மக்கள் நலன்களுக்கு முன்னுரிமை தரும் போக்கும் வெகு மந்தமாகவே தொடர்கின்றன. அது குறுகிய காலத்தில் அற்றுப்போகும் என்ற எதிர்பார்க்க இயலவில்லையே. அதற்குப் பக்குவமாகப் பாடம் புகட்ட வேண்டியவர்கள் மக்களே. குறிப்பாக வாக்காளர் பெருமக்களே.

# இந்தியா இனியாவது மனம் திருந்துமா?



● சேரலாதன்

இந்தியா இலங்கைக்கு வழங்கிய சில இரகசிய உதவிகளின் காரணமாகவே போரில் புலிகளை தோற்கடிக்க முடிந்தது. இவ்வாறு மனம் திறந்து கூறியிருக்கிறார் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும், தற்போது நிதி மோசடிக் குற்றச்சாட்டுக்களின் பேரில் விளக்க மறியலில் வைக் கப்பட்டுள்ளவருமான பஸில் ராஜ பக்ஷ. ஆனால் அந்த இரகசிய உதவிகள் தொடர்பாக அவர் மேலதிக விவரங்களை வெளியிட மறுத்துள்ளார்.

ஆனால் இறுதிப் போரின்போது இந்தியாவின் வகிபாகம் தொடர்பாக இலங்கைத் தமிழர்கள் நன்றாகவே அறிந்து வைத்திருக்கிறார்கள். புலிகளைப் பழி வாங்குகின்றோம் என்று கூறிக்கொண்டு ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் இந்தியா செயற்பட்டுள்ளது. ஆனால் தனது அந்தச் செயலுக்கான பிராயச்சித்தத்தைத் தேடும் நிலையில் இந்தியா இருப்பதாகவும் தெரியவில்லை.


இலங்கையில் மைத்திரி தலைமையிலான புதிய அரசு பொறுப் பேற்றுக் கொண்ட பின்னரும் அங்கு வாழ்கின்ற தமிழர்களின் இன்னல்கள் தீர்ந்ததாகத் தெரியவில்லையென இந்தியாவின் முன்னணி நாளேடான 'த இந்து' தனது ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது. ஒரு காலத்தில் முன்னாள் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இந்த நாளேடு நெருக்கமான உறவு [illegible]

[illegible]

இதற்கொரு காரணமாக இருக்கலாம். ஆனால் போரின் பின்னர் மஹிந்தவின் உண்மையான சொரூபம் வெளிப்பட்டதால் அந்த ஆதரவு விலக்கிக் கொள்ளப்பட்டது. இந்தியா கூட இறுதிப் போரில் புலிகளைத் தோற்கடிப்பதில் காட்டிய அக்கறையை போரினால் பாதிக் கப்பட்ட தமிழர்கள் மீது காட்ட வில்லை. மேலும் இலங்கை அரசுக்கு ஆதரவாகவே நடந்து கொள்கின்றது.


'த இந்து' பத்திரிகையில் இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பாகத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைவதற்கு சிறுபான்மையினத் தமிழர்களின் வாக்குகள் பேருதவி புரிந்துள்ளன. ஆனால் மஹிந்தவின் எதேச்சதிகார ஆட்சி, குடும்ப ஆட்சி ஆகியவற்றை ஒழிப்பதற்கு மட்டும் அவர்கள் தமது வாக்கு களை அளிக்கவில்லை. இலங்கையில் தொடர்ந்து நீடித்து வருகின்ற இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகிடைக்குமென்ற நம்பிக்கையுடனே தமது வாக்குகளை அளித்த னர்.



குறிப்பாக தமிழர் பகுதிகளில் போர் ஓய்ந்த பின்னரும் இராணுவம் நிலை கொண்டிருப்பதை அங்கு வாழ்கின்ற மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அரசு, புலிகளின் மீள் எழுச்சி தொடர்பான பூச்சாண்டியைக் காட்டி இராணுவத்தின் இருப்பை நியாயப் படுத்தி வருகின்றது.

இது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மேலும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு போர் வெற்றிக்குப் பின்னரும் படையினரை வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியது. இதனைத் தற்போதைய அரசு ஏற்றுக் கொண்டதாக தெரியவில்லை. ஆனால் செயல் முறையில்தான் தாமதம் காணப்படுகின்றது.



மேலும் அமெரிக்க நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் அரசுக்கும், தமிழ் மக் களுக்கு மிடையில் இதுவரை நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவில்லையெனத் தெரிவிக்கப் பட்டுள் ளது.

இதைவிட தமிழர்களுக்கு சொந்தமான நிலங்களை இராணுவம் ஆக்கிரமித்திருப்பதும், மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படாமல் இருப்பதும், போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று நல்லிணக்கம் ஏற்படுத்தப்படும் என்ற வாக்குறுதி நிறைவேற்றப் படாமல் இருப்பதும் மிக முக்கியமான பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன என அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கைக்கு வந்தபோது சமஷ்டி முறை தொடர்பாகவும் கருத்துத் தெரிவித்திருந்தார். இது இங்குள்ள இனவாதிகளுக்கு கடும் சீற்றத்தை ஏற்படுத்திவிட்டது. ஆனால் மோடியின் கருத்துத் தொடர்பாக இந்தியா ஒருசிறிய துரும்பைக்கூட நகர்த்தியதாகத் தெரியவில்லை. இந்தியா மனச்சாட்சியுள்ள ஒரு நாடாக இருந்திருந்தால் போர் ஓய்ந்த பின்னர் இலங்கைத் தமிழர்களின் துயரங்களைத் தீர்ப்பதற்கு முனைப்புக் காட்டியிருக் கும்.

இறுதிப் போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றங் கள் தொடர்பான சர்வதேச விசாரணையை முன்னெடுத்துச் செல்வதில் இந்தியாவின் பங்கு அளப்பரியது. ஆனால் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங் கைக்கு எதிரான தீர்மானம் வந்த போது இந்தியாவின் இரட்டை வேடம் அம்பலமாகியது.

இந்திராகாந்தி அம்மையாரின் காலத்துக்குப் பின்னர் இலங்கைத் தமிழர்கள் அனுபவிக்கின்ற இன்னல்களுக்கெல்லாம் இந்தியா தான் பொறுப்புக் கூறவேண்டும்.

ராஜீவ் காந்தியினால் ஏவிவிடப்பட்ட அமைதிப்படை என்ற பெயரில் வந்திறங்கிய இந்திய இராணுவத்தினர் தமிழர்கள் மீது புரிந்த அட்டூழியங்கள் எழுத்தில் வடிக்க முடியாதவை. அவரது கொலைக்குப் பின்னர் தமிழர்கள் மீதான இந்தியாவின் வன்மம் பல மடங்கு அதிகரித்துக் காணப்பட்டது. பின்னர் இலங்கையில் இடம்பெற்ற போரில் புலிகளின் கரங்கள் ஓங்கி வருவதைச் சகிக்க முடியாத இந்தியா நய வஞ்சகமான செயல்களில் இறங்கியது. இதனால் தமிழர்களின் உரிமைகளுக்கான போராட்டம் பயங்கரவாத முத்திரையிடப்பட்டு அழித்து ஒழிக்கப்பட்டது. ஆனால் அழிக்கப்பட்டது தமிழர்களும் தான் என்பது இந்தியாவுக்குப் புரிய வில்லைப் போலும்.

தென்னாசியாவின் வல்லரசு எனத் தனக்குத்தானே மார்தட்டிக் கொள்ளும் இந்தியா, தனது போலி வேடங்களைக் களைந்து இனியாவது இலங்கைத் தமிழர் நலனில் அக்கறை காட்ட வேண்டும். இதிலிருந்து அந்த நாடு தவறுமேயானால் இலங்கைத் தமி ழர்கள் இந்தியாவை ஒரு பொருட்டாகவே மதிக்கமாட்டார் கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பீடு என்ற தலைப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ண குலசூரிய மவ்பிம ஞாயிறு பதிப்பில் எழுதிவரும் பத்தி வரிசையில் இந்த வாரத்தைய பத்தியின் தமிழ் வடிவம் இது.

# நாமும் மோசடிகள் செய்யலாமே!

இலங்கையில் வாழும் சிங்கள பௌத்தர்களில் எழுபது சதவீதம் வரையிலானோர் பஞ்சசீலக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாக எப்போதும் கூறிக்கொண்டு பன்சில் நோன்பு அனுஷ்டிக்கின்றோம். ஆனால் எங்களைப் போன்ற பெரும் மோசடிக்காரர்கள் இந்த உலகத்தில் வேறு எங்காவது இருக்கின்றனரா? என்பது குறித்து நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்த்ததுண்டா? அதேபோன்று புனித குர்ஆனிலும் குறிப்பிட்டதொரு பிரிவில் களவு செய்பவருக்கு அவரது கைகளைத் துண்டிப்பதன் மூலம் தண்டனை வழங்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சில காலங்களுக்கு முன்னர் லிபியாவின் மன்னரைப்போன்ற விளங்கிய அந்த நாட்டின் அதிபர் கேர்ணல் கடாபி இராணுவச் சதிப் புரட்சியின் மூலம் பதவியிலிருந்து அகற்றப்பட்டு, நாட்டின் வளத்தைச் சூறையாடினார் எனக் குற்றம்சுமத்தப்பட்டபோதிலும் மோசடிக்காக அவரது கைகள் துண்டிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டதில்லை. பதவியில் இருந்த வேளையில் ஒரு சமயம் கடாபி தலைநகரில் பயணித்துக் கொண்டிருந்தவேளையில் இரு கைகளும் அற்ற நிலையில் சிலர் பாதை ஓரத்தில் பயணித்ததைக் காண நேர்ந்தது. அது குறித்து விசாரித்தபோது, உணவுப் பொருள்களைத் திருடியமைக்காக அவர்களுக்கு கைகளைத்துண்டித்து தண்டனை வழங்கப்பட்டதாக கடாபிக்குத் தெரிவிக்கப்பட்டது. அவ்வேளை முதல் அத்தகைய சிறு திருட்டுக் குற்றங்கள் புரிவோருக்குத் தண்டனையாக வசதிகளற்ற பிரதேசத்தில் அவர்களை வேலைக்கு அமர்த்தி உடல் உழைப்பின் மூலம் தண்டனை அனுபவிக்க வைக்கும் நடைமுறையைக் கடாபி அறிமுகப்படுத்தி வைத்தாராம். திருட்டுக் குற்றத்துக்கு கைகளைத் துண்டித்துக் கடும் தண்டனை வழங்கப்பட்டபோதிலும் லிபியாவில் அத்தகைய குற்றச் செயல்கள் குறைவடையவில்லை. அதற்குக் காரணம் நாட்டு மக்கள் பசிபட்டினியால் வாடும் அளவுக்கு நாட்டில் பஞ்சம் நிலவுகிறது என்பதைக் கடாபி உணர்ந்து கொண்டார். நாட்டு மக்களது பஞ்சம் பசியைப் போக்க வேண்டியது குறித்த நாட்டின் ஆட்சியாளர்களது கடமை என்பது இதன் மூலம் உணர்த்தப்படுகிறது. புனித பைபிளிலும் சரி ஏனைய பல மதக் கோட்பாடுகளிலும் சரி திருட்டுக் குற்றத்துக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் எமது நாட்டில் திருட்டுச் சம்பவங்கள் குறைந்தபாடாக இல்லை. இன்று அது ஒரு போட்டிச் செயற்பாடாக ஆகி விட்டுள்ளது. இன்று திருட்டு என்பது இந்த நாட்டு மக்களது வாழ்வியலில் அத்தியாவசியமான ஒன்றாக ஆகிவிட்டுள்ளது.

**பணம் படைத்தோரே இன்று மதிக்கப்படுகின்ற நிலை**

மோசடி மூலம் தாம் தேடிக் கொண்ட சொத்துப் பத்துக்களை ஏனையோருக்குக் காட்டிப் பெருமைப்பட்டுக் கொள்ளும் போக்கு இன்று பெருமளவில் வழக்கமான ஒன்றாக ஆகி விட்டுள்ளது. அத்தகைய சொத்துக்களை முறையற்ற விதத்தில் தாம் தேடிக் கொண்டமை குறித்து வெட்கப்படும் போக்கை இன்று எவரிடமும் காணமுடிவதில்லை. ஏனெனில் சமூகத்தில் அத்தகையோரது அந்தஸ்தை அளவிடும் அளவுகோலாக இருப்பது அவர்கள் வசமுள்ள பெருந் தொகை நிதியே. எந்தவொரு பெரும் பணக்காரனிடமுள்ள பணமும் நியாயமற்ற முறையிலான தேட்டமாகவே இருக்கும் என்பது பிரபல சமூகவியலாளரான மாரியோ பூஜோ என்பவரது கருத்தாகும். பணத்துக்காக எத்தகைய தவறுகளையும் செய்யத் தயங்காத மனிதர்களாக இன்று நாம் மாறியுள்ளோம். இத்தகைய பெருந்தொகைப் பணத்தைக் குறிப்பிட்ட ஒரு நபரால் எவ்வாறு தேடிக்கொள்ள முடிந்தது என்று எம்மில் எவரும் ஒருபோதும் கேள்வி எழுப்புவதில்லை. எம்மையெல்லாம் ஏமாற்றிவிட்டு நியாயமற்ற வகையில் பெருந்தொகைப் பணத்தை சுருட்டிக் கொள்ளும் பேர்வழிகளையே பெரும்பாலும் நாம் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்துகின்றோம்.

அத்தகைய தமது ஊழல் மோசடிச் செயற்பாடுகளால் பெரும் பணம் ஈட்டிக்கொள்ளும் நபர்களுக்கு எதிராக பொதுமக்கள் குரல் எழுப்ப முயன்றாலும், பல சந்தர்ப்பங்களில் அவர்கள் தமது அரசியல் செல்வாக்கு மற்றும் சமூக, சமய உயர்மட்டங்களின் ஆதரவைப்பெற்று தமக்கெதிரான குற்றச்சாட்டுக்களைச் செயலிழக்கச் செய்வதில் வெற்றி கண்டு விடுகின்றனர்.

**மோசடிக்காரர்களைத் தண்டிப்பதிலும் முட்டுக்கட்டைகள்**

கடந்த ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கு முந்திய ஓரிரு மாதங்களாக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த மற்றும் அவரது சகோதரர்களுக்குஎதிரான பெரும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் நாட்டில் பரவலாக முன் வைக்கப்பட்டு வந்தன. நாட்டு மக்களது பணத்தை முறையற்ற விதத்தில் சூறையாடிய அந்தத் தரப்பினர் வசமுள்ள பணத்தை மீண்டும் நாட்டு மக்களுக்குக் கிட்டச்செய்வோம் எனவும், தாம் அத்தகைய விதத்தில் முறைகேடுகளை மேற்கொள்ள மாட்டோம் எனவும் எதிரணியினர் நாட்டு மக்களுக்கு வாக்குறுதிகளை அள்ளிவீசி வந்தனர். அந்த வாக்குறுதிகளை நம்பி நாட்டு மக்களும் புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவைத் தேர்ந்தெடுத்தனர். புதிய ஆட்சி மாற்றத்தையடுத்து மூன்று நான்கு மாதங்களாக மக்களின் குரலாகச் செயற்படும் ஊடகங்கள், மோசடிக்காரர்களை கைது செய்யவில்லையே? மோசடிக்காரர்களைக் கைது செய்யுங்கள் என பெருமெடுப்பில் உச்சாடனம் செய்து வந்தன. ஆனால் பெரும் சிரமத்தின் மத்தியில் சிலரைக் கைது செய்து நாட்டு மக்களது நிதியை சூறையாடியதாகக் குற்றஞ்சாட்டி நீதிமன்றின் முன் நிறுத்த நடவடிக்கை எடுத்த சில நாள்களிலேயே அந்தக் கூக்குரல்கள் திடீரெனத் தடம்புரண்டன. இது அரசியல் பழிவாங்கல், பொய் வழக்குகள் தாக்கல் செய்யவேண்டாம் என்றெல்லாம் ஒரு தரப்பினர் கூப்பாடு போட ஆரம்பித்தனர். மோசடிக்காரர்கள் எனக்கூறிக் கைதுசெய்ய வேண்டாம் என்ற ஆவேசக் குரலின் முன்னால் மோசடிக்காரர்கள் கைது செய்யப்படவேண்டும் என்ற குரல் மங்கிச் செயலிழந்து போயிற்று. நீதிமன்றம் கூட குறிப்பிட்ட ஒரு சிலரைக் கைது செய்வதற்குத்தடை உத்தரவு வழங்கும் நிலை வரை சம்பவங்கள் போக்குமாறிப் போயின. தற்போது மீதமுள்ள மோசடிக்காரர்களைக் கைது செய்வதைப் பின்தள்ளி வைத்து, ஏற்கனவே கைது செய்தோர் விடயத்தில் மேற்கொண்டு எவ்விதம் செயற்படுவது என்ற நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் விற்பனையில் பெரும் நிதிமோசடி இடம்பெற்றிருப்பதாக பதிலுக்கு எதிர்க்கட்சிகள் அரசின் மீது குற்றஞ்சுமத்துகின்றன. மற்றொரு புறம் நாட்டு மக்கள் மீண்டும் கொதிப்படையும் நிலை உயர்ந்து வருகிறது. ஊழல் மோசடிகள் புரிந்த முன்னைய அரசைத் தோற்கடித்து தாம் புதிதாக அதிகாரத்தைக் கையளித்த இன்றைய அரசு தமது எதிர்பார்ப்பை நிறைவேற்றாது காலத்தை இழுத்தடித்து வருவதாக அவர்கள் கொதிப்படைகின்றனர். அந்த வகையில் முன்னைய அரசின் நிர்வாகத்தில் நிலவிய "நீங்களும் உங்களால் முடிந்த மோசடிகளை மேற்கொள்ளுங்கள். நானும் என்னால் முடிந்த மோசடிகளை மேற்கொள்கிறேன். மோசடிகள் மூலம் நாம் எம்மைப் பலப்படுத்திக் கொள்வோம்" என்ற நிலைப் பாடு வெற்றி கண்டுவிடும்போலத் தோன்றுகிறது. எமது பாரம்பரிய பண்பாட்டு ரீதியில், கையாடல், பொய், மோசடி என்பவை சமூகத்தால் புறக்கணிப்புக்கு உள்ளாகும் செயற்பாடுகளாகும். ஆனால் அவை இன்று எமது அன்றாட வாழ்வில் முக்கிய அம்சங்களாக மாற்றம் கண்டு விட்டுள் என. இன்று பிள்ளையொன்றுக்குப் பெற்றோராகும் வேளை முதல் நாம் மோசடிகளில் ஈடுபட ஆரம்பித்து விடுகிறோம். எமது பிள்ளைகளைப் பிரபல்யமான பாடசாலைகளில் சேர்ப்பதற்காக, பிள்ளையின் பிறந்ததிகதி மற்றும் விவரங்களில் மோசடிகள் மேற்கொள்ள ஆரம்பித்து விடுகிறோம். அந்த வேளைமுதல் எமது இறப்பு வரை நாம் பொய் பேசியே வாழப் பழகி விடுகிறோம். மோசடிகள் செய்யப் பழகி விடுகிறோம். எங்கள் தலைவர்களும் எங்களைப் போன்றே செயற்பட்டால் தவறில்லை என்று எண்ணத் தலைப்பட்டு விடுகிறோம்.

**அரசியலிலும் கனவான்தனம் அவசியம்**

முன்னாள் அரசியல் தலைவர்களான யூ.பி. வன்னிநாயக்க, எம்.டி. பண்டா, டட்லி சேனநாயகா போன்றோர் குறித்து இன்று எவருமே பேசிக்கொள்வதில்லை. அவர்கள் தமக்கு கல்விகற்பித்த ஆங்கில ஆசிரியர்களிடமிருந்து பணிவான, விசுவாசமான சேவையைக் கற்றுக் கொண்டிருந்தனர். அரசியலில் அவர்கள் நாட்டு மக்களது நலன்கருதியே செயற்பட்டனர். அவர்கள் அரசியலில் அப்பழுக்கற்ற சேவையை ஆற்றியபோதிலும் மக்களது மனங்களைக் கவர இயலாததால் அரசியலரங்கில் இருந்து மக்களால் புறமொதுக்கப்பட்டனர். அவர்களது அரசியல் நிலைப்பாடு இன்றைய காலகட்டத்துக்கு பொருத்தமற்றதெனப் பலர் கருதினர். அவர்களது அரசில் செயற்பாட்டுப் போக்கு இன்றைய காலகட்டத்துக்குப் பொருத்தமற்றதெனக் கூட பலர் கருதியதுண்டு. நாட்டின் பொதுச்சொத்துக்களைக் கொள்ளையடித்து, மீதமுள்ளவற்றை தமது அடிவருடிகளும், ஆதரவாளர்களும் பெறத்தக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் தரப்பினரே அவர்களாவர். அவர்கள் பல நவீன ரக வாகனங்களைப் பயன்படுத்தியும், பெருந்தொகைப் பாதுகாவலர்களைத் தமக்கென நியமித்தும் தமது ஆடம்பரத்தை வெளிக்காட்டி பொதுமக்களது மதிப்பையும் ஆதரவையும் ஈட்டிக் கொள்ளும் குறுக்கு வழி கௌரவத்தை ஈட்டிக் கொள்கின்றனர்.

அரசியல்வாதிகள் மக்களது ஆதரவு வாக்குகளை ஈட்டிக் கொள்ளும் நோக்கில் இத்தகைய தமதுவசதி வாய்ப்புக்களை வெளிப்படுத்தித் தம்மைப் பிரபல்யப்படுத்திக் கொள்வதற்கு பெருந்தொகை நிதியைச் செலவிட வேண்டியுள்ளது. அவர் கள் தாம் வகிக்கும் பதவிகளுக்கான சம் பளத்தின் மூலம் இத்தகைய செலவினத்தை ஈடுகட்ட முடியாதென்பதை பொதுமக்கள் நன்கறிவர். இதனால் ஏதோ முறையற்ற விதங்களில் தமது அரசியல் தலைவர்கள் இதற்கான நிதியை தேடிக்கொள்கின்றனர் என்பதையும் கூட பொதுமக்கள் தெரிந்து வைத்துள்ளனர். ஆயினும் மக்கள் இத்தகையோருக்கு ஆதரவளித்து வாக்களித்து அவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். ஜனநாயக ரீதியில் தாம் தேர்ந்தெடுத்த அரசியல் வாதிகளை முறையற்ற விதத்தில் கையாடல் செய்தமைக்காக பொலிஸார் எவ்வாறு கைது செய்ய இயலுமெனவும் மக்களில் ஒரு சாரார் வாதிடுகின்றனர். மொத்தத்தில் ஊழல் மோசடி, இலஞ்சம் பெறுதல் என்பவை எமது ஜனநாயக நடைமுறையின் அடிப்படை இலட்சணம் என வாக்காளர்களில் ஒரு தரப்பினர் கருதுகின்றனர். தமது அரசியல் தலைவர்களே பொது நிதியைக் கையாடல் செய்வதால் தாமும் அதனை மேற்கொள்வது தவறல்ல என்பது அந்தத் தரப்பினரது வாதமாக அமைகிறது.

சிறிய அளவிலான திருட்டொன்றில் ஈடுபடும் சாதாரண பொது மகனொருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு குற்றம் நிரூபிக்கப்படுமானால் தண்டனையாகச் சிறைவாசம் அனுபவிக்க நேர்கிறது. ஆனால் சமூகத்தில் பெரிய மனிதராக கணிக்கப்படும், அரசியல் செல்வாக்குள்ள நபரொருவர் கோடிக் கணக்கான பொது நிதியைக் கையாடல் செய்தால் ஏதோ விதத்தில் அவர் தம்மைச் சுற்றவாளியாக நிலை நிறுத்தி தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் வாய்ப்பு இன்று பெரும்பாலும் நிலவுகிறது. எனவே அரச வளங்களைக் கையாடல் செய்வதாயின் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி கோடிக் கணக்கு பெறுமதியான கையாடலை மேற்கொள்ள முடியுமென நம்ப வேண்டியுள்ளது. அத்தகையோர் தேர்தல்களில் போட்டியிட்டால் மக்கள் அவர்களது நிலைப்பாட்டுக்கு ஆதரவளித்து அத்தகையோரை தேர்தலில் வெற்றியீட்ட வைக்கக் கூடும். ஏனெனில் நாம் மோசடிக்காரர்களுக்கு ஆதரவளிப்போம். அவர்கள் எமக்கு ஆதரவளிப்பார்கள் என்பது பொருத்தமான தேர்தல் சுலோகமாக அமையுமென நான் கருதுகிறேன்.

சிறு சிறு குற்றங்களுக்கு பொதுமக்களைக் கைது செய்து நீதியின் முன் நிறுத்தும் தரப்பினர் பெரிய அளவிலான நிதிக் கையாடல்களை மேற்கொள்வோரை கைது செய்யாமல் அவர்களுக்கெதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொண்டு வழக்குத் தொடுத்து பிணை வழங்கும் செயற்பாடு எத்தகைய விதத்தில் நியாயமாகும் என்பது குறித்து நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தல் பொருத்தமான ஒன்றாகும்.

> “அத்தகைய தமது ஊழல் மோசடிச் செயற் பாடுகளால் பெரும் பணம் ஈட்டிக்கொள் ளும் நபர்களுக்கு எதிராக பொதுமக்கள் குரல் எழுப்ப முயன்றாலும், பல சந்தர்ப் பங்களில் அவர்கள் தமது அரசியல் செல் வாக்கு மற்றும் சமூக, சமய உயர்மட்டங் களின் ஆதரவைப்பெற்று தமக்கெதிரான குற்றச்சாட்டுக்களைச் செயலிழக்கச் செய்வதில் வெற்றி கண்டு விடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## அன்புதான் வாழ்க்கை

நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவிபுரிவதும் உலகிற்கு நன்மை செய்வதும் தான். அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறு எதுவும் நமக்குத் தேவையில்லை. வளர்ச்சி அடைவதும் அன்பு செலுத்துவதுமே வாழ்க்கை. அதுவே வாழ்க்கை நியதி. மேலைநாட்டு விஞ்ஞானத்தோடு இணைந்த வேதாந்தமும், பிரம்மச்சரியமும், வாழ்க்கையின் அடிப்படை இலட்சியங்களாக நமக்குத் தேவைப் படுகின்றன. கல்வி என்பது மூளைக்குள் பல விடயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல. அப்படித் திணிக்கப்படும் அந்த விடயங்கள் வாழ்நாள் முழுவதும் ஜீரணம்ஆகாமல் தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருக் கும். அனைத்து தேவைகளையும், துன்பங்களையும் நீக்கு வதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது.

## நாம் உணவை உண்பதற்கு முன்னர் மும்மூர்த்திகளுக்கு வழிபாடு ஆற்றுவதன் தாற்பரியம் என்ன?

உணவை உண்பவன் திரிமூர்த்திகளைப் பிரார்த்தித்து தனக்கு சத்தியம்.ரிதம் ஆகியவற்றின் பாதுகாப்பை அளிக்கும்படியும் திரிகரண சுத்தியை - அதாவது எண்ணம், சொல், செயல் ஆகியவற்றின் சக்தியை வழங்கும் படியும் வேண்டுதல் செய்ய வேண்டும்.




**சாயி சிந்தனை**

# காதுகளை பராமரிப்பதில் அலட்சியம் வேண்டாம்

நமது உடல் உறுப்புக்களை நாம் தினமும் பராமரிக்க வேண்டும். காதில் சேரும் பிசின் போன்ற குடுமியின் வேலையே காதுகளை பாதுகாப்பது தான். நமது தாடை அசைவின் போது தானாகவே அழுக்குகளை வெளியேற்றும் திறன் காதுகளுக்கு உண்டு. கையில் கிடைத்த பொருள்களையெல்லாம் காதில் விட்டு குடைந்து அழுக்குகளை நீக்க முயற்சி செய்யக்கூடாது. ஏனெனில் காதில் உள்ள செவிப்பறையில் ஓட்டை விழுந்து கேட்கும் திறனை இழக்கும் அபாயம் ஏற்படலாம். காதில் எண்ணெய் விடுவதும் தவறான செயல். ஆதலால் தேவைப் படும் போது காது, மூக்கு, தொண்டை நிபுணர்களிடம் சென்று காதுகளைச் சுத்தம் செய்து கொள்ளலாம். காது வலி, காது அடைப்பு, அல்லது காதில் இருந்து திரவம் வடிதல் போன்ற பிரச்சினைகள் இருக்கும் போது தலைக்கு குளிப்பது, நீர்நிலைகளில் நீராடுதல் போன்றவற்றை தவிர்ப்பது நல்லது. காதில் தண்ணீர் புகுந்து அடைப்பு ஏற்பட்டால் காது மடல்களை லேசாக அசைப்பதன் மூலம் தண்ணீர் வெளியேறி அடைப்புத் தொல்லையை நீக்க முடியும். தேவைப் பட்டால் மெல்லிய பருத்தித் துணி மூலம் சுத்தப்படுத்தலாம். காது குத்தும்போது மென்மையான காது மடலில் மட்டுமே காது குத்த வேண்டும். காதில் உள்ள குருத்தெலும்பு பகுதியில் காது குத்தினால் நோய்த் தொற்று ஏற்படுவதோடு காது சுருங்கிவிடவும் வாய்ப்பு உள்ளது.

(தொடரும்)



# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 800 | 600 | 700 | 650 |
| நண்டு | 300 | 400 | 400 | 300 | 300 | 350 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 700 | 450 |
| பாரை | 600 | 500 | 500 | 700 | 600 | 420 |
| சுறா | 550 | 500 | – | 650 | 700 | – |
| சீலா | 300 | 400 | 400 | 450 | 300 | 350 |
| விளை | 600 | 400 | 400 | 500 | 600 | 320 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 300 |
| கும்பிளா | 400 | 350 | 400 | 400 | 400 | – |
| கிழாக்கன் | 650 | 700 | 300 | 450 | – | – |
| ஓரா | 400 | 400 | – | 300 | 200 | – |
| திரளி | 200 | 250 | 200 | 250 | 300 | 250 |
| நகரை | 200 | 300 | – | 300 | 200 | 300 |
| ஆடை | 150 | 200 | 150 | 200 | 300 | 100 |
| ஒட்டி | 300 | 300 | 200 | 250 | 300 | 250 |
| திருக்கை | 150 | 350 | 300 | 350 | 200 | 140 |
| பாலை | 400 | 300 | – | 300 | – | – |
| வாளை | 100 | 200 | – | 400 | – | 350 |
| கொய் | 100 | 150 | 100 | 120 | 100 | – |
| மதனம் | 150 | 250 | – | 250 | 350 | 250 |

## நாளை

**வைகாசி-22 வெள்ளிக்கிழமை 05.06.2015**

திதி: திருதியை மு.இ. 07.24 வரை
நட்சத்திரம்: பூராடம் மு.ப.07.49 வரை
சுபநேரம்: 05.52-07.22 வரை
இராகுகாலம்: 10.22-11.52 வரை
உலக சுற்றாடல் தினம்

# மரக்கறிகளின் நேற்றைய நிலை நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 50 | 60 | 60 | 60 | 60 | 30 |
| கத்தரி | 160 | 120 | 120 | 100 | 130 | 80 | 80 | 40 |
| கரட் | 200 | 180 | 180 | 140–200 | 200 | 320 | 200 | 150 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 50 | 80 | 60 | 40 |
| பயிற்றை | 160 | 120 | 200 | 100 | 140 | 80 | 140 | 60 |
| பாகல் | 180 | 160 | 120 | 120 | 120–140 | 160 | 160 | 120 |
| கருணைக்கிழங்கு | 90 | 100 | 120 | – | 100–120 | 160 | 120 | 75 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 110 | 100 | 120 | 120 | 120 | 90 |
| சி.வெங்காயம் | 100 | 100–160 | 120 | 120 | 120–160 | 160 | 120 | 85 |
| பூசணி | 30 | 25 | 40 | – | 20–30 | 50 | 60 | 15 |
| தக்காளி | 70 | 90 | 70 | 60 | 80–70 | 120 | 80 | 60 |
| வாழைக்காய் | 40 | 60 | 40 | 40 | 40–50 | 40 | 60 | 30 |
| கீரை | 40 | 30–50 | 50 | 15 | 30–40 | 50 | 35 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30–40 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 60 | 40 | 60 | 60 | 80 | 120 | 20 |
| புடோல் | 80 | 120 | 100 | 90 | 100 | 90 | 120 | 80 |
| கோவா | 140 | 100 | 100 | 100 | 100 | 120 | 100 | 40 |
| வெண்டி | 140 | 120 | 120 | 70 | 140 | 80 | 100 | 40 |
| போஞ்சி | 160 | 200 | 240 | 160 | 200 | 180 | 200 | 120 |
| லீக்ஸ் | 200 | 160 | 160 | 160 | 200 | 120 | 200 | 170 |
| தேங்காய் | 50 | 30–40 | 50 | 40 – 50 | 40–50 | 40 | 35–45 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 90 | 100–130 | 110 | 120 | 120 |
| தேசிக்காய் | 180 | 120 | 180 | 120 | 160 | 140 | 140 | 140 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 30–40 | 20 | 20 | 08 |
| கறிமிளகாய் | 80 | 140 | 160 | 140 | 160–140 | 200 | 100 | 80 |
| இராசவள்ளி | 120 | – | 140 | 80 | 100–120 | 260 | 180 | – |
| முருங்கைக்காய் | 500 | 300 | 600 | 200 | 300–400 | 400 | 250 | 200 |

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | 2 | | 5 | | |
| | 8 | | | | 4 | | 9 | |
| | | 3 | | | 7 | 6 | 2 | |
| | | | | | | | 5 | 1 |
| 9 | | | 8 | | 2 | | | 3 |
| 8 | 6 | | | | | | | |
| | 3 | 6 | 2 | | | 9 | | |
| | 9 | | 7 | | | | 1 | |
| | | | | 3 | | | | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | 6 | 7 | 4 | 1 | 8 | 9 | 3 |
| 8 | 1 | 9 | 3 | 2 | 5 | 7 | 4 | 6 |
| 4 | 7 | 3 | 9 | 6 | 8 | 1 | 2 | 5 |
| 3 | 5 | 7 | 8 | 9 | 4 | 6 | 1 | 2 |
| 6 | 4 | 2 | 1 | 3 | 7 | 5 | 8 | 9 |
| 1 | 9 | 8 | 6 | 5 | 2 | 3 | 7 | 4 |
| 9 | 8 | 4 | 5 | 7 | 3 | 2 | 6 | 1 |
| 7 | 6 | 5 | 2 | 1 | 9 | 4 | 3 | 8 |
| 2 | 3 | 1 | 4 | 8 | 6 | 9 | 5 | 7 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூன் மாத இராசி பலன்கள்

## கடகம்

இந்த மாதம் 11 ஆம் இடமான இடபத்தில் இணைந்து இருக்கும் புதன்,சூரியன்,செவ்வாய் ஆகிய கிரகங்கள் நற்பலனை கொடுப் பார்கள். ராகு கன்னியில் இருந்து முன்னேற்றத்தை தருவார். தற்போது சனிபகவான் சாதகமற்ற இடத்தில் இருந்தாலும், ஜூன் 12 முதல் வக்கிரம் அடைந்து துலாம் ராசிக்கு வருகிறார். இந்த காலத்தில் நன் மையை சனி வழங்குவார். செவ்வாயால் முயற்சியில் வெற்றி உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். சூரியன், புதனால் பொருளா தார வளம் மேம்படும். தொழிலில் இலாபம் அதிகரிக்கும். சமூகத்தில் மதிப்பு உயரும். அரச வகையில் நன்மை உண்டாகும். உடல் உபாதை நீங்கி ஆரோக்கியம் மேம்படும்.



பெண்களின் ஆதரவு உண்டு. அவர்களால் பொன், பொருள் சேரும். கணவன்–மனைவி இடையே அன்புணர்வு கூடும். புத்தாடை, அணிகலன் வாங்குவீர்கள்.

**தொழில், வியாபாரத்தில்:** வருமானத்துக்கு குறைவிருக்காது. வெளியூர்ப்பயணம் மூலம் ஆதாயம் அடைவீர்கள். வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்பு அறிந்து நிறைவேற்றுவீர்கள். பணியாளர்களுக்கு நிர்வாகத்தினரின் ஆதரவால் வளர்ச்சி உண்டாகும்.

**கலைஞர்கள்:** விடா முயற்சியால் புதிய ஒப்பந்தம் கிடைக்கப் பெறுவர். இந்த மாதம் உங்களுக்கு சாதகமான காற்று வீசும்.

**அரசியல்வாதிகள்:** சிறப்பான நிலை காண்பர். மக்கள் மத்தியில் எதிர்பார்த்த புகழ் உருவாகும்.



**மாணவர்களுக்கு:** புதன் சாதகமாக இருப்பதால் போட்டிகளில் வெற்றி காணலாம்.

**விவசாயிகள்:** பயறு வகைகள், பசு வளர்ப்பு மூலம் வருமானம் காண்பர். புதிய சொத்து வாங்கும் எண்ணம் கைகூடும். வழக்கு விவகாரங்கள் சாதகமாக அமையும்.

**பெண்கள்:** அக்கம் பக்கத்தினரிடம் நெருக்கமாகப் பழகுவர்.

**நல்ல நாள்:** ஜூன் 6, 7, 12, 13, 14, 15

**கவன நாள்:** ஜூன் 8, 9 சந்திராஷ்டமம், கவனம்.

**அதிர்ஷ்ட எண்:** 1, 3, 9

**நிறம்:** செந்தூரம், பச்சை

**பரிகாரம்:** சனிக்கிழமை பெருமாள் கோயிலுக்குச் சென்று வாருங்கள். ஏழைகளுக்கு இயன்ற உதவி செய்யுங்கள். தட்சிணாமூர்த்திக்கு அர்ச்சனை செய்யுங்கள்.

# பெண்களின் ஏற்றங்களும் எதிர்நோக்கும் மாற்றங்களும்

மகளிர் தமது அடிப்படை உரிமைகளை அடைவதற்கும், வாழ்வில் சந்தித்த பல்வேறு அவலங்களை அகற்றுவதற்கும் பெருமளவில் போராட்டங்களை நடத்தவேண்டிய சூழல் சென்ற நூற்றாண்டில் நிலவியது.

களர் நிலங்களாக மதிக்கப்பட்ட பெண்களின் தளர் நிலை இன்று வெகுவாக மாறியுள்ளது எனலாம். பெண் கல்வியெனும் விதையால் அறிவுப்பயிர் செழித்து வளர்ந்து சிந்தனை மலர்கள் மணம்வீசி வெற்றிக்கனிகளை எட்டிப்பறித்து வருகின்றனர். இல்லத்தரசி என்ற பட்டத்தோடு பெயரளவில் அரசியாய் உண்மையில் அடுக்களை துடைத்தும், படுக்கையை விரித்தும் வீட்டினர் அனைவர்க்கும் அடிமையாய் வா(தா)ழ்ந்து வந்த பெண்கள் இன்று நாட்டையே ஆள்கின்றனர். சந்திரனைக் காட்டிக் குழந்தைக்குச் சோறூட்டிக் கொண்டிருந்த மகளிர் இன்று சந்திர மண்டலத்துக்கே சென்று வருகின்றனர். அன்ன நடையால் வீட்டை மட்டுமே அளந்து கொண்டிருந்தவர்கள் இன்று வானை அளக்கின்றனர்; கடலை அளக்கின்றனர்.

அலுவலகங்களிலும், ஆராய்ச்சிக் கூடங்களிலும், கணினி நிறுவனங்களிலும், கூட்டு நிறுவனங்களிலும் அற்புதமாய்ப் பணியாற்றி வருகின்றனர் இன்றைய பெண்கள் என்பதை எண்ண எண்ண இனிக்கவே செய்கின்றது. வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற விந்தை மனிதர்கள் இன்று தலைக் குனிவைச் சந்தித்துவருவது மகளிர்க்கு மட்டற்ற மகிழ்ச்சி தருவதாய் உள்ளது.

இவ்வாறு பெண்களின் முன்னேற்றமும் வளர்ச்சியும் இந்த 21 ஆம் நூற்றாண்டில் கணிசமான அளவில் உள்ளது என்றபோதிலும், அவர்களின் வெற்றியைத் தடுக்கவும், நிம்மதியைக் கெடுக்கவும், நல்வாழ்வை நாசமாக்கவும் நடைபெற்றுவரும் முயற்சிகளுக்கும், சதிகளுக்கும் பஞ்சமேயில்லை. வன்கொடுமைகள், பாலியல் தொந்தரவுகள் போன்றவற்றைப் பாடசாலை, கல்லூரிகளில் படிக்கும் பெண்களும், அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களும் அதிக அளவில் சந்தித்துவருகின்றனர். இத்தகைய கொடுமைகளால் உடலாலும், உள்ளத்தாலும் பாதிக்கப்படும் பெண்களில் சிலர் தற்கொலை செய்து கொள்வதும் தொடர்கதையாகி வருவதைப் பத்திரிகைகள் தினமும் பத்தி பத்தியாய் வெளியிடுகின்றன.

பெண்களின் முன்னேற்றமும் வளர்ச்சியும் இந்த 21 ஆம் நூற்றாண்டில் கணிசமான அளவில் உள்ளது என்றபோதிலும், அவர்களின் வெற்றியைத் தடுக்கவும், நிம்மதியைக் கெடுக்கவும், நல்வாழ்வை நாசமாக்கவும் நடைபெற்றுவரும் முயற்சிகளுக்கும், சதிகளுக்கும் பஞ்சமேயில்லை. வன்கொடுமைகள், பாலியல் தொந்தரவுகள் போன்றவற்றைப் பாடசாலை, கல்லூரிகளில் படிக்கும் பெண்களும், அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களும் அதிக அளவில் சந்தித்து வருகின்றனர்.

இத்துணைப் பிரச்சினைகளுககு இடையிலும் விடாமுயற்சியுடன் தளராது பணியிடங்களில் உழைக்கும் பெண்களுக்கு, ஆண்களுக்கு நிகரான அங்கீகாரமும், பதவி உயர்வும் கிடைப்பதில்லை என்பது கசப்பான உண்மையாகும். ஓரளவுக்குமேல் பெண்கள் உயர் பதவிகளுக்குச் செல்வதை ஆணாதிக்கச் சமுதாயம் பல்வேறு வகைகளில் தடைசெய்கின்றது; அனுமதிக்க மறுக்கின்றது. கண்ணுக்குத் தெரியாத இந்தத் தடுப்புச்சுவர் பெண்களின் உயர்வுக்கும் வளர்ச்சிக்கும் மிகப்பெரிய முட்டுக்கட்டையாய் இருப்பது வேதனையளிக்கின்றது. அதுபோல் ஒரே வேலையைச் செய்கின்ற ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே அளவிலான ஊதியமும் (சில இடங்களில்) வழங்கப்படுவதில்லை. தினக்கூலித் தொழிலாளர்களிடையே ஊதிய வேற்றுமையை இன்றும் நாம் கண்கூடாகக் காண முடியும். இவையெல்லாம் பெண்களின் வளர்ச்சி கண்டு பொறுக்காத, அழுக்காறு மிகுந்தஆண் அதிகாரவர்க்கத்தின் வேலையே என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

வெளியில் பெண்களுக்கு இழைக்கப்படும் தீங்குகளும் தொல்லைகளும் ஒருபுறம் என்றால்....மறுபுறம் வீடுகளில் அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் அவற்றிற்குச் சற்றும் குறைந்தவையல்ல. திருமணமான பெண்களில் சிலர் புக்ககத்தினரின் நாகரிகமற்ற பேச்சுக்களையும், ஏச்சுக்களையும் பொறுமையோடு தாங்கிக் கொள்ள வேண்டியுள்ள அவலநிலை இன்றும் நீடிக்கின்றது. திருமணமான உடனே பெண்ணொருத்தி பிள் ளைபெறத் தவறினால் சொல்லவே நாக் கூசும் மலடி என்ற பட்டத்தை எந்தப் பல்கலைக்கழகத்திடமும் அனுமதி பெறாமல் இந்தச் சமூகம் அவளுக்குச் சூட்டுகின்றது! அதுபோக, குடும்பத்தில் ஆண் குழந்தை பிறக்காமல் அடுத்தடுத்துப் பெண் குழந்தைகள் பிறந்துவிட்டாலோ.... அந்தப் பெண்ணுக்குக் கிடைக்கும் வசவுகளுக்கு ஓர் அளவில்லை.

(தொடரும்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சொர்க்கமும் நரகமும்

ஒரு நாள் ஒரு ஜென் துறவியிடம் ஒரு சாமுராய் வீரர் வந்தார். ஜென் துறவி அமைதியாக அமர்ந்திருந்தார். சாமுராய் வீரர் துறவியிடம் ஒரு சந்தேகம் கேட்க வேண்டும் என்று சொன்னார். துறவி புன்னகையுடன் தலையசைத்தார். ஐயா! எனக்கு சொர்க்கத்துக்கும் நரகத்துக்கும் வித்தியாசம் தெரியப்படுத்துங்கள் என்றார் சாமுராய் வீரர். துறவி பதிலேதும் சொல்லாமல் சிரித்துக் கொண்டிருந்தார். சாமுராய்க்கு தலைக்கு மேல் கோபம் வந்து விட்டது. தனது சாமுராய் வாளை உருவிக் கொண்டு உன்னை மதித்துக் கேள்வி கேட்பவனை அவமதிப்பாயா? என்று உறுமினார். துறவி புன்னகை மாறாமல் இப்போது நீர் நரகத்தில் இருக்கிறீர் என்றார். இதைக் கேட்ட சாமுராய் சற்றே தெளிவு பெற்றவராய் உடனே பின் வாங்கினார். துறவியைப் பணிந்து வணங்கி ஐயா! அறியாமல் செய்து விட்டேன். மன்னித்து விடுங்கள் என்று சொன்னார். இப்போதும் அதே புன்னகையுடன் துறவி சொன்னார் நீர் இப்போது சொர்க்கத்து வந்து விட்டீர்.

# தத்துவங்கள்


- மகிழ்ச்சி வண்ணத்துப்பூச்சி போன்றது. அதைத் துரத்தினால் அகப்படுவதில்லை. ஆனால் உன் கவனத்தைப் பிற பொருள்களின் மேல் திரும்பும்போது அது அமைதியாக உன் தோளில் வந்து உட்கார்ந்து கொள்ளும். – விக்டர் ஃபிராங்கின்
- ஒரு மனிதனைத் தெரிந்து கொள்வதைவிட பத்து நாடுகளைத் தெரிந்து கொள்வது எளிது. – யூதப் பழமொழி
- உத்தரவால் வாழ்கிறவன் பணக்காரன். உழைத்து வாழ்பவன் ஏழை.– ரஷ்யப் பழமொழி.
- பிறையே! நீ குறையாய் இருப்பதால் குமைந்து போகாதே! உனக்குள்ளே ஒரு பூரண சந்திரன் புதைந்து கிடக்கின்றான்–இக்பால்.
- உலகில் செயல்களைச் செய்து காட்டுபவர் சிலர். செய்துகாட்டும் செயல்களைப் பார்த்துக் கொண்டிருப்பவர் பலர். என்ன செயல் நடைபெறுகிறது என்று அறியாமலேயே இருப்பவர் அனேகர்.– பட்லர்.
- நல்ல மனநிலையில் செய்கின்ற எதுவும் நூறு சதவிகிதம் நேர்த்தியுடன் இருக்கும்.–விவேகானந்தர்.
- இருக்கும் இடத்தில் இந்த நொடியில் இன்பமாக இரு. இதுவே வாழ்க்கை.– இங்கர்சால்.
- நீ செல்லும் பாதையைச் சரியாகத் தேர்ந்தெடு. பிறகு அந்தப் பாதையில் உன் பயணத்தைத் தொடங்கு. – ஷேக்ஸ்பியர்.
- வெற்றி என்பது இழுத்துப் பூட்டப்பட்ட அலிபாபாவின் குகை அல்ல. அது விரிந்து கிடக்கும் வானம். – நெப்போலியன்.
- மனத்தை ஒருவர் வைத்திருக்கும் நிலையைப் பொறுத்தே அவர் அடையும் மகிழ்ச்சி இருக்கிறது. – ஆபிரஹாம் லிங்கன்.



# ஆலமரம்

அடர்ந்து வளர்ந்த ஆலமரம்
ஆல மரமாம் ஆலமரம்
நடந்து செல்லும் மனிதருக்கு
நிழல் கொடுக்கும் ஆலமரம்!
அத்திப்பழத்தைப் போலவே
ஆலம்பழமும் சிவப்புத்தான்
கொத்தித் தின்னும் பறவைகள்
கூடிவிட்டால் இரைச்சல்தான்!



அவிழ்ந்த கூந்தல் போலவே
ஆலம் விழுது காணுமே
தவழ்ந்து துள்ளி மந்திகள்
தாவி ஊஞ்சல் ஆடுமே!
சின்னச் சின்னத் துகள்களாய்ச்
சிறிய தான விதைகளாம்
மண்ணில் ஈடு இணையிலா
மரங்கள் ஆல மரங்களாம்!

கிளையில் தொங்கும் விழுதுகள்
தரையைத் தொட்டு வளர்ந்திடும்
வளர்ந்த பின் தாய் மரத்தை
வாழும் வரையில் தாங்கிடும்!
வளர்ந்த பின்பு நீங்களும்
விழுதுபோல உண்மையாய்
தளர்ந்த அன்னை தந்தையை
தாங்கிக் காக்க வேண்டுமே!

# வெற்றியில் ஏமாந்து விடாதீர்கள்!

தோல்வியில் துவண்டு விடாதீர்கள், தன்னம்பிக்கை இழந்து விடாதீர்கள், முயற்சியை நிறுத்தி விடாதீர்கள் என்று பலர் அறிவுரை சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆனால் வெற்றி பெற்றவர்களுக்கு யாரும் அதிகம் அறிவுரை சொல்வதில்லை. காரணம் வெற்றி பெற்றவர்கள் அறிவு மிக்கவர்கள், நல்ல உழைப்பாளிகள், எல்லாம் தெரிந்தவர்கள் என்ற அபிப்பிராயம் பலர் மனதிலும் இருப்பது தான். அதெல்லாம்



மற்றவர்கள் மனதில் இருந் தால் பரவாயில்லை. வெற்றி பெற்றவர்கள் மனதிலேயே அந்த அபிப்பிராயம் உறுதியாகத் தோன்றும் போது அது எதிர்கால ஆபத்துக்கு அத்திபாரம் போடு கிறது. வெற்றி எப்பேர்ப் பட்டவரையும் ஏமாற்ற வல்லது. அது மூன்று குணாதிசயங்களை வெற்றியாளர் களிடம் ஏற்படுத்த வல்லது.

முதலாவதாக, வெற்றி ஒருவரிடம் என்னை மிஞ்ச ஆளில்லை என்ற கர்வத்தை ஏற்படுத்தலாம். கர்வத்தைப் போல வீழ்ச்சிக்கு வழி வகுக்கும் ஒரு குணாதிசயம் வேறொன்று இருக்க முடியாது. புராணங்களில் அரக்கர்கள் கடவுளிடம் வரம் பெற்று பெரும் சக்தி பெறுவார்கள். பெரும் சக்தி பெற்ற அவர்களது கர்வம் அவர்களைச் சும்மா இருக்க விடாது. பலரைத் துன்புறுத்த முனைவார்கள், எங்களை எதிர்க்க யார் இருக்கிறார்கள் என்று அறை கூவல் விடுப்பார்கள். முடிவு அவர்கள் அழிவு தான் என்பதை நாம் புராணங்களில் படித்து இருக்கிறோம். புராணங்களில் மட்டுமல்லாமல் வரலாறுகளிலும் இதற்கு ஏகப்பட்ட உதாரணங்களைப் பார்க்க முடியும். ஹிட்லர், முசோலினி, நெப்போலியன் போன்றவர்கள் பெற்ற ஆரம்ப வெற்றிகள் சாதாரண



மானதல்ல. அது அவர்கள் மனதில் தாங்கள் எவராலும் வெல்லப்பட முடியாதவர் கள் என்ற கர்வத்தை ஏற்படுத்தியது. கர்வம் ஒரு மனிதனை உள்ளதை உள்ளது போல் பார்க்க விடாது. அறிவுக் கண்ணை அது மறைக்க வல்லது. நன்மைகளை செய்ய கர்வம் பெரும்பாலும் அனுமதிப்பதில்லை. தான் செய்வதே சரி என்கிற எண்ணம் ஒரு வரை எதையும் சீர்தூக்கிப் பார்க்க வைப்ப தில்லை. அதன் விளைவு அவர்களைப் பெரும் வீழ்ச்சி காண வைக்கிறது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகரை முருக்கையடிமுனை மக்கள் சொந்தக் காணி கோரிப் போராட்டம்

வாகரை, ஜூன் 4

வாகரை முருக்கையடிமுனைக் கிராமத்தில் படையினரின் தேவைகளுக்காக கையகப்படுத்தப்பட்ட தமிழ் மக்களின் காணிகளை மீளப்பெற்றுத் தருமாறு கோரி பொதுமக்கள் வாகரை பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 11 மணியளவில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் சட்டத்தரணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அந்தக் கட்சியின் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை பிரதேச அமைப்பாளர்களும் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

கடந்த 2006 ஆம் ஆண்டு மே மாதம் கிழக்கில் ஆரம்பிக்கப்பட்ட போர் காரணமாக வாகரை முருக்கையடிமுனை கிராம மக்கள் இடம்பெயர்ந்து சென்று பின்னர் மார்ச் மாதம் 2007 ஆம் ஆண்டு தாங்கள் மீண்டும் தங்களது கிராமத்துக்கு திரும்பியபோது, அங்கு தங்களது வாழ்விடங்களில் இராணுவத்தினர் முகாமிட்டிருந்ததாகவும். தங்களை வற்புறுத்தி கையொப்பம் பெற்ற இராணுவத்தினர் ஊரியன்கட்டு பகுதியில் 18 பேர்ச் காணிகளை வழங்கியதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

மேலும், தங்களுக்கு வழங்கப்பட்ட பகுதிகளில் குடிதண்ணீரைக் கூட பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளதாகவும் தங்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் எந்தவித வளங்களும் இன்றி வரண்ட பிரதேசமாக உள்ளதால்,

தங்களது விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு தாங்கள் வாழ்வாதாரத்துக்கு மிகுந்த கஸ்டப்படுவதால் தற்போது நாட்டில் நல்லாட்சி ஏற்பட்டுள்ளதால் உடனடியாக தங்களது காணிகளில் இருக்கும் இராணுவத்தினரை வெளியேற்றி எங்களது காணிகளை பெற்றுத்தருவதற்கு வாகரை பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் பிரதேச செயலாளர் செல்வி. எஸ்.இராகுலநாயகியிடம் மனு ஒன்றையும் கையளித்தனர்.

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நாங்கள் கிழக்கில் போர் ஆரம்பிக்கப்பட்ட 2006ஆம் ஆண்டில் மே மாதத்தில் முருக்கையடிமுனை கிராமத்தை விட்டு இடம்பெயர்ந்தோம் பின்னர் 2007ஆம் ஆண்டில் மார்ச் மாதம் நாங்கள் மீள் குடியேறுவதற்காக எமது கிராமத்துக்குத் திரும்பியபோது எமது வாழ்விடங்களில் படையினர் முகாம் இட்டுள்ளதைத் தெரிந்து கொண்டோம்.

வாழ்ந்த கிராமமானது வளமிக்க மண்ணையும் நிரந்தர வருமானம் தரத்தக்க மரங்களையும் கொண்டிருந்ததுடன் வளமிக்க மண் என்பதால் வீட்டுத் தோட்டத்தின் ஊடாக அன்றாடத் தேவைகளை நிறைவு செய்யத்தக்க வழிகளை கொண்டதாகவும் இருந்தது.

ஆற்றையும் கடலையும் அண்மித்ததாக எமது கிராமம் இருந்ததால் விரும்பிய நேரத்தில் கடற்றொழிலைச் செய்வதற்கு மிக இலகுவாக இருந்ததுடன் கடற்றொழில் உபகரணங்களுடன் பயணப்படுவதும் மிக இலகுவானதாகவும் இருந்தது.



மக்களின் அனைத்து வாழ்வாதாரங்களையும் தன்னகத்தே கொண்டிருந்த இந்தக் கிராமத்தில் வாழ்ந்த எம்மை அங்கு மீளக்குடியமர்த்தாமல் ஊரியன்கட்டு என்ற பிரதேசத்தில் வீடமைப்புக்களைச் செய்து குடியேற்றியுள்ளீர்கள். முருக்கையடி முனையில் சுமார் 80 பேர்ச்சுக்கு மேற்பட்ட காணியில் வசித்து வந்த எமக்குத் தற்போது வெறும் 18 பேர்ச் அளவுள்ள காணிகளே வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் வீடமைப்புக்களை செய்த இடமானது எவ்வித வளங்களையும் தன்னகத்தே கொண்டிருக்காத நிலமாக உள்ளது. ஊரியன்கட்டில் குடி தண்ணீரை பெற்றுக் கொள்வதற்கே கடும் கடின நிலையில் உள்ளது. இங்கு எவ்வாறு நாம் வீட்டுத் தோட்டங்களை அமைத்து எமது வாழ்வை நகர்த்துவது?

தற்போது மீளக் குடியேற்றப்பட்டுள்ள ஊரியன்கட்டில் இருந்து கடல் மற்றும் ஆற்று மீன் பிடிக்கு செல்வதாயின் நாளாந்தம் ஒரு கிலோ மீற்றருக்கு மேல் நடந்து செல்ல வேண்டி இருப்பதுடன் மீன் பிடி உபகரணங்களையும் தூக்கிச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது.

இதனால் இரவு நேர மீன்பிடி உட்பட எமது வாழ்வாதாரமான மீன்பிடி நடவடிக்கையே ஒட்டு மொத்தமாக அழிவுக்குள்ளாகி வருகின்றது.

47 குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ள ஊரியன்கட்டில் தண்ணீரை பெற்றுக் கொள்ள மிகக் கஷ்டப்படுவதுடன் கரல் கலந்த நிலத்தடி நீரினையே சில இடங்களில் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

மழை நாள்களில் வெள்ளம் தேங்கி நிற்கும் இக் கிராமத்தில் போக்குவரத்து முற்றாகச் செயல் இழப்பதுடன் தொற்று நோய்களும் பரவி எங்களை வாட்டுகிறது.

மட்டு திருமலை பிரதான வீதிக்கருகில் இருக்கும் எமது கிராமமான முருக்கையடிமுனை கிராமத்தில் இருந்த போது எவ்வித போக்குவரத்து வசதியீனங்களையும் நாம் எதிர்கொண்டதில்லை.

ஆனால் தற்போது ஊரியன்கட்டில் இருந்து சுமர் ஒரு கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்றால் தான் பிரதான வீதிக்கு செல்ல முடிகிறது. வயோதிபர்கள் நோயாளிகள் கடும் அவஸ்தைப்படுவதுடன் பாடசாலை சிறார்கள் நடந்து சென்று வரும் போது ஆபத்துக்களையும் எதிர்கொள்ள நேரிடுகிறது.

2007ஆம் ஆண்டில் ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழியில் எழுதப்பட்ட கடிதங்களைக் கையளித்து எம்மை அச்சுறுத்தி எமது கையொப்பங்களை பெற்றுக்கொண்டனர்.

அப்போது இருந்த நிலையில் அச்சத்தாலும் அச்சுறுத்தல்களாலும் நாம் அக் கடிதங்களில் கையெழுத்திட்டிருந்தோம். எமது காணிகள் அக் கடிதங்களை பயன்படுத்தி சட்டவிரோதமாக எமது விருப்பத்திற்கு மாறாக கையகப்படுத்தப்பட்டதாக தற்போது அறிகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# கைதிகள் எனப் புலிகளை விடுவிக்கத் தீவிர முயற்சி

## கூட்டமைப்பு மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 4

பல்வேறு தாக்குதல்களை நடத்திய தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களையே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசியல் கைதிகள் எனத் தெரிவித்து விடுவிக்க முயற்சிக்கின்றனர் என்று, திவயின சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளில் ஒரு தொகுதியினரை விடுதலை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில், சிங்கள ஊடகம் இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விடுவித்துக் கொள்ள முயற்சிக்கும் 278 தமிழ் அரசியல் கைதிகளில் பலர் பயங்கரவாதக் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள்.

விமானங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியவர்கள், கண்ணி வெடி வைத்தமை, கடற்படை படகுகள் மீது தாக்குதல் நடத்தியமை, கிராம மக்களைப் படுகொலை செய்தமை, தற்கொலைக் குண்டுதாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியமை, இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்தியமை, படையினரைக் கொலை செய்தமை, பஸ்கள் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் சிவிலியன்களை படுகொலை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்தக் கைதிகள் முன்னாள் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்ற போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இவர்களை அரசியல் கைதிகள் என அடையாளப்படுத்தியுள்ளதாகப் பாதுகாப்புத் தரப்பினர் தகவல் வெளியிட்டுள்ளதாக, திவயினசிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (த-5)

# இ.போ.சவுக்கு ரூபா 1425 லட்சம் செலுத்தவில்லை மஹிந்த அரசு

யாழ்ப்பாணம், ஜூன் 4

கடந்த அரசு தேர்தல் செயற்பாடுகளுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குரிய பஸ்களை ஈடுபடுத்தியபோதும் அவற்றுக்குச் சேர வேண்டிய ஆயிரத்து 425 இலட்சம் ரூபா இன்னும் செலுத்தப்படாமல் இருப்பதாகப் போக்குவரத்து அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

பஸ் டிப்போக்களில் நிலவும் பிரச்சினைகளைக் கண்டறிவதற்காக அமைச்சர் திருகோணமலைக்குச் சென்றிருந்தபோது இவ்வாறு கூறியுள்ளார்.

டிப்போக்களில் நிலவும் குறைபாடுகள் வெகு விரைவில் தீர்த்து வைக்கப்படும் என்றும், இலங்கை போக்குவரத்துச் சபை கடந்த காலங்களில் ஊழியர்களது ஊழியர் சேமலாப நிதியைக் கூட செலுத்த முடியாதளவு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டிருந்ததாகவும், இதனால் ஊழியர்கள் பல பாதிப்புக்களை எதிர்நோக்கியதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கு 10 ஆயிரம் மில்லியன் ரூபா பணம் செலுத்த முடியாது காணப்பட்டிருந்ததாகவும், இவற்றைத் தமது அரசு தற்போது செலுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். கடந்த ஆட்சியாளர்கள் மக்களின் தேவைகளை விடத் தமக்கு வேண்டப்படுபவர்களது தேவைகளை மாத்திரம் நிறைவேற்றியுள்ளனர்.

தற்போது இலங்கை போக்குவரத்துச் சபை நாளொன்றுக்கு 15 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டி வருவதாகவும், இலங்கைப் போக்குவரத்துச் சபையை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றியமைக்கத் திட்டங்கள் வகுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டதுடன் விரைவில் திருகோணமலை – கொழும்பு ரயில் சேவைக்குப் புதிய ரயில் பெட்டியொன்றும் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (த-4)

# குளத்தில் மீன் பிடிப்பதற்கு சென்றவர் சடலமாக மீட்பு

வவுனியா செட்டிகுளம் பகுதியில் குளத்தில் மீன் பிடிக்கச்சென்ற இளைஞன் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

செட்டிகுளம் பிரதேச பிரிவில் உள்ள முகத்தான்குளத்திற்கு நேற்றுக் காலை 6.00 மணியளவில் மீன் பிடிக்கச் சென்ற இளைஞனை 11.00 மணியளவில் காணவில்லை என வீட்டார் தேடியுள்ளனர். இதன் பின்னர் நண்பர்கள், மீன் வியாபாரிகள் குறித்த குளத்தில் தேடுதல் வேட்டை நடத்தினர். தேடுதலின்போது அவர் சடலமாக மீட்கப்பட்டார். சடலத்தில் காலில் சிறு காயமொன்று காணப்பட்டது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 3 பிள்ளைகளின் தந்தையான சின்ன சிற்பிகுளத்தைச் சேர்ந்த வகாப் அலாதீன் (வயது 28) என்பவராவார். இவரது சாவு குறித்து செட்டிக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இவர் சடலமாக மீட்கப்பட்ட இடத்துக்குச் சென்ற மரண விசாரனை அதிகாரி சாவுல் ஹமீட் விசாரணைகளை மேற்கொண்டார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா பொதுவைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (த-402)

# நீரில் மூழ்கி ஒருவர் சாவு

கொழும்பு, ஜூன் 4

தியவன்ன ஓயவில் குளித்துக் கொண்டிருந்தவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நீரில் அடித்து செல்லப்பட்டவரின் சடலத்தைக் கடற்படைச் சுழியோடிகள் பொல்துவ பாலத்துக்கு அருகில் உள்ள தியவன்ன ஓயவில் இருந்து மீட்டுள்ளனர்.

குளித்துக்கொண்டிருந்தவர் திடீரெனக் காணாமற்போனதை அடுத்துப் பொலிஸாரிடம் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரியப்படுத்தியுள்ளனர். இதனை தொடர்ந்தே கடற்படைச் சுழியோடிகள் வரவழைக்கப்பட்டுச் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

# துஷ்பிரயோக முயற்சி என இளைஞன் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 4

யுவதியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டார் என்று குற்றம் சாட்டி வீதியால் சென்ற இளைஞர் மீது கும்பல் ஒன்று தாக்குதல் நடத்திப் பின்னர் பொலிஸாரிடமும் ஒப்படைத்துள்ளது.

அதனால் அவர் சில நாள்கள் சிறைச்சாலையில் விளக்கமறியலில் இருந்த நிலையில் அப்படியான சம்பவம் நடக்கவில்லை என்று பின்னர் கூறப்பட்டமையால் பிணையில் விடுவிக்க பொலிஸார் ஆட்சேபிக்கவில்லை.

இளவாலையில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பிற இடத்தைச் சேர்ந்த அவர் திருமணமாகி அங்கு வசிக்கிறார். சம்பவதினமன்று அவர் வீதியால் சென்ற போது மறைந்திருந்த குழு ஒன்று அவரைப் பிடித்துத் தாக்கியுள்ளது. யுவதியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டார் என்று கூறி அவரைப் பொலிஸில் ஒப்படைத்துள்ளது அந்தக் குழு. நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. பின்னரே அவர் மீதான குற்றச்சாட்டு பொய் என்று பொலிஸார் விசாரணையின் மூலமாகத் தெரிந்துகொண்டுள்ளனர். அதனால் நேற்று அவர் குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். எனினும் அவ்வாறு தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கோரியதன் அடிப்படையில் பொலிஸார் அது பற்றிய மேலதிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவை விமர்சிக்கும் சு.கவின் புத்தகம் வந்தது

கொழும்பு, ஜூன் 4

மஹிந்தவை விமர்சித்து வெளியிடப்பட்டுள்ள புத்தகமானது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டுக்கமையவே எழுதப்பட்டதாகவும், கட்சியின் அனுமதியுடனேயே இது வெளியிடப்பட்டதாகவும் அக்கட்சியின் ஊடகப்பிரிவுப் பொறுப்பாளரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான திலங்க சுமதிபால தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் இப்புத்தகம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் கட்சிப் பொதுச் செயலாளருக்கு அறிவிக் கப்பட்டதுடன் அவரது அனு மதிக்கு அமையவே இது பிரசுரிக்கப்பட்டது. எனினும், தேசிய அமைப்பாளர் சுசில் பிரேமஜயந்தவுக்கு இது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டிருக்கவில்லை என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தார்.

இது தொடர்பில் சிந்தியுங்கள்; கட்சியைப் பாதுகாருங்கள்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள 48 பக்கங்களைக் கொண்ட இப்புத்தகத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது குடும்பத்தினரும் கடுமையான விதத்தில் விமர்சிக்கப்பட்டிருந்தனர்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள சில முக்கிய அம்சங்கள் :-

குடும்ப ஆட்சி நடத்தியமை, அமைச்சர்களுக்கு அவர்களது வேலைகளைச் சரிவர செய்வதற்கான அனுமதி வழங்கப்படாமை, முக்கிய அமைச்சுகளை மஹிந்த தன் வசம் வைத்திருந்தமை. அனைத்து விடயங்களிலும் குடும்ப அங்கத்தவர்களின் தலையீடு, மஹிந்த – மைத்திரி ஒப்பீட்டு இறுதியில் மஹிந்தவை தரக்குறைவான விதத்தில் கருதல் மற்றும் இது போன்ற பல விடயங்கள் இப்புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதில் குறிப்பாக, முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட அராஜகங்களின்போது அரசின் நடவடிக்கைகள் தொடர்பிலும் விமர்சிக்கப்பட்டிருந்தன.

கவிதை நடையில் எழுதப்பட்டுள்ள இப்புத்தகத்தில் மஹிந்தவை நேரடியாக தாக்கியுள்ளதைவிட மறைமுகமாக தாக்கியுள்ளமையே அதிகம்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியை விமர்சிப்பதைப் பார்க்கிலும் முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவரது குடும்ப அங்கத்தவர்கள் அதிகமாக இதில் விமர்சிக்கப் பட்டுள்ளமை விசேட அம்சமாகும். (த–சி)

## மரண அறிவித்தல்

### பொன்னையா சிவபாலன்



(ஓய்வுபெற்ற ஆய்வுகூட உதவியாளர்-யா/மகாஜனக் கல்லூரி)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சிவபாலன் நேற்று (03.06.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-சின்னத்தங்கம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் பரிபூரணம் தம்பதியரின் மருமகனும், சீதாதேவியின் பாசமிகு கணவரும், மேனகா (ஆசிரியர்-வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), கோவரதர் (உரிமையாளர்-3D Mobile) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜனின் (ஆசிரியர்-வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்) அன்பு மாமனும், கிஷேனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2015) வியாழக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னை இல்லம்,
கேணிக்கரை, அளவெட்டி. (60432)(10.6.1)

தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தசாமி கிருபாகரன்



யாழ். கோப்பாய் வடக்கு, பிரான் பற்றைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும், ஜேர்மனியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி கிருபாகரன் 28.05.2015 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-திலகவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகநாதன்- மற்றும் புவனேஸ்வரி(பிரான்ஸ்) தம்பதி யரின் அன்பு மருமகனும், சாந்தினியின் அன்புக் கணவரும், புருசோத், காலஞ்சென்ற சஞ்ஜயா ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகாம்பிகை, பிரபாகரன்(சுவிஸ்), கருணாகரன், காலஞ்சென்றவர்களான மினாம்பிகை, சிறிதரன் மற்றும் லதாம்பிகை (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோகரி, ஜெந்தினி (பிரான்ஸ்), கஜேந்திரன்(பிரான்ஸ்), துஷந்தினி(பிரான்ஸ்), கஜவாணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு அத்தானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2015) வியாழக் கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(60430)(10.6.1)

தகவல்: மருமக்கள்.

## மரண அறிவித்தல்

### அன்சலம்கை தோமஸ்சாள்ஸ் நிறஞ்சன்



யாழ்ப்பாணம், டேவிட் றோட்டைப் பிறப்பிடமாகவும் 44/1, நாவலர் வீதியை வதி விடமாகவும் கொண்ட அன் சலம்கை தோமஸ் சாள்ஸ் நிறஞ்சன் 02.06.2015 செவ்வாய்க்கிழமை அகாலமரண மடைந்துள்ளார்.

அன்னார் அன்சலம்கை தோமஸ்- காலஞ்சென்ற ஸ்ரெலா றோஸ்பெல் தம்பதியரின் அன்புமகனும், இராசதுரை - அங்கலாதேவி தம்பதியினரின் அன்பு மருமக னும் றஜிதாவின் பாசமிகு கணவரும், சமிக்ஷாவின் அன்புத் தந்தையும், யாழினி (கொழும்பு), சுகந்தினி (லண்டன்), பிறேம்குமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜீவகாந்தன்(ஜீவா), றஞ்சித், தாரகா, மதுவந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.06.2015) வியாழக்கிழமை யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒரு மணியளவில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

44/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
077 801 9147

தகவல்:
குடும்பத்தினர்.
(றோயல் கபே)
(60421)
(8.9.3)

# நாட்டை விட்டு ஓடமாட்டேன்

## கோத்தபாய அறிவிப்பு

கொழும்பு, ஜுன் 4

இலங்கைக்கு எனது தேவை இன்னமும் இருக்கின்றது. இதனால் நாட்டை விட்டு வெளியேறப் போவ தில்லை. இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் பல்கலைக் கழகத்தில் பணியாற்றக் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் கடவுச்சீட்டு முடக்கப்பட்டுள்ளதால் அவர் அந்தப் பதவியை ஏற்க முடியாத நிலைமை காணப்படுவதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது குறித்து தனது முகநூல் பதிவில் பதிலளித்துள்ள கோத்தபாய ராஜபக்ஷ, இலங்கைக்கு எனது தேவை இருக்கும்போது நான் நாட்டை விட்டு வெளியேறமாட்டேன் என்று உறுதியளிக்கிறேன். என் மீது நீங்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு நன்றி என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடக்கூடும் என்று ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த நிலையிலேயே, அவர் தனது தேவை இருப்பதாக முகநூல் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார். (த–5)

# 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற உதவுங்கள்

## கட்சிகளிடம் கோருகிறது ஹெல உறுமய

கொழும்பு, ஜுன் 4

20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை எந்தத் தடையுமின்றி நிறைவேற்ற உதவுமாறு ஐக்கிய தேசியக் கட்சி உட்பட அரசியல் கட்சிகளிடம் ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

பொருத்தமற்ற நபர்கள் தெரிவு செய்யப்படுவதைத் தடுக்க நடைமுறையில் உள்ள தேர்தல் முறையில் மாற்றம் செய்யப்படும் என ஜனாதிபதி வழங்கிய தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவது தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் சம்பிக்க ரணவக்க வலியுறுத்தியுள்ளார்.

20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படும் செயற்பாடுகளைத் தடுப்பதில் அதிர்ஷ்டம் கொண்ட சிலர் உள்ளனர். இவர்களில் நாடாளுமன்ற விவாதங்களில் கலந்துகொண்டு தேவையற்ற தலைப்புகளை முன்வைத்து மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

இதனால், 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றும் செயற்பாடுகள் நாடாளுமன்றத்துக்குள் முடங்கியுள்ளன எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டார்.

தேசிய தேவையான தேர்தல் முறையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான காலம் வந்துள்ள நிலையில், புதிய அரசை அமைக்க முன்னிலை வகித்த ஐக்கிய தேசியக் கட்சி பின் நோக்கிச் செல்லக் கூடாது. புதிய தேர்தல் முறை திருத்தத்தால், சிறிய கட்சிகள் பாதிக்கப்படும் எனச் சில சிறிய கட்சிகளின் வாதம் அடிப்படையற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை நாம் அதிகரிக்கும்போது சிறிய கட்சிகளின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவமும் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படுவதைக் கூடச் சிலர் விமர்சித்து வருகின்றனர் எனவும் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (த)

# மாணவர்கள் சிறை செல்வதற்கு சமூகக் குறைபாடுகளே காரணம்

மட்டக்களப்பு, ஜுன் 4

சமூகத்தில் காணப்படும் குறைபாடுகளாலேயே மாணவர்கள் சிறைச்சாலைகளுக்கு செல்லும் நிலையேற்படுகின்றது என மட்டக்களப்பு சிறைச்சாலை ஆணையாளர் ஏ.பிரியங்கர தெரிவித்தார்.

மாணவர்கள் நற்பிரஜைகளாக வாழும் முறை தொடர்பில் உயர்தர மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கு மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட புனித மைக்கேல் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தற்போது சிறைச்சாலைகளில் அதிகளவிலான மாணவர்கள் கைதிகளாக உள்ளனர். மாணவர்கள் மத்தியில் சிறைச்சாலைக்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலைமையைக் கட்டுப்படுத்தி சிறந்த நற்பிரஜைகளை உருவாக்கும் வகையில் பல்வேறு செயற் றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் ஓர் அங்கமாக குற்றவாளி களாக அல்லாமல் நல்ல தலைவர்களாக வாழும் முறை தொடர்பில் உயர்தர மாணவர்களுக்கு விழிப் புணர்வூட்டும் பணிகள் ஆரம்பிக் கப்பட் டுள்ளன.! என்று அவர் அங்கு மேலும் குறிப்பிட்டார். (த–சி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கமுத்து அம்பலவாணர் (சீனிப்பிள்ளை)



சாயுடை மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் ஆலங்குழாய் றோட், சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து அம்பலவாணர் நேற்று (03.06.2015) புதன்கிழமை காலமாகி விட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அம்பலவாணரின் அன்பு மனைவியும், இராசலட்சுமி, இராசரத்தினம், தங்கமலர், இராஜேஸ்வரி (ஆசிரியை யா/கொக்குவில் இந்துக்கல்லூரி), இராமச்சந்திரன் (ஜேர்மனி), இராசரஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், பாலசுப்பிரமணியம், கோகிலாம் பாள், நடராஜா ஸ்ரீகுமரன், யாசோதை, கலைச்செல்வன் ஆகியோரின் மாமியும், துஸ்யந்தன் (பிரான்ஸ்), துசிக்குமார், பபிதா, பானுகா, புரந்தகன் (யாழ் பல்கலைக்கழகம் முதலாம் வருடம்), ஸ்ரீதகன் , கோபிராம், கஜானன், பார்க்கவின், ஹரிவிஸ்ணு, ஸ்ரீராம், அபிராம், ஆரணி, ஆரபி ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(05.06.2015) வெள்ளிக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஆலங்குழாய், சண்டிலிப்பாய்,
021 7912049, 077 6672670

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி நேர்மையானவர் அரசோ பொய்யான நடிப்பில்

## கூறுகிறார் சுசில் பிரேமஜயந்த



கொழும்பு, ஜூன் 4

அரசு பொய்யான நடிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் எனினும் ஜனாதிபதி நேர்மையான முயற்சியுடன் செயற்பட்டு வருவதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கணக்காய்வுச் சட்டவரைவு, தகவல் அறியும் சட்டவரைவு ஆகிய முற்போன சட்டவரைவுகளை ஐக்கிய தேசியக் கட்சியின் அரசு இன்னும் நிறைவேற்றவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற ஆதரவு வழங்கியதுபோல், எமது கட்சி 20ஆவது அரசமைப்புச் சட்டத்தை நிறைவேற்றவும் ஆதரவு வழங்கும். 20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்படும் என்று வாக்குறுதி வழங்கப்பட்டதன் காரணமாகவே 19ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு வழங்கப்பட்டது.

10 லட்சம் வேலை வாய்ப்புகளை வழங்குவதாக பிரதமர் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற எந்த வேலைத்திட்டங்களும் இல்லை.

இளைஞர், யுவதிகளுக்கு சுவிங்கம், பிரேஸ்லட் வழங்குவதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஒரு காலத்தில் ஆடம்பரக் கதைகளைக் கூறியிருந்தார்–என்றார்.

அதேவேளை, எதிர்வரும் பொதுத் தேர்தலை எதிர்கொள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடம் தெளிவான வேலைத்திட்டம் உள்ளது. அதற்கமைய ஏற்கனவே நடவடிக்கைகள் தயாராக உள்ளன எனவும் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்துள்ளார். (த)

# ராமேஸ்வரம் மீனவர் நேற்று ஆர்ப்பாட்டம்

## சக மீனவர் கைதைக் கண்டித்து

சென்னை, ஜூன் 4

இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ராமேஸ்வரம் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, கைதான மீனவர்களையும்,அவர்களின் படகுகளையும் விடுவிக்க தமிழக அரசு மற்றும் மத்திய அரசு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட 14 இந்திய மீனவர்கள் தொடர்பிலேயே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, குறித்த மீனவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)

# புதிய நாடாளுமன்று ஊடாக அரசமைப்புப் பேரவையை அமைப்பதே மிகச் சிறந்தது

## மஹிந்த அணி ஆலோசனை

கொழும்பு, ஜூன் 4

பொதுத் தேர்தலின் பின்னர் அமையும் புதிய நாடாளுமன்றத்தினூடாக அரசமைப்புப் பேரவைக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டால் அது ஏற்புடையதாக இருக்கும் என்று மஹிந்த ஆதரவு அணி நேற்றுத் தெரிவித் தது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மஹிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணய்க்கார ஆகியோர் இந்தக் கருத்தை வெளியிட்டனர்.

நாடாளுமன்றம் கலைவதற்கு இன்னும் கொஞ்சம் நாள்களே இருக்கின்றன. சிலவேளை, நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னர்கூட நாடாளுமன்றம் கலைக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்நிலையில், அரசமைப்புப் பேரவை விடயத்தில் இந்த அரசுக்கு ஏன் இவ்வளவு அவசரம்?

அமைச்சு என்பது நிறைவேற்றுத்துறையின் ஓர் அங்கம். எனவே, அமைச்சுப் பதவியை வகிப்பவர்கள் அரசமைப்புப் பேரவையில் இடம்பெறுவது சிக்கலுக்குரிய விடயமாகும். இவ்வாறான நியமனங்கள் இடம்பெற்றால் எப்படி சுயாதீனத் தன்மையை எதிர் பார்க்க முடியும்?

எனவே, பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னர் அமையவுள்ள, புதிய நாடாளுமன்றத்தின் ஊடாக மேற்படி நியமனம் இடம்பெற்றால் அது பொருத்தமானதாக இருக்கும். அதுவரையில் தற்போதுள்ள முறைப்படியே விடயங்கள் இடம்பெறட்டும்.

அரசமைப்புப் பேரவைக்கு நியமிப்பதற்குத் தன்னிடம் எம்.பிக்கள் இல்லை எனவும், அமைச்சர்களே இருக்கின்றனர் எனவும் பிரதமர் குறிப்பிடுகின்றார். அப்படியானால், ஒருவரிடமிருந்து அமைச்சுப் பதவியை பறித்து அதை மற்றவருக்கு வழங்கிவிட்டு, எம்.பியொருவரை அரசமைப்புப் பேரவைக்கு அனுப்புமாறு நாம் தெரிவித்துக் கொள்கின்றோம்”– என்றனர். (த–சி)

# தங்காலைப் பிரதேச சபையின் தலைவர் விடுதலை கோரி மனு

கொழும்பு, ஜூன் 4

பிரித்தானிய பிரஜையான குராம் ஷேக்கைக் கொலை செய்த குற்றத்துக்காகத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள தங்காலைப் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சம்பத் சந்திரபுஷ்ப விதான பத்திரன, தண்டனையை ரத்துச் செய்து தன்னை விடுவிக்குமாறு கோரித் தாக்கல் செய்துள்ள மனு விசாரணைக்கு எடுக்கப்பட உள்ளது.

இந்த மனுவை எதிர்வரும் 26ஆம் விசாரணைக்கு எடுக்கப்பது எனக் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்துள்ளது.

2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தங்காலையில் சுற்றுலா விடுதி ஒன்றில் தங்கியிருந்த பிரிட்டன் பிரஜையான குராம் ஷேக் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், அவரது காதலியான ரஷ்யப் பெண் கூட்டாகப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார்.

இந்தக் கொலை மற்றும் பாலியல் வன்புணர்வு சம்பவம் தொடர்பான விசாரணையில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட தங்காலை பிரதேச சபை முன்னாள் தலைவர் சம்பத் சந்திரபுஷ்ப விதான பத்திரன , லயிரு கெலும், சமன் தேசப்பிரிய, பிரதீத் சதுரங்க மற்றும் டப்ள்யூ. சதுரங்கே ஆகியோருக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் 20 ஆண்டு சிறைத் தண்டனை விதித்திருந்தது.

சம்பத் சந்திரபுஷ்ப விதான பத்திரன உட்பட 5 பேர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில சட்டமா அதிபர் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். (த)

# நாள்காட்டிகள் அச்சிடுவதற்கு 150 லட்சம் செலவிட்ட விமல்

கொழும்பு, ஜூன் 4

நாட்குறிப்பு மற்றும் நாள்காட்டிகளை அச்சிட நிர்மாணம், பொறியியல் சேவை, வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சினால், சுமார் ஒன்றரைக் கோடி ரூபா செலவிடப்பட்டமை குறித்து உடனயாக விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள் ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் நிஷாந்த பீரிஸ், கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவுக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அமைச்சின் கீழ் இருந்த 9 நிறுவனங்களுக்காக 2015 ஆம் ஆண்டுக்கான நாட்குறிப்பு மற்றும் நாள் காட்டிகளை அச்சிட இந்தப் பணம் பயன்படுத்தப்பட்டதா என்பதை அறிய விசாரணைகளை நடத்தி வருவதாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு வழங்கிய அறிப்பைக் கவனத்தில் கொண்டு நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ஓஷன் விவ் டெவலப் மெண்ட் தனியார் நிறு வனத்தின் தலைவர் பூர்ண சந்தன சில்வா செய்துள்ள முறைப்பாட்டுக்கு அமைய பணச் சலவைச் சட்டத்தின் கீழ் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விசாரணைகளின் முடிவுகளை எதிர்வரும் செப்டம்பர் 5 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு அறிய தருமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த அரசில் நிர்மாணம், பொறியியல் சேவை, வீடமைப்பு மற் றும் பொதுவசதிகள் அமைச்சராக விமல் வீரவன்ஸ பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## திருமுறை முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 4

அருள்மிகு மூத்த விநாயகர் தேவஸ்தானத்தின் இருபதாவது வருடாந்த திருமுறை முற்றோதலும் சமய குரவர் நால்வரின் விக்கிரகங்கள் ஸ்தாபித்தலும் திருஞான சம்பந்த சுவாமிகளின் குரு பூசை தினமாகிய இன்று ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (த)

## நீதிமன்றுக்கு

வாகனங்களின் கண்ணாடிகளும் கைதிகளை ஏற்றி வந்திருந்த சிறைச்சாலை வாகனத்தின் கண்ணாடிகளும்கூட அடித்து நொருக்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் நீதிமன்றத் தொகுதிக்கு 10 லட்சத்து 60 ஆயிரம் ரூபா சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தனர். இது தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அவர்கள் இந்த விவரத்தைத் தெரிவித்தனர். (உ–103)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் உடனடியாகத் தேவை. வயது (45 மேல்)
தொடர்பு: 077 5590495 (41168) (10.6.3)

**காணி விற்பனைக்கு**

இணுவில் தெற்கு, இணுவிலில் சுற்று மதில் கிணற்றுடன் கூடிய 3½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 695 9592
077 675 4977

**தேவை**

மானிப்பாயில் வசிக்கும் குடும்பத்திற்கு 7 மாதக்குழந்தையை பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர் தேவை.
தொடர்பு: 0772395720

**வாடகைக்குண்டு**

பிரதான வீதி, சங்கானையில் வீடு வாடகைக்கு உண்டு. (அரச ஊழியர் குடும்பம் விரும்பத்தக்கது)
தொடர்பு: 077 272 7068

**தவறிவிட்டது**

பூதன்வயல் முள்ளியவளையைச் சேர்ந்த சின்னட்டி கிருஷ்ணமூர்த்தி அ.அ.இல.502870173V கிருஷ்ணமூர்த்தி கமலாவதி அ.அ.இல.585891193 V ஆகிய அடையாள அட்டைகளும் சிறு தொகைப்பணமும், சில முக்கிய ஆவணங்களும் 23.05.2015 தண்ணீரூற்று செந்தமிழ்க்குமரன் பல்பொருள் வாணிபம் (ரூபன் கடை) முன் வீதியில் தொலைந்து விட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொ.பே.இல: 077 9586 585

**உழவு இயந்திரம் விற்பனைக்கு**

NPRB xxxx இலக்கமுடைய TAFE உழவு இயந்திரம், பெட்டி, கலப்பை விற்பனைக்கு உண்டு. 1500 மணித்தியாலயங்கள் மட்டும் ஓடியது.
தொடர்புகளுக்கு:
077 4390 792 (59116) (10.6.3)
தண்ணீர் ஊற்று, முள்ளியவளை.

**வீடு வாடகைக்கு**

கிளிநொச்சியில் தற்போது ஐ.நா.காரியாலயம் இயங்கி வருகின்ற, சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும். அரச, அரச சார்பற்ற நிறுவனங் கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
077 837 5832 (57117) (10.6.3)

**பாதுகாப்பு சேவை**

தனியார் வீட்டு நிர்வாக பாதுகாவலர், தனிநபர் பாதுகாவலர், கம்பனிகள், தனியார் விடுதிகள், திருமண மண்டபங்கள், Shopping Complex, ரெஸ்றோரண்ட், Hotel, School மற்றும் அனைத்து தேவைகளுக்கும் உடன் தொடர்பு கொண்டு எம்மிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர் இருபாலரும் தேவை

மற்றும் கிளினர், கேற்றிங் சேவிஸ், அனைத்து வெற்றிடங்களும் உண்டு. NIC, Photo, குடும்ப அட்டை போட்டோ பிரதி உடன் நேரில் வரவும். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
(இன்று காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை)

பரமேஸ்வரி றெஸ்ற் இன்
Room No.01
கைதடி றோட், மருதனார்மடம். (60429)(10.6.1)
T.P: 077 891 9367, 076 706 0095, 072 496 8333.

**உடனடி வேலைவாய்ப்பு**

- கனரக வாகன சாரதி (Heavy vehicle Driver)
- இலகுரக வாகன சாரதி (Light vehicle Driver)
- பார இயந்திர இயக்குநர் (JCB Operator)
- மோட்டார் கிரேடர் இயக்குநர் (Motor Grader Operator)

தகுதியானவர்கள் தமது விண்ணப்பம் மற்றும் தகுதி சான்றிதழ்களுடன் உடனடியாக நேரில் வரவும்.
மனிதவள முகாமையாளர்,
45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 222 6239



சேவை நலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்

திருநாவுக்கரசு நித்தியானந்தன்
(பாதுகாப்பு உத்தியோகத்தர்)

இலங்கை வங்கி யாழ்.அதிமேற்தரக் கிளையிலிருந்து 03.06.2015 அன்று 36 வருட சேவையை பூர்த்திசெய்து ஓய்வுபெற்று இன்று (04.06.2015) 60ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் தி.நித்தியானந்தன் அவர்களை பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

Best Wishes
சிரேஷ்ட முகாமையாளர் மற்றும் ஊழியர்கள்.
இலங்கை வங்கி அதிமேற்தரக் கிளை,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடாளுமன்றை

முன்வைத் துள்ளார்.
அரசமைப்பு சபைக்கான வெளியக உறுப்பினர்களின் நியமனத்தை உறுதிப்படுத்துவதற்காக நாடாளு மன்றத்தின் சிறப்பு அமர்வு நேற்றுக் காலை ஆரம்ப மானது.
சபை அமர்வு ஆரம்பமானதும், மஹிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப் பினர் தினேஷ்குணவர்த்தன, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக தொடர்ந் தும் மகேந்திரன் எப்படி இருக்க முடி யும் என்று கேள்வி எழுப்பி னார். சிங்கப்பூர் பிரஜையான அவர், மத் திய வங்கியின் ஆளுநராக பதவி வகிக்க முடியாது என்று குறிப்பிட்டார்.
இது தொடர்பில் பிரதமர் ரணில் விக் கிரமசிங்க பதில் வழங்கினார். கடந்த காலங்களில் அச்சுறுத் தல் காரண மாக நாட்டைவிட்டு வெளியேறிய வர்கள் இங்கு மீண்டும் வந்து பதவி களை வகிக்கலாம் என்று குறிப்பிட் டார். இதனை ஏற்றுக்கொள்ளாத எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சத்தமிட்டனர்.
இதன்போது ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல, நாம் எத்தகையை பதில்களை வழங் கினாலும், எதிர்க்கட்சியினர் திருப்திப் படப் போவதில்லை. எனவே நாடா ளுமன்றத்தை கலைக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். ஆளும் மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கள் பலர் அவரது கருத்தை ஆமோ தித்தனர்.
இதனையடுத்து கருத்துத் தெரிவித்த சபாநாயகர், இருதரப்பு உறுப்பினர் களும் விரும்புவதால் நாடாளுமன் றம் விரைவாக கலைக்கப்பட வேண் டும் என்று தாமும் விரும்புகிறார் எனப் பரிந்துரைத்தார்.
இந்த நிலையில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தைக் கலைக் குமாறு ஜனாதிபதிக்குப் பரிந்துரை செய்யும் கடிதம் ஒன்றை அனுப்பி வைக்கலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (உ–5)

## ரயில்

எச்சரிக்கை விளக்கு எரிந்தபோதும் சிறுவன் சைக்கிளில் வேகமாக அதைக் கடக்க முற்பட்ட வேளையில் யாழ்ப் பாணம் நோக்கி வந்து கொண்டி ருந்த ரயில் மோதியது என்று நேரில் கண்டவர்கள் தெரி வித்தனர்.
சம்பவத்தில் மிருசுவில் உசனைச் சேர்ந்த ஜெபநாமகணேசன் சது ஸன் காயமடைந்தான். கொடிகா மம் பிரதேச மருத்துவமனை அம் புலன்ஸ் மூலம் சாவகச்சேரி மருத்து வமனைக்கு கொண்டு வரப்பட்ட அவனுக்கு அவசர சிகிச்சை வழங் கப்பட்டது. பின்னர் மேலதிக சிகிச் சைக்காக யாழ். போதனா வைத்தி யசாலைக்கு மாற்றப்பட்டான். சம்ப வத்தை அடுத்து நிறுத்தப்பட்ட ரயில் சிறிது தாமதத்தின் பின்னர் யாழ்ப் பாணம் நோக்கிப் புறப்பட்டது. (உ–9)

## மேலும்

நேற்று உத்தரவிட்டது.
நீதிமன்ற தாக்குதல் தொடர்பில் 130 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அவர்களில் 47 பேர் சம்பவம் நடந்த 20ஆம் திகதியன்றே கைது செய்யப் பட்டிருந்தனர். மேலும் 43 பேர் மறுநாள் கைது செய்யப்பட்டிருந் தனர். கடந்த 22, 31ஆம் திகதிகளில் மேலும் இருவர் கைது செய்யப் பட் டனர். இவர்கள் அனைவரும் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தனர்.
45 பேருக்கும் எதிராக கொலை எத் தனிப்பு, சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியமை, சிறு காயங்களை ஏற் படுத்தியமை, கடுங்காயங்களை ஏற் படுத்தியமை, அத்துமீறி உட்பிரவே சித்தமை, போன்ற சட்டப்பிரிவுக ளின் கீழும், பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தியமை என்ற சட்டப்பிரி வின் கீழும் பொலிஸாரால் மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.
நீதிமன்ற கட்டட தொகுதியை தாக்கி யமை, கடமையில் இருந்த உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உட் பட 05 பொலிஸாருக்கு காயம் விளை வித்தமை மற்றும் கடமைக்கு இடை யூறு விளைவித்தமை போன்ற குற் றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டுள்ளன.
நேற்று இவ்வழக்குகள் மூன்றும் யாழ். நீதிவான் மன்றில் மாவட்ட நீதிபதியும் மேலதிக நீதிவானுமாகிய கஜநிதிபாலன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டன. பொலிஸாரின் பலத்த பாது காப்புடன் சந்தேகநபர்கள் அனுராத புரம் சிறைச்சாலை அதிகாரிகளால் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.
பொலிஸாருடன் இலங்கை சட்டத் தர ணிகள் சங்கத்தை சேர்ந்த சட்டத் தரணிகளும், யாழ்ப்பாண சட்டத் தரணிகள் சங்கத்தை சேர்ந்த சில சட்டத்தரணிகளும் இந்த வழக்கில் வாதாடினர். சந்தேகநபர்களுக்காக வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தை சேர்ந்த சட்டத்தரணிகளும், யாழ்ப் பாண சட்டத்தரணிகள் சங்கத்தை சேர்ந்த சில சட்டத்தரணிகளும் நீதி மன்றில் முற்பட்டிருந்தனர்.
சந்தேகநபர்களில் மாணவர்கள், அரச அலுவலர்கள் இந்தியக் குடி மகன் ஆகியோர் அடங்குகின்றனர் என்றும் அவர்களை பிணையில் விடு விக்குமாறும் சட்டத்தரணிகள் கோரி னர். அதற்கான ஆவணங்க ளையும் சமர்ப்பித்தனர்.
பதிலளித்த கொழும்பு குற்ற விசா ரணை பிரிவு பொலிஸார் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். விசாரணை கள் தொடர்ந்து நடைபெறு வதால் விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டனர். மாண வர்களைப் பொருத்தமான பிணை யில் விடுவிப்பதற்கு எதிர்ப்பு ஏது மில்லை என்றும் தெரிவித்தனர்.
இருதரப்பு வாதங்களையும் செவி மடுத்த மேலதிக நீதவான் 45 பேரின தும் விளக்கமறியலை எதிர்வரும் 12ஆம் திகதி வரை நீடித்தார். விசார ணைகளை துரிதப்படுத்தி சம்பவத் துடன் தொடர்பில்லாதவர்களை விடு விப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்குப் பணித்தார். பிணை கோரிய சந்தேகநபர்களின் விண்ணப் பங்கள் தொடர்பான கட்டளைகளுக் காக இவ்வழக்குகளை எதிர்வரும் 5, 8ஆம் திகதிகளில் அழைக்கு மாறும் கட்டளையிட்டார். (உ–103)

## பருத்தித்துறையில்

தலைமையில் ஒன்றுகூடிய பொது மக்கள் காந்திக்கு அஞ்சலி செலுத் திய பின்னர் சுலோக அட்டைகள், பதாகைகள் சகிதம் பேரணியாக நகர்ந்தனர்.
இலங்கை போக்குவரத்துச் சபை யின் மத்திய பஸ் நிலையம், தனி யார் பஸ் நிலையம் ஆகியவற்றின் ஊடாக துறைமுக வீதியை நோக்கி பேரணி நகர்ந்தது. நீதிமன்ற வளா கம், கோட்டுவாசல் அம்மன் கோவில் வரை பேரணி செல்லத்திட்டமிட்டி ருந்த போதிலும் பொலிஸார் அதற்கு அனுமதி மறுத்தனர். இதனால் துறை முக வீதியில் சென்றுகொண்டிருந்த அமைதிப் பேரணி நீதிமன்ற வீதிக் குத் திரும்பாமல் நேராகச் சென்று கொட்டடி ஸ்ரீ சித்தி விநாயகர் கோயி லடியில் நிறைவுற்றது.
அங்கு வைத்து நகர சபைத் தலை வரும் சட்டத்தரணியுமான சபா. ரவீந்திரன் பருத்தித்துறை மாவட்ட நீதிபதிக்கான மகஜரையும் அவற்றின் பிரதிகளை பொலிஸ்மா அதிபர், காங் கேசன்துறை மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு வழங்கு வதற்காக பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நுவான் பிருந்த நாராயண, காங்கேசன்துறை உதவிப்பொலிஸ் சுப்பிரிண்டன் ஏ.என். ஜவ்பர், காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோரி டம் கையளித்தார்.
பெண்களுக்கு எதிரான வன்முறையை இரும்புக்கரங்கள் கொண்டு தடுக்க வேண்டும், வித்தியாவைக் கொன் றோருக்கு உச்சபட்சத் தண்டனை வேண்டும், நீதி வேண்டும், வன் புணர்வுக் குற்றவாளிகளுக்குத் தண் டனை கொடு அல்லது தூரநில், புங் குடுதீவு வித்தியா; சக்கோட்டையில் மேரி டிலக்சா (2004); அல்வாயில் செந்தூரன்; இவர்கள் வாழத் தகுதி யற்றவர்களா?, மனித மிருகங்களை மண்ணில் வாழவிடுவதா?, நீதியை சாகடிப்பதா?, உயிரைக் கொல்லாதே, கற்பைப் பறிக்காதே, அ[illegible] வாழவிடு ஆகிய வாசகங்கள் கொண்ட சுலோக அட்டைகளையும், பதாகை களையும் பேரணியில் சென்றோர் தாங்கியிருந்தனர். பேரணி நகரின் ஊடாக நகர்ந்தபோது கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன.
பேரணியில் வடமாகாணசபை உறுப் பினர்கள் வே.சிவயோகன், ச.சுகிர் தன், தமிழரசுக்கட்சி பருத்தித்துறை தொகுதி இணைச் செயலாளர் ஜி.தங்கவேல், தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினர் இ.குமரகுருசாமி ஆகியோரும் பருத்தித்துறை நகர, பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.
"வடமராட்சிப் பிரதேசத்தில் சமூகச் சீரழிவுச் செயற்பாடுகளைக் கட்டுப் படுத்த குற்றவாளிகளுக்கு உரிய தண்டனைகளை வழங்கிச் சமூகத் துக்கு உத்தரவாதத்தை நிலை நாட்ட வேண்டும்'' என பேரணியின் இறுதி யில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதிக்கு வழங்கப்பட்ட மனுவில் கோரப் பட்டுள்ளது.
"நாட்டில் தற்போது சமூகச் சீரழிவுச் செயற்பாடுகள் அதிகரித்து வரும் நிலையில், வடமராட்சிப் பகுதியிலும் கணிசமாக இவை காணப்படுகின் றன. குறிப்பாக போதைப்பொருள் பாவனை, மிதமிஞ்சிய மதுபோதை, தொலைக்காட்சி, கையடக்கத்தொலை பேசி மூலமான கட்டுப்பாடற்ற உரை யாடல்கள், வெளிநாட்டுப்பணம், அடாவடித்தனம், இடம்பெயர்வு, வேலைவாய்ப்பின்மை போன்றவை காரணமாக சமூகச் சீரழிவுகள் வளர்ந்து கொண்டே போகின்றது. மாவட்ட நீதிபதியாகிய தாங்கள் பொலிஸாருக்கு உரிய பணிப்புக்களை விடுத்து சகல குற்றச் செயல்களை யும், கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும், குற்றவாளிகளுக்கு உரிய தண்டனைகளை வழங்கி சமூகத்தின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த வும் வேண்டும்'' என்று அந்த மனு வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (உ–173)

## யாழ். நீதிமன்றைச்

தொடர்பான சந்தேகநபர்கள் வழக்கு விசாரணைக்காக நீதிமன்றில் முற் படுத்தப்பட்டு வருவதால் பாதுகாப்பு ஏற்பாடுகள் விலக்கிக் கொள்ளப் படாமல் தொடர்வதாகப் பொலி ஸார் கூறினர்.
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம், யாழ். சிறைச்சாலை ஆகியன அமைந் துள்ள இடங்களிலும் தீவிர பாது காப்பு ஏற்பாடுகள் தொடர்கின்றன.
நீதிமன்றம் முன்பாக கடந்த வாரம் நிறுத்தப்பட்ட தண்ணீர் பீச்சி அடிக் கும் வாகனம் இன்னும் அங்கேயே நிலை கொண்டுள்ளது. நீதிமன்றத் துக்கு முன்பாகச் செல்லும் வீதி, மத் திய கல்லூரிச் சந்தியிலும் பிரதான வீதிச் சந்தியிலும் மறிக்கப்பட்டுப் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள் ளது. நீதிமன்ற வழக்குகளுக்குச் செல் பவர்கள் மாத்திரம் உள்ளே அனு மதிக்கப்படுகின்றனர். கண்ணீர் புகைக் குண்டு சுடும் துப்பாக்கிகளுடன் அந்த நிலைகளில் பொலிஸார் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனர். பவள் கவச வாகனமும் நிறுத்தப்பட் டுள்ளது.
நீதிமன்றத் தாக்குதல் தொடர்பான சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 130 பேரில் மிகுதி பேர் இன்று நீதி மன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.
அந்தப் பகுதிகள் மாத்திரமன்றி யாழ். போதனா வைத்தியசாலை வீதி, யாழ். பஸ் நிலையம், யாழ். மாவட்டச் செயலகம் ஆகிய பகுதிகளிலும் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் நீடிக் கப்பட்டுள்ளன. (உ–4)

## புதிய

மலையக மக்கள் முன்னணி ஆகிய மூன்று கட்சிகளையும் உள்ளடக்கி, தமிழ்க் கட்சிகளின் இந்தப் புதிய கூட் டணி அமைக்கப்பட்டுள்ளது.
கொழும்பு, நுவரெலியா, கண்டி, மாத்தளை, கம்பஹா, களுத்துறை, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, புத் தளம் ஆகிய மாவட்டங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களை ஒருங்கிணைத்து அரசியல் ரீதியாக பிரதிநிதித்துவம் செய் [illegible] இலங்கையிலே 31 லட்சத்து 13 ஆயி ரத்து 247 தமிழர்கள் வாழ்கி றார்கள். இதில் வடக்கு – கிழக்கில் 16 லட்சத்து 11 ஆயிரத்து 36 பேர் வாழ்கின்றனர். வடக்கு – கிழக்குக்கு வெளியில் 15 லட்சத்து 2 ஆயிரத்து 211 தமிழர்கள் வாழ்கிறார்கள்.
வடக்கு, கிழக்குக்கு வெளியில் வாழும் இந்த 15 லட்சம் தமிழர் களையே தேசிய ரீதியாகவும், சர்வ தேச ரீதியாகவும் தமிழ் முற்போக்கு கூட்டணி பிரதிநிதித்துவம் செய்யும் என்று தெரிவிக்கப்படுகிறது.
"வடக்கு – கிழக்கு மாகாணங்களில் வாழும் எமது சகோதர தமிழ் உடன் பிறப்புகளை அரசியல் ரீதியாக பிரதி நிதித்துவம் செய்யும் தலைமை அர சியல் அமைப்பாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்றது. இந்த மாகாணங்களில் குறிப்பாக கிளி நொச்சி மற்றும் வன்னி மாவட்டங் களில் வாழும் மலையகத்தைப் பூர் வீகமாகக் கொண்ட பெரும் எண் ணிக்கையிலான மக்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பிரதிநிதித்து வம் செய்கின்றது. எனவே நமது இரண்டு கூட்டு அமைப்புகளுக்கும் இடையில், பிரிபடாத இலங்கைக் குள் தமிழ் மக்களின் அபிலாஷை களை அடைவது என்ற இலக்கு தொடர்பில் ஒரு புரிந்துணர்வு இயல் பாகவே ஏற் படும்'' என்று நிகழ்வில் கருத்துத் தெரி வித்த தலைவர்கள் கூறினர். (உ–5)

## ராணுவத்தினரை

வெளியிட்டிருந்தார். அதற்குப் பதில ளிக்கும் வகை யிலேயே நிமல் சிறி பால டி சில்வா இவ்வாறு தெரிவித் துள்ளார். அவர் மேலும் தெரிவித் ததாவது:

**புலிகள் இன்னும் உயிர்ப்புடன்**

விடுதலைப் புலிகளை முழுமையாக அழித்து விட்டதாக குறிப்பிட்டாலும் இலங்கையில் மட்டுமே அந்த இயக் கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உலகின் பல நாடுகளில் புலிப் பயங்கரவாதம் இன்னமும் பலமாகவே செயற்படு கின்றது. புலிகளின் சர்வதேச வலைய மைப்பு மீண்டும் இலங்கையை தாக் கக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உண்டு.
வடக்கில் அட்டூழியங்கள் அதிகரித் துள்ளதுடன் அச்சுறுத்தல்களும் ஏற் பட்டுள்ளன. அதேபோல் புலம்பெயர் அமைப்புகள் மற்றும் புலிகள் இயக் கத்தின் தலையீடுகளால் மீண்டும் வடக்கு ஆக்கிரமிக்கப்படும் சூழலும் ஏற்பட்டுள்ளது. எனவே மீண்டும் வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் முக்கிய பகுதிகளில் இராணுவப் பாது காப்பைப் பலப்படுத்தவேண்டிய தேவை உள்ளது.

**மக்களைத் தூண்டுகிறார்கள்**

வடமாகாண முதலமைச்சர் மீண் டும் இனவாதச் செயற்பாடுகளை ஆரம் பித்து விட்டார். தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத்தை நினைவு கூர்ந்து வடக்கில் புலிகள் தினத்தை வடமாகாண முதலமைச்சர் தலை மையில் கடைப்பிடிக்கிறார்கள்.
வடக்கில் சட்டத்துக்கு முரணான வகையில் நீதிமன்ற தடைகளை மீறி ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் நடத் தப்பட்டுள்ளன. நீதிமன்றம், பொலிஸ் நிலையம் என்பனவும் தாக்கப்பட் டுள்ளன. மக்களைத் தூண் டிவிடும் செயற்பாடுகள் மீண்டும் வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிலை யில் வடக்கில் உள்ள இராணுவத்தை அரசு வெளியேற்றக்கூடாது.
வடக்கில் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டு அனைத்து பகுதிகளும் மக்களுக்கு வழங்கப்படுகின்றன. மக்களின் காணிகளை அந்த மக்க ளுக்கு வழங்க வேண்டும். அதில் எந்த மாற்றுக் கருத்துகளுக்கும் இட மில்லை. ஆனால் அரசு கடந்த காலங்களில் வடக்கில் இருந்து அதி களவான இராணுவத்தை வெளி யேற்றியுள்ளது. எனினும் வடக்கில் உள்ள ஒட்டுமொத்த இராணுவத்தை யும் வெளியேற்றும் முயற்சியை வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ் வரன் மேற்கொண்டு வருகின்றார். வடக்கில் உள்ள இராணுவத்தை வெளியேற்றுவது தொடர்பில் தீர் மானம் எடுக்கும் பொறுப்பு அர சையே சார்ந்தது.

**இராணுவம் இருக்க வேண்டும்**

ஜனாதிபதியின் அதிகாரங்களை மாகாண முதலமைச்சர் எடுத்துக்கொள்ளும் நிலைமையே இன்று ஏற்பட்டுள்ளது. இராணுவத்தை வெளியேற்றக்கூற விக்னேஸ்வரன் ஜனாதிபதி அல்லர் என்பதை அவர் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். வட மாகாணத் துக்கு இன்று அரசு அடி பணிந்துள் ளது. வடக்கில் மட்டுமே இவர்களின் சேவைகள் மற்றும் அரசியல் நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். வடக்கில் இருந்து ஒருபோதும் இராணுவத்தை வெளி யேற்றக்கூடாது.
வடக்கில் மக்களின் பாதுகாப்பு இரா ணுவத்தின் கைகளில் மட்டுமே உள் ளது. அதைச் சீரழிக்கக்கூடாது. தொடர்ந்தும் வடக்கில் இராணுவம் பலப்படுத்தவேண்டும் என்பதை நாம் அரசுக்கு தெரிவிக்க விரும் புகின்றோம். எமது அரசை மீண்டும் உருவாக்கும் முயற்சிகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம். எமது ஆட்சியில் நாட்டின் பாதுகாப்புக்கே முக்கியத்துவம் வழங்கினோம். ஆனால் இன்று நிலைமை மாறியுள் ளது – என்றார். (உ–5)

## வாள்வெட்டில்

பொருத்தும் பணியில் மருத்துவர் கள் ஈடுபட்டுள்ளனர்.
ஊர்காவற்றுறையில் நேற்றுப் பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த கெனடி (வயது – 19) இளைஞனின் கையே துண் டிக்கப்பட்டது. துண்டான கையுடன் அவர் அங்குள்ள வைத் தியசா லைக்குச் சென்றார். அங்கி ருந்து அம்புலன்ஸ் மூலமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.
ஒரு பெட்டியினுள் எடுத்து வரப் பட்ட அவரது கையை பொருத்தும் முயற்சியில் நேற்றிரவு மருத்து வர்கள் ஈடுபட்டனர்.
வீதியில் வாள்களுடன் நின்றிருந்த சிலரே அவர் மீது வாள்வெட்டு நடத் தினர் என்று தெரிவிக்கப் பட்டது. (உ–4)

## 3 வெளி

செய்யாமலேயே ஒத்திவைக்கப்பட்டது.
அரசமைப்புச் சபைக்கு முன்மொழி யப்பட்டுள்ள 3 வெளியக உறுப்பி னர்களினதும் சம்மதக் கடிதத்தைப் பெற்ற பின்னர், அவர்களின் நியம னம் தொடர்பாக நாடாளுமன்றத் தின் அங்கீகாரத்தைக் கோருவது என்று கட்சித் தலைவர்கள் கூட்டத் தில் தீர்மானிக்கப்பட்டது. இதனைய டுத்து, நாடாளுமன்றத்தை எதிர்வரும் 9ஆம் திகதி வரையில், சபாநாயகர் சமல் ராஜபக்ஷ ஒத்தி வைத்தார்.
10 பேர் கொண்ட அரசமைப்புச் சபைக்கு 7 பேர் நாடாளுமன்றத்தினால் நியமிக் கப்படுவர். 3 பேர் வெளியிலிருந்து நியமிக்கப்படுவர். இந்த வெளியக உறுப்பினர்களினதும் நியமனத்துக் கான அங்கீகாரத்தைப் பெறுவதற் காக நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வு நேற்றுக் காலை கூட்டப்பட்டது.
ஆரம்பத்தில் நாடாளுமன்றத்தை கலைப்பது தொடர்பான வாதங்கள் இடம்பெற்றன. இதனையடுத்து, எதிர்க் கட்சி உறுப்பினர் தினேஷ் குணவர்த் தன, நாடாளுமன்ற ஒழுங்குப் பத்தி ரத்தில் கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெறும் என்று குறிப்பிடப்பட் டுள்ளது, முதலில் கட்சித் தலைவர் கள் கூட்டம் இடம்பெறவேண்டும் என்று தெரிவித்தார்.
இதையடுத்து சபையில் கூச்சல் குழப் பம் ஏற்பட்டது. இதனால் சபை ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர் கட்சித் தலை வர்கள் கூட்டம் இடம்பெற்றது. இதன் போது, அரசமைப்புச் சபைக்கு வெளி யக உறுப்பினர்கள் மூன்று பேரினதும் பெயர்கள் நாடாளுமன்றத்தின் அங்கீ காரத்துக்குப் பிரேரிக்கப்படுவதற்கு முன்னதாக, குறித்த உறுப்பினர்களி னது சம்மதக் கடிதத்தினைப் பெறுவது என்று முடிவெடுக்கப்பட்டது. அதன் பின்னர் நாடாளுமன்றத்தின் அங்கீ காரத் தைக் கோருவது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.
இதன் பின்னர், சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தை எதிர் வரும் 9ஆம் திகதிக்கு ஒத்தி வைத் தார். (உ–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெங்குக் காய்ச்சல் அதிகரிக்கும் அபாயம்

கொழும்பு, ஜூன் 4

பருவ மழை ஆரம்பித்துள்ளதால் டெங்குக் காய்ச்சல் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவுகள் எச்சரித்துள்ளன.

இதனால் எதிர்வரும் 04, 05, 06 ஆம் திகதிகளில் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி ருவன் விஜேய முனி தெரிவித்தார்.

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் ஜூன், ஜூலை மாதங்களில் டெங்கு தொற்று அதிகம் ஏற்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மட்டக்குளி, கிருலப்பனை, பாமன்கடை, வெள்ளவத்தை ஆகிய பகுதிகளில் டெங்கு பரவும் அபாயம் அதிகம் உள்ளதாகவும், அந்தப் பகுதிகளில் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் டாக்டர் ருவன் விஜேமுனி குறிப்பிட்டார்.

இதேவேளை, டெங்கு நுளம்புகள் பெருகுவதைத் தடுப்பதற்கு, சூழலை சுத்தமாக வைத்திருப்பது முக்கியமானது என கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (த)

## வறண்ட வலயத்தில் மழை குறைவடையும்

கொழும்பு, ஜூன் 4

வறண்ட வலயத்தில் மழை வீழ்ச்சி குறைவடையும் ஆபத்து இருப்பதாக விவசாய அமைச்சு முன்னறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

தென்மேற்குப் பருவப் பெயர்ச்சி மழை 20 நாள்கள் தாமதமடைந்துள்ளதாக இந்த அமைச்சின் காலநிலை விஞ்ஞானியான கலாநிதி ரஞ்சித் புண்ணியவர்த்தன தெரிவித்துள்ளார்.

மே மாதத்தில் தென்மேற்குப் பருவப் பெயர்ச்சி மழை கிடைக்க வேண்டியது என்றாலும் ஜூன், ஜூலை மாதங்களில் வறண்ட வலயத்துக்குத் தென்மேற்குப் பருவப் பெயர்ச்சி மழை வீழ்ச்சி குறைவாகவே காணப்படுகின்றது.

ஜூன், ஜூலை மாதங்களில் வறண்ட வலயத்தில் மழை தாமதமடைதல் அல்லது குறைவடைதல் தாக்கமொன்றை ஏற்படுத்தக் கூடுமெனவும்; மீளவும் வழமையான மழை வீழ்ச்சி செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னரே கிடைக்குமென்பதால் சேமிப்பில் உள்ள நீரை முகாமைத்துவப்படுத்திக் கொள்வதற்கு கவனம் செலுத்த வேண்டியுள்ளது எனவும் அவர் கூறினார். (த-22)

# அமெரிக்காவில் சொத்து குவித்த இலங்கையின் அரசியல்வாதி

### குற்றப் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்தது தகவல்

நியூயோர்க், ஜூன் 4

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் அங்கம் வகித்த பிரபல அமைச்சர் ஒருவர், அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ், ஆர்லிங்டன், வேர்ஜனியா மற்றும் வொஷிங்டன் ஆகிய பிராந்தியங்களில் வீடுகள் மற்றும் காணிகளைக் கொள்வனவு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த வாரம் இலங்கைக்கு பயணம் செய்த அமெரிக்க விசாரணை அதிகாரிகள்,குற்றப்புலனாய்வுபிரிவுக்குஇது குறித்துத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இலங்கை குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் வேறு விசேட பிரிவினரால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைக்கு ஆதரவு வழங்குவதற்காகவே அமெரிக்க விசாரணைப் பிரிவினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

சமீபத்தில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட அமெரிக்க இராஜாங்கச்செயலாளர் ஜோன்கெரி இலங்கை அதிகாரிகளிடம் குறித்த விசாரணை தொடர்பில் தனது இணக்கப்பாட்டினை வெளிபடுத்தியிருந்தார்.

குறித்த அமைச்சர் அமெரிக்க விளம்பரப்படுத்தல் நிறுவனம் ஒன்றுடன் இணைந்து இலங்கையின் சுயரூபத்தை வெளிக்காட்டும் வேலைத் திட்டங்களில் ஈடுபட்டுள்ளதாகவும், அதற்காகப் பல மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவிட்டுள்ளதாகவும், அதன்போதே அவர் இந்த சொத்துக்களைக் கொள்வனவு செய்துள்ளதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.

இவ்வாறு குறித்த அமைச்சரினால் இலங்கையின் சுயரூபத்தை வெளிகாட்டுவதற்கும் அமெரிக்க சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கும் பணம் எவ்வாறு கிடைத்தது என்பது தொடர்பில் விசேட விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் இந்த அமைச்சரின் மனைவியின் பெயரில் உள்ள அறக்கட்டளை நிறுவனத்துக்கு அதிகளவான பணம் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றினால் எவ்வாறு வைப்பு செய்யப்பட்டுள்ளது என்பது தொடர்பிலும் விசாரணைநடவடிக்கைகள்ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் முன்னாள் தூதரக அதிகாரியினால் இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்ட வியாபாரங்களில் ஈடுபட்டுப் பெரிய அளவில் பணம் சம்பாதிக்கப்பட்டமை தொடர்பில் அமெரிக்க விசாரணை அதிகாரிகள் இலங்கைக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் 08 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் பின்னர் குறித்த தூதரக அதிகாரி உட்பட அவருக்கு நெருக்கமானவர்கள் தொடர்பில் தடயங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாமற்போனதுடன் குறித்த தூதரக அதிகாரியின் சகோதரர் தலைவராகச் செயற்பட்ட பத்திரிகை நிறுவனத்துக்கு அரச பணம் பெற்றுக்கொடுக்கப்பட்டமை தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (த)

## இலங்கைத் தமிழருக்கு இந்தியா உதவவேண்டும்

லண்டன், ஜூன் 4

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண இந்தியாவின் உதவி அவசியம் என பிரிட்டன் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

பல்வேறு வழிகளின் மூலம் வடக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என தெரிவித்துள்ளது.

பிரிட்டன் தமிழர் பேரவை பிரதிநிதிகள் அண்மையில், பிரிட்டனுக்கான இந்திய தூதுவரைச் சந்தித்தபோது இந்த விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

போர் காரணமாக உளவியல் பாதிப்புக்களினால் அவதியுறும் மக்களுக்கு கூடுதல் உதவிகள் வழங்கப்படவேண்டுமென வலியுறுத்தப் பட்டுள்ளது.

## பொலிஸாருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தார் மாகாண சபை உறுப்பினர்

### நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்வு

கொழும்பு, ஜூன் 4

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமரானால் நிதிமோசடி விசாரணைப் பிரிவுப் பொலிஸார் கல்லெறிந்து கொலை செய்யப்படுவார்கள்" – எனத் தென்மாகாண சபை உறுப்பினர் டி.பி. உபுல் தெரிவித்துள்ள கருத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது பற்றி பொலிஸார் கவனம் செலுத்தியுள்ளனர்.

தென் மாகாண சபை உறுப் பினர் டி.பி.உபுல் தெரிவித்த கருத் தானது பாரதூரமான ஒன்றாகும் எனத் தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர், இதற்கு எதிராக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை தொடர்பில் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்காக காத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

பஸில் ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் நிதி மோசடிப் பிரிவால் விசாரிக்கப்பட்ட நிலையில், பஸில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதியின் பாரியாரும் நிதி மோசடி பிரிவால் விசாரிக்கப்பட்டிருந்தார். அதுதவிர, விரைவில் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அவரது குடும்ப அங்கத்தவர்கள் சிலரிடம் விசாரணைகள் மேற் கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அண்மையில் நாமல் ராஜபக்ஷவின் பங்குபற்றலுடன் திஸ்ஸமஹாராமயில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட தென் மாகாண சபை உறுப்பினர் டி.பி.உபுல், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்திருந்ததுடன், மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் பிரதமரானவுடன் பொலிஸ் விசாரணைப் பிரிவிலுள்ள சாதாரண உத்தியோகத்தர் முதல் சகலரையும் கல்லெறிந்து கொலை செய்யும் தருணத்துக்காகக் காத்திருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

மாகாண சபை உறுப்பினர் டி.பி. உபுல் தெரிவித்துள்ள கருத்தானது பாரதூரமானது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளதுடன், பொலிஸார் தங்களது கடமையையே செய்கிறார்கள். இது பொலிஸாருக்கு எதிராக விடுவிக்கப்பட்டுள்ள ஓர் எச்சரிக்கையாகும். அரசியல்வாதியாக மக்களிடம் பேசும்போது புத்திசாலித்தனமாகக் கருத்துத் தெரிவிக்கவேண்டும். இது தொடர்பில் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையை எதிர்பார்த்துள்ளேன் –என்றார். (த-சி)

## பண்டாரநாயக்கவைப் போன்று மைத்திரியைக் கொல்ல முயற்சி?

கொழும்பு, ஜூன் 4

முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யு. ஆர்.டி பண்டாரநாயக்கவைப் போன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்வார்களோ என அஞ்சுவதாக அமைச்சர் விஜித் விஜயமுனி டி சொய்ஸா தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டில் உழைக்கம் வர்க்கத்தில் தலைவர்கள் உருவாகவில்லை. தற்போதைக்கு அவ்வாறு உருவான தலைவர்களில் ஒருவர் பிரேமதாசவேயாகும். அவரைக் கொலை செய்து விட்டார்கள்.

எமது கட்சியில் உருவான தலைவர்கள் செல்வந்தர்கள், பெரும் பணக்காரர்கள். எனினும் இன்று எமது கட்சியிலும் உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த ஓர் தலைவர் உருவாகியுள்ளார்.

நான் கால்களை நேராக வைத்துக் கொண்டு மஹிந்த, சந்திரிக்கா மற்றம் சிறிமாவோ ஆகியோருக்கு கடமைகளைச் செய்திருக்கின்றேன். தற்போது மைத்திரிபால சிறி சேனவுக்கும் கடமைகளைச் செய்வேன். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்–என்றார் (த)

## சாதாரண கடையில் பாதணி வாங்கிய ஜனாதிபதி மைத்திரி



கொழும்பு, ஜூன் 4

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்குத் தேவையான பாதணிகளைக் கொள்வனவு செய்வதற்காகக் கொழும்பிலுள்ள பாதணிக் கடையொன்றுக்குச் சென்றிருந்தார்.

அவர், குறித்த கடையில் வாடிக்கையாளர்களுக்காகப் போடப்பட்டிருந்த பெஞ்சில் அமர்ந்திருந்து தனது பாதணிகளைத் தெரிவு செய்திருந்தார். எவ்வித பாதுகாப்பும் இ[illegible]க் கடைக்கு வந்த ஜனாதிபதிக்கு [illegible] கில் பாதணிக் கடையின் [illegible] யாளர்கள் பாதணிகளை [illegible] தனர். பாதணி கடைக்கு ஜனா[illegible] சென்றபோது வீதிகளும் [illegible] படவில்லை. அத்துடன் அ[illegible] பாதுகாப்பு வலயமாகப் பிர[illegible] படுத்தப்படவும் இல்லை எ[illegible] குறிப்பிடக்கக்கது. (த)

## பௌத்த தர்மத்தை காக்கவே அரசியலுக்குள் வந்தோம்

### கூறுகிறது பொதுபல சேனா

கொழும்பு, ஜூன் 4

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொது பல சேனா அமைப்பின் பிரதிநிதித்துவம் குறைந்தபட்சம் 3 வேட்பாளர்கள் அல்லது நாடாளுமன்றத்துக்குள் பிரவேசிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதே அமைப்பின் நோக்கம் என அதன் பொது செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

பௌத்த மதத்தின் கறுப்புப் பக்கம் எனும் தொனிப்பொருளில் ஊடகமொன்றில் இடம்பெற்ற நிகழ்ச்சி தொடர்பில் கருத்து தெரிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆட்சியில் இருக்கும் சிங்கள பௌத்த தலைவர்கள், சிங்கள பௌத்தர்களின் பிரச்சினைகளுக்கு செவிகொடுக்காத நிலைமை தற்போது காணப்படுகின்றது. தமிழர்களுக்காக தமிழ் இனத்தவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும், முஸ்லிம்களுக்காக முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் நாடாளுமன்றத்தில் ஒரு சிலர் இருக்கின்றனர்.

ஆனால் சிங்கள பௌத்தர்களின் பிரச்சினைகளுக்காக வாதிடுவதற்கு எந்த தலைவர்களும் முன்வருவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னொரு காலத்தில் வெள்ளைக்காரர்கள் ஆயுதங்களைக் கொண்டு செய்த கெடுதல்கள் தற்போது ஊடகவியலாளர்களை ஆயுதமாகக் கொண்டு செய்யப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பௌத்த மதத்தில் எந்தவொரு கறுப்பு பக்கமும் இல்லை எனவும் தேரர் குறிப்பிட்டார்.

இன்று நாட்டில் உயர்ந்த அறிவு படைத்தவர்கள் விரைவில் பௌத்த தர்மத்தை தழுவிக்கொள்ளும் சூழ்நிலையில் அதை ஜீரணிக்க முடியாத தீவிரவாதிகள் பௌத்த தர்மம் வேரூன்றியுள்ள நாடுகள் மீது பல்வேறு வகையில் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர் என ஞானசார தேரர் குற்றம் சுமத்தினார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணச் சம்பியனாகியது சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி




மாங்குளம் ஜூன் 4
வடமாகாண பாடசாலைகளிற்கிடையிலான பெண்களிற்கான துடுப்பாட்டத்தொடரின் இறுதியாட்டத்தில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியை இலகுவாக வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது சுழிபுரம் விக்டோரியா கல்லூரி.

நேற்று புதன்கிழமை ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணியினர் களத்தடுப்பைத் தீர்மானித்தனர். இதனால் முதலில் துடுப்பெடுத்தாடிய விக்டோரியா கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் இரு இலக்குகளை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றது, அதிகபட்சமாக சோபிகா ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும், தனுசா 14 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணி சார்பில் அபிசாளினி ஒரு இலக்கைக் கைப்பற்றினார்.

6பந்துப்பரிமாற்றங்களில் 61 ஓட்டங்களைப் பெறவேண்டிய இமாலய இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடியது வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணி. நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் இரு இலக்குகளை இழந்து 46 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகப்ட்சமாக அர்ச்சனா ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும், அபிசாளினி 8 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் விக்டோரியா கல்லூரி அணி சார்பாக நிதுசாளினி, டிலானி ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர்.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து தட்சணா மருதமடு அ.த.க. பாடசாலை அணி மோதியது, இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்து பரிமாற்றங்களில் இரு இலக்குகளை இழந்து 49 ஓட்டங் களைப் பெற்றது. அதிகபட்சமாக யுவதர்சினி 17 ஓட்டங்களையும் மதுசா 13 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தட் சணா மருத மடு அ.த.க. பாடசாலை அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்று 7 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக லோஜினி 10 ஓட்டங்களையும், பிரியங்கா 6 ஓட்டங் களையும் பெற்றுக் கொடுத்தனர்.




(ரி-422)

## இன்றைய மோதல்கள்

*புனித தோமையார் வி.க.தொடர்*
யாழ்ப்பாணம், ஜூன் 4
மாதகல் புனித தோமையார் ஆலயத்தின் பெரு விழாவையும் புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடந்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மேற்படி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 3.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
(ரி-23)

*கொலின்ஸ் வி.க. தொடர்*
வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடந்தும் 11பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று வியாழக்கிழமை கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்படி இன்று மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடற்கல்வி ஐக்கியம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட் டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வேலணை ஐயனார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-108)

# கன்றா பாலர்பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று

வவுனியா வேப்பங்குளம் கன்றா பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இன்று 2மணிக்கு பாடசாலை மைதானத்தில் குறித்த பாலர் பாடசாலையின் இயக்குனரான அருட்சகோதரி கத்தறீன் செபஸ்ரியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கலந்துகொள்கிறார். நிகழ்வு சுடர் ஒளி – ஒளி அரசியின் அனுசரணையுடன் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (ரி)



பண்டாரிகுளம் வானவில் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட சங்கக்கார வெற்றிக்கிண்ண துடுப்பாட்டத் தொடரில் வடதாரகை விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ரி-402)

## புனித தோமையார் வி.க.முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 4
மாதகல் புனித தோமையார் ஆலயத்தின் பெரு விழாவையும் புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11 ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதை பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மேற்படி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து அராலி பாரதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் அராலி பாரதி விளையாட்டுக்கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அராலி திருமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து உடுப்பிட்டி உடற்கல்வி ஐக்கிய அணி மோதிக்கொண்டது. இதில் தெல்லிப்பழை நாமகள் 'பி' அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி-23)

# சென்.அன்ரனிஸை போராடி வீழ்த்தியது சென்.ஜோன்ஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 4
இலங்கை பாடசாலை துடுப்பாட்ட சங்கத்தினால் நடத்தப்படும் 17 வயதுப் பிரிவினருக்கான பிரிவு ஒன்றுக்கான துடுப்பாட்டத் தெடரின் ஆட்டமொன்றில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி ஒரு இலக்கினால் கண்டி சென்.அன்ரனிஸ் கல்லூரி அணியை வெற்றிபெற்றது.

கடந்தவாரம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ்கல்லூரி அணியை எதிர்த்து கண்டி சென்.அன்ரனிஸ் கல்லூரி அணி மோதிக்கொண்டது. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானிக்க முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி சென்.அன்ரனிஸ் கல்லூரி அணி 46.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜெனித்தன் 27 ஓட்டங்களையும், ஜெயசவத் 21 ஓட்டங்களையும், சமுத் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் கபில்ராஜ், 3 இலக்குகளையும், சரண் லியோனி 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

176 ஓட்டங்களைப்பெற்றால்வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 49 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழத்து 178 ஓட்டங்களைப் பெற்று ஒரு இலக்கால் வெற்றிபெற்றது. அதிகபட்சமாக ஜெனிங்பிளமிங் 54 ஓட்டங்களையும், சுவிஸ்சன் 30 ஓட்டங்களையும், கபில்ராஜ் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கண்டி சென்.அன்ரனிஸ் கல்லூரி அணி சார்பில் அல்வி 3இலக்குகளையும், யசிந்து, விக்கிரா ஆகியோர் தலா 2 இலக்குகளையும் அதிகபட்சமாகக் கைப்பற்றினர். (ரி-23)

# கைமாறியது கிண்ணம் சம்பியனானது தெல்லிப்பழை

வலி. வடக்கு, ஜூன் 4
கடந்த பதினெட்டு வருடங்களாக பிரதேச செயலகங்களுக்கு இடையேயான ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் தனக்கென தனி இடத்தை பிடித்துவந்த கோப்பாய் பிரதேச செயலகத்தின் கைகளில் இருந்த சம்பியன் கிண்ணத்தை நடப்பு வருடத்தில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி கைப்பற்றிக்கொண்டது.

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் மாகாண மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட் கிழமை நடைபெற்றது.



ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் கோப்பாய் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன. ஐந்து செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் முதலாம் மூன்றாம் ஐந்தாம் செற்களை தெல்லிப்பழை பிரதேச செயலக அணி முறையே 27:25 25:19 22:20 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ரி-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழிதீர்த்தது நியூஸிலாந்து





இங்கிலாந்து எதிர் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்டில் நியூஸிலாந்து அணி 199 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து நியூஸிலாந்தை துடுப் பெடுத்தாடுமாறு பணிக்க முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து முதல் இன்னிங்ஸிற்காக 350 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக புரோட் 5 இலக்குகளையும் அண்டர்சன், வூட் தலா 2 இலக்குகளையும் ஸ்ரோக்ஸ் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

முன்னிலை பெறவேண்டும் என்ற முனைப்பில் முதல் இன்னிங்ஸிக்காக களமிறங்கிய இங்கிலாந்தும் 350 ஓட்டங்களையே பெற்றது.

பந்துவீச்சில் நியூஸிலாந்து சார்பாக சௌத்தி 4 இலக்குகளையும் போல்ட், கிறைக் தலா 2 இலக்குகளையும் ஹென்றி ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய நியூஸிலாந்து 454-8 என்ற நிலையில் இருந்தபொழுது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தார் தலைவர் மக்கலம்.

455 ஓட்டங்களை வெற்றியிலக் காகக்கொண்டு களமிறங்கிய இங்கிலாந்து இலக்குகள் இழப்பிலாமல் 44 ஓட்டங்களைப் பெற்ற போது மழை தொடர்ந்து குறுக்கிட ஆட்டத்தின் நான்காம் நாள் நிறைவடைந்தது. ஆட்டத்தின் ஐந்தாம் நாளில் இன்னும் 411 ஓட்டங்கள் (90 பந்துப்பரிமாற் றங்களில்) பெற்றால் இங்கிலாந்து வெற்றி பெறும் இங்கிலாந்தின் சகல இலக்குகளையும் சரித்து முடித்தால் நியூஸிலாந்து வெற்றிபெறும் என்ற நிலைமையில் லைத் 24 ஓட்டங்களுடனும் குக் 18 ஓட்டங்களுடனும் ஐந்தாவது நாளுக்காக களமிறங்கினார்கள். அதே 24 ஓட்டங்களுடன் லைத் வெளியேற ஒரு முனையில் நிலைத்து நின்று இங்கிலாந்தை பலப்படுத்தினார் குக். ஆனால் மத்தியவரிசை வீரர்கள் சீட்டுக்கட்டைப்போல் சரிந்து ஓடினர். 47-0 என்ற நிலைமையில் இருந்த இங்கிலாந்து 67-4 என்றானது. குக் ஆட்ட மிழந்ததும் பட்லர் சிறிது நேரம் நிலைத்துநின்றார் அரைச்சதத்தை பட்லர் பதிவு செய்தாலும் அணியில் உள்ள மற்றைய வீரர்கள் நிலைக்க வேண்டுமே. எவரும் நிலைப்பதாக இல்லை. முடிவில் இங்கிலாந்து 255 ஓட்டங்களில் சுருண்டு 199 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஆட்டநாயகனாக வட்லிங்கும் தொடராட்ட நாயகனாக போல்ட் மற்றும் குக் இருவரும் தெரிவானார்கள். (ரி)

## சாஸ்திரியின் பயிற்சியில் இந்தியா மேலும் வலுப்பெறும்



இந்தியா எதிர் பங்களாதேஷ் தொடருக்கான இந்திய அணியின் இயக்குநராகவும் இடைக்காலப் பயிற்றுவிப்பாளராகவும் ரவிசாஸ்திரி நீடிப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. கிரிக்கெட் சபையின் இந்த முடிவு, வீரர்களின் தன்னம்பிக்கையை வெகுவாக அதிகரித்துள்ளது என்று டெஸ்ட் அணித்தலைவர் விராட் ஹோக்லி தெரிவித்துள்ளார்.

சாஸ்திரியின் பதவி நீடிப்பு தொடர்பாக ஹோக்லி தெரிவித்ததாவது வீரர்களுடன் மிகவும் நெருங்கிப் பழகக்கூடியவர் ரவி சாஸ்திரி. இந்திய அணியின் இயக்குநராக அவர் பதவியேற்றதில் இருந்து இந்திய அணியில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதுடன் வீரர்களிடத்தில் ஒற்றுமையும் மேம்பட்டுள்ளது. எனவே தொடர்ந்தும் அவர் எம்முடன் இணைந்திருக்கப் போகிற காரணத்தினால் இந்திய அணி மேலும் வலுப்பெறும். டெஸ்டில் டோனியை இழந்தது மிகவும் வருத்தமளிக்கிறது. ஆனால் இது இயற்கையின் நியதி. நானும் ஒரு நாள் ஓய்வினை அறிவிக்கத்தான் வேண்டும்- என்றார். (ரி)

## கிரிக்கெட் உறவை முடித்துக்கொள்கிறார் டேவிஸ்

ஆஸ்திரேலியாவை சேர்ந்தவர் ஐ.சி.சி. நடுவர் ஸ்டீவ் டேவிஸ். 63 வயதான இவர் நியூஸிலாந்து – இங்கிலாந்து தொடருடன் நடுவர் பொறுப்பில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். மிகவும் கனத்த இதயத்துடன் இந்த முடிவை எடுத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்டீவ் டேவிஸ் 25 ஆண்டு காலம் நடுவராகப் பணியாற்றி உள்ளார். 2002ஆம் ஆண்டு ஐ.சி.சி. நடுவரானார். 2008ஆம் ஆண்டு முதல் தர நடுவர் பட்டியலில் இடம் பிடித்தார். 2007ஆம், 2011ஆம், 2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடர்களிலும் ஐந்து ரி-20 உலகக்கிண்ணதொடர்களிலும் மற்றும் இரண்டு சம்பியன்ஸ் கிண்ணத் தொடர்களிலும் நடுவராக பணியாற்றியுள்ளார். 57 டெஸ்ட், 135 ஒருநாள் ஆட்டங்கள் மற்றும் 26 ரி-20 ஆட்டங்களில் நடுவராக இருந்துள்ளார். (ரி)





## 13 கோடிகள் பெறுமதியுள்ள நடாலின் கடிகாரம்

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் நடால், கைக்கடிகாரம் அணிந்தபடி விளையாடி வருகிறார். இது விளையாட்டு வீரர்களுக்கு என்று அதிநவீன தொழில்நுட்பத்துடன் பிரத்யேகமாக தயாரிக்கப்பட்டதாகும். தங்கம் உள்ளிட்ட விலை உயர்ந்த பொருட்கள் எதுவும் இந்த கைக் கடிகாரத்தில் கிடையாது. இதன் எடை வெறும் 20 கிராம்தான். ஆனால் இந்த கைக்கடிகாரத்தின் விலையை கேட்டால் பலருக்கு மயக்கமே வந்து விடலாம். இதன் விலை இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 13 கோடியாகும். சுவிற்சர்லாந்தில் தயாரிக்கப்பட்ட இந்தக் கடிகாரம் கையில் அணிந்திருப்பதை உணர முடியாத அளவுக்கு மென்மையானது. சொல்லப்போனால் தோலின் ஒரு பகுதியாகவே தோன்றும் என்கிறார்நடால். (ரி)

## இந்தியா – பங்களாதேஷ் தொடரில் மறுபரிசீலனை முறைமை இல்லை

இந்தியா – பங்களாதேஷ் தொடரில் நடுவர் முடிவை மறு பரிசீலனை செய்யும் முறைமை பயன்படுத்தப் படமாட்டாது என்று பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மீள்பரிசீலனை முறைமை தொடர்பாக பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் தெரிவித்ததாவது:- இந்தியா – பங்களாதேஷ் மோதும் தொடர்களில் நடுவர் முடிவை மறுபரிசீலனை செய்யக்கோரும் முறை பயன்படுத்தப்படாது. பொதுவாக இந்திய அணி தான் விளையாடும் தொடர்களில் மீள் பரிசீலனை முறைமையை ஏற்றுக்கொள்வதில்லை. அதற்கேற்ப இந்தத் தொடரிலும் அந்த முறைமையை இந்திய அணியின் விருப்பத்துக்கு ஏற்ப இல்லாது செய்துள்ளோம் என்றார். (ரி)

## ஆரோனும் யாதவ்வும் அச்சுறுத்தக்கூடியவர்கள்

இந்திய அணியின் இளம் வேகப் பந்துவீச்சாளர் வருண் ஆரோன் தொடர்ந்து புறக்கணிக்கப்படுகின்றமை ஏமாற்றமளிப்பதாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத் தெரிவித்துள்ளார்.

வருண் ஆரோனின் பந்து வீச்சும் அவரது புறக்கணிப்பும் தொடர்பாக மெக்ராத் மேலும் தெரிவித்ததாவது இந்திய அணியில் ஆரோன் சேர்க்கப்படாமை ஏமாற்றமளிக்கிறது. அவர் மிக வேகமாக பந்துவீசுவ தோடு, துல்லியமாக திரும்பக்கூடிய பந்துகளை மிக அற்புதமாக வீசுகிறார்.



வருண் ஆரோன், உமேஷ் யாதவ் ஆகியோர் 150 கி.மீ. வேகத்துக்கும் அதிகமாக பந்துவீசுவதால் அவர்கள் இருவரும் எப்போதும் அணியில் இருக்க வேண்டும். தொடர்ச்சியாக வேகமாக பந்து வீசும்போது எதிரணிக்கு இழப்பை ஏற்படுத்த முடியும். இந்த இரு வீரர்களும் இந்திய அணியில் நீண்ட காலம் நிலைத்துநின்று செயற்படுவார்கள். எதிரணியை அச்சுறுத்துவார்கள் என்றார். (ரி)

## இங்கிலாந்தின் வீரர்களுக்கு கட்டாய ஓய்வு ஆஷஸ் தொடரில் கூடுதல் கவனத்துக்காக

நியூஸிலாந்து – இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் இங்கிலாந்து அணியிலிருந்து அண்டர்சன், பெல், புரோட் ஆகியோருக்கு கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

5 ஒருநாள் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டம் எதிர்வரும் ஒன்பதாம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இங்கிலாந்து அணியிலிருந்து சிரேஷ்ட வீரர்களான அண்டர்சன், பெல், புரோட் ஆகியோர் கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டு நீக்கப்பட்டுள்ளனர். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரில் கவனம் செலுத்துவதற்காகவே இந்த முடிவை இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது. (ரி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஒரு வெண்கலம் தவறியது மற்றொரு வெண்கலம்

21ஆவது ஆசிய மெய்வல்லுனர் போட்டிகளின் முதலாம்நாள் முடிவில் இலங்கைக்கு ஒரு வெண்கலப்பதக்கம் கிடைத்துள்ளது.

21ஆவது ஆசிய மெய்வல்லுனர் போட்டிகள் தற்பொழுது சீனாவில் நடைபெற்று வரும்நிலையில் நேற்றைய முதலாம்நாள் மாலை வேளை போட்டிகளில் ஒன்றாக நடைபெற்ற பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் 374ஆம் இலக்கத்துடன் இலங்கை சார்பாக கலந்து கொண்ட ரொமே-ஶ்ரீ முதியான்சலாகே என்ற வீராங்கனையே இலங்கைக்கு மூன்றாம் இடத்தைக் கைப்பற்றி இந்த வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்தார். தவிர தங்கப்பதக்கத்தை ஜப்பானைச் சேர்ந்த பக்ஷிமா சி-ஜுரோ கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் கலிங்க கிவகுமாரகே 38 செக்கன்கள் வித்தியாசத்தில் மூன்றாம் இடத்திலிருந்து நான்காம் இடத்துக்கு பின்தங்கி வெண்கலப் பதக்கத்தைத் தவறவிட்டார். (ரி)

## 128 இலங்கை வீரர்களுக்கு தடை







இலங்கையில் நடத்தப்பட்ட பந்து வீச்சு சோதனையில், விதிமுறைகளுக்கு புறம்பாக பந்துவீசியதாக அடையாளம் காணப்பட்ட 128 பந்துவீச்சாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.சி.சி.க்கும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தப்படி, விதிகளுக்கு மாறாக பந்துவீசுபவர்களை உள்ளூரிலேயே அடையாளம் காணும் பணி நடைபெற்றது.

கடந்த 2014-15 ஆண்டுகளில் இலங்கை உள்ளூர் கிரிக்கெட்டில் பந்துவீசிய 170 பந்துவீச்சாளர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டு அவர்களது பந்துவீச்சு பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது. இதில் 42 பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சு முறை சரியாக இருந்ததால் அவர்கள் தடையில் இருந்து தப்பினர். விதிகளுக்கு முரணாக பந்துவீசிய 128 பந்துவீச்சாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டது. (ரி)

## சிறந்த வீரராக சச்சின் தெரிவு செய்தார் கிளார்க்

தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்வில் தன்னுடன் விளையாடிய 5 மிகப் பெரிய கிரிக்கெட் வீரர்கள் பட்டியலில் சச்சின் டெண்டுல்கர் பெயரை சேர்த்துள்ளார் மைக்கேல் கிளார்க். ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியின் தலைவரான மைக்கல் கிளார்க் தனது காலத்தில் மிகச்சிறந்த வீரர்களாக செயற்பட்ட 5 வீரர்களின் பெயர்களை வெளியிட்டார். இதில் சச்சின் டெண்டுல்கரை முதலாவதாக குறிப்பிட்டுள்ளார். சச்சினைத் தவிர ஷேன் வோர்ன், கிளென் மெக்ரா, கலிஸ், மற்றும் மே.இ.தீவுகளின் பிரையன் லாரா ஆகியோரும் இடம்பிடித்துள்ளனர்.

தான் எதிர்கொண்ட அதிவேகப் பந்து வீச்சாளர் யார் என்ற கேள்விக்கு பாகிஸ்தானின் அக்தர் பெயரைக் குறிப்பிட்ட மைக்கேல் கிளார்க் தான் எதிர்கொண்ட சிறந்த பந்து வீச்சாளராக இங்கிலாந்தின் ஆண்ரூ பிளிண்டொப் பெயரைக் குறிப்பிட்டார். (ரி)

## பிரான்ஸ் ரென்னிஸ் தொடர் மகளிர் பிரிவில் இவானோவிச், சபரோவா அரையிறுதியில்

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவின் அரையிறுதியில் விளையாட அனா இவானோவிச் மற்றும் லூசி சபரோவா இருவரும் தகுதிபெற்றுள்ளனர்.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான பிரான்ஸ் ரென்னிஸ் தொடர் தற்பொழுது பிரான்ஸின் தலைநகர் பரிஸில் நடைபெற்றுவருகிறது. இந்தத் தொடரின் காலிறுதி ஆட்டங்களில் முதலாவது காலிறுதியில் சேர்பியாவின் வீராங்கனையான அனா இவானோவிச்சை எதிர்த்து உக்ரைனின் எலினா ஸ்விடோலினா மோதினார். இந்த ஆட்டத்தில் இவானோவிச் 6-3 6-3, 6-2 என்ற நேர் செற்களில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதியில் ஸ்பெயின் வீராங்கனை கார்பைன் முகுருசாவை செக்குடியரசின் லூசி சபரோவா எதிர்கொண்டார். சமநிலைத் தவிர்ப்பு நிமிடம்வரை நீடித்து மிகவும் விறுவிறுப்பாக அமைந்த முதல் செற்றில் சபரோவா 7-6 என்று போராடி வென்று முன்னிலை பெற்றார். இரண்டாவது செற்றில் முகுருசாவின் எதிர்ப்பு பலவீனமடைய, எளிதாக புள்ளிகளைப் பெற்று இவானோவிச் 6-3 என்ற அடிப்படையில் இரண்டாவது செற்றையும் கைப்பற்றி அரையிறுதிக்கு தகுதிபெற்றார். (ரி)



## மிஷ்பாவின் கார் பறிமுதல்

பாகிஸ்தான் அணிக்கு நீண்ட காலமாக தலைவராக பணியாற்றியவர் மிஸ்பா. இவர் தனது விலை உயர்ந்த காருக்கு வரி செலுத்தாமல் காலம் கடத்தி வந்தார். இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 11 லட்சம் வரி செலுத்தாததால் மிஸ்பாவின் விலை உயர்ந்த காரை அந்நாட்டு வருவாய்த் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். (ரி)

## பதவிப் பிரியர் பதவி விலகினார்
## உதைபந்தாட்ட அரங்கில் மீண்டும் ஒரு அதிர்ச்சியலை



சர்வதேச கால்பந்து சம்மேளன தலைவராக ஐந்தாவது முறையாக தெரிவுசெய்யப்பட்ட செப் பிளாட்டர், பதவி ஏற்ற ஐந்தாவது நாளிலேயே நேற்றுமுன்தினம் தனது பதவியை விட்டு விலகுவதாக அறிவித் துள்ளார்.

கடந்த 20 ஆண்டுகளாக நடந்த சர்வதேச கால்பந்து தொடர்களில் பல கோடிக்கு ஊழல் நடந்திருப்பதாக அமெரிக்கா குற்றம்சாட்டியது. இது தொடர்பாக, பிபா துணைத் தலைவர் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டனர். கால்பந்து உலகையே அதிர்ச்சிக்குள்ளாகிய இந்தச் சம்பவத்தை தொடர்ந்து அடுத்த சில தினங்களில் சர்வதேச கால்பந்து சம்மேளன தலைவருக்கான தேர்தல் நடந்தது.

ஐந்தாவது முறையாக போட்டியிட்ட செப் பிளாட்டருக்கு எதிராக இங்கிலாந்து பிரதமர் கமரூன், ரென்னிஸ் பிரபலம் நடால் என்று பெரும்பாலானோர் போர்க்கொடி தூக்கினர். இந்த எதிர்ப்புக்களுடன் ஊழல் குற்றச்சாட்டுகளும் இணைய பிளாட்டர் தோல்வியடைவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், எதிர் வேட்பாளர் ஜோர்டான் இளவரசர் அலி பின் அல் ஹுசேன் திடீரென விலகியதால், பிளாட்டர் தலைவராக தெரிவு செய்யப்பட் டார்.

இந்த நிலையில், பிளாட்டர் பதவியேற்று ஐந்தாவது நாளான நேற்று திடீரென தனது பதவியை ராஜினாமா செய்தார். இதனால் சர்வதேச கால்பந்து சம்மேளன தலைவருக்கான தேர்தல் விரைவில் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிளாட்டர் பதவி விலகும்பொழுது கால்பந்து அமைப்புக்கு எதிராக அமெரிக்க நீதித்துறை செயல்பட்ட விதம் அதிர்ச்சியாக உள்ளது. ஐரோப்பிய கால்பந்து சங்கத் தலைவர்களும் எனக்கு எதிராக செயற்பட்டனர். இவர்களை மன்னித்து விடுவேன். ஆனால் மறக்க மாட்டேன். 2022 உலகக்கிண்ண கால்பந்து தொடரை நடத்தும் உரிமத்தை அமெரிக்கா கேட்டிருந்த நிலையில் சர்வதேச கால்பந்து சம்மேளனம் உரிமத்தை கட்டாருக்கு கொடுத்தது. இதற்குப் பழிவாங்குவதுக்காகவே அமெரிக்கா இவ்வாறான ஒரு ஊழல் குற்றச்சாட்டை சர்வதேச கால்பந்து சம்மேளனத்துக்கு எதிராக முன்வைத்துள்ளது என்று தெரிவித்தார். பிளாட்டரின் பதவி விலகலையடுத்து சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் பதவிக்காக கடும்போட்டி நிலவுகிறது என்று தெரிகிறது. (ரி)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**வேலையாள்கள் தேவை**

கடை ஒன்றுக்கு பொதிகட்டுபவர், பொதி சுமப்பவர், விற்பனையாளர் ஆகியோர் தேவை.
தொடர்பு: தேனுகனந்சிரம்
இல : 29, நல்லசந்தை, திருநெல்வேலி.
021 492 1259, 021 492 1185

**G.C.E.O/L - English**

இவ் வருடம் G.C.E.O/L ஆங்கில பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான Past paper class ஆரம்பம்.
புதிய பிரிவு
தொடர்புகளுக்கு
Student Success Centre
320 A ½ Main Street, Jaffna
077 616 9470

**வேலை வாய்ப்பு**

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் ஆளணியினர் தேவை.
01. பாதுகாப்பு உத்தியோகத்தர்
02. சுத்திகரிப்புத் தொழிலாளர்
ஆண்கள்மட்டும்
வயது - 45 வயதுக்கு கீழ், வேலை நேரம் இரவு/பகல் ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு இன்று (04/06/2015) வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல் பி.ப. 3.00 மணி வரை நேரில் வரவும்.
உதயன் விருந்தினர் விடுதி,
இல. 392/6, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org